Thursday, December 10, 2020

இல்லுமினாட்டி 80



எர்னெஸ்டோ திடீர் என்று தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அக்‌ஷயிடம் கேட்டார். “அக்‌ஷய் நீ சொல்கிறாய். விஸ்வம் குறைந்த அளவு சக்தி தான் செலவு செய்கிறான் என்று. ஆனால் அவன் உன்னைப் பற்றியும், உன்னை நாங்கள் அழைத்தது பற்றியும், நீ இங்கே வருவதைப் பற்றியுமெல்லாம் அவன் தெரிந்து கொண்டதைப் பற்றி நீ என்ன சொல்கிறாய்? அவன் எங்களில் யாரையாவது ஆக்கிரமிக்காமல் எப்படித் தெரிந்து கொண்டிருப்பான்? அதற்கெல்லாம் அவனுக்கு நிறைய சக்தி செலவாகி இருக்காதா?”

அக்‌ஷய் சொன்னான். “நீங்கள் காண்பித்த ரிப்போர்ட்கள் உண்மையாக இருந்தால் இதையெல்லாம் கூடத் தெரிந்து கொள்ளும் அளவு சக்தியை இத்தனை சீக்கிரம் விஸ்வத்தால் அந்த உடம்பில் கண்டிப்பாக மீட்டிருக்க முடியாது. ஏனென்றால் சக்தியால் அறிந்து கொள்ள அவன் முன்பே சந்தித்துப் பழகியிருக்கிற உங்களில் யார் மூலமாவது தான் தெரிந்து கொள்ள முடியும். உங்களில் யாரும் அவனை வரவேற்கிற மனநிலையிலோ, பலவீனமான நிலையிலோ இருந்தால் ஒழிய உங்களை ஆக்கிரமித்து அறிய அவன் பல மடங்கு சக்தி பிரயோகப்படுத்த வேண்டியிருக்கும். அப்படி ஆக்கிரமித்தால் உங்களுக்கும் தெரியாமல் போகாது. அதைக் கண்டிப்பாக பலமாகவே உணர்வீர்கள். அதனால் அவன் யார் மூலமாவது என்னைப் பற்றியும் நான் வருவது பற்றியும் தெரிந்து வைத்திருக்கலாம்...”

அவன் சொன்னதைக் கேட்டு அவர்கள் மூவரும் யோசித்தார்கள். மூவரில் எர்னெஸ்டோ மட்டுமே விஸ்வத்தை நெருக்கமாகப் பார்த்திருப்பவர். அவரிடம் தான் அவன் பேசியும் இருக்கிறான். இம்மானுவல் தூரத்திலிருந்தே அவனைக் கவனித்திருப்பதோடு சரி. அவனை நெருங்கவே இல்லை. ஜான் ஸ்மித்தும் கிட்டத்தட்ட அப்படியே தான். எர்னெஸ்டோவுக்கு தன்னை ஆக்கிரமித்து விஸ்வம் எதையும் அறியவில்லை என்பதில் சந்தேகமேயில்லை.

எர்னெஸ்டோ இம்மானுவலிடம் கேட்டார். “நம் ஆட்கள் யார் மூலமாக தகவல் கசிந்திருக்க வாய்ப்பிருக்கிறதா?”

இம்மானுவல் உடனடியாகச் சொன்னான். “இல்லவே இல்லை”

எர்னெஸ்டோ கேட்டார். “அப்படியானால் அக்‌ஷய் வரும் தகவல் அவனுக்கு எப்படித் தெரிந்திருக்கும்?”

அக்‌ஷய் இம்மானுவலைப் பார்த்துக் கொண்டே சொன்னான். “அவன் கூட்டாளி மூலமாக இருக்கலாம்....”

எர்னெஸ்டோ சொன்னார். “ஏலியனோ, இல்லை அசாதாரண மனிதனோ ம்யூனிக் விமான நிலையத்தில் நமக்குப் பார்க்கக் கிடைத்தும் அவனை நழுவ விட்டு விட்டோமே. அந்த விமான நிலையத்தில் அவன் உள்ளே நுழைவதிலிருந்து கேமிராக்களில் விழுந்திருக்கிறான். அதற்கு முன் அவனை எப்படி யாரும் பார்க்கவில்லை, அவன் எந்தக் கேமிராவிலும் விழவில்லை?”

இம்மானுவல் சொன்னான். “அதுவும் ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. கார் பார்க்கிங் ஏரியாவில் இருக்கும் கேமிராக்களில் எதிலுமே அவன் ஏதாவது காரில் வந்திறங்கியதோ, அங்கு இருந்து மறுபடி ஏறிப் போனதோ பதிவாகவில்லை. ஏதாவது டாக்சியில் வந்திறங்கியிருக்கிறானா என்று விமானநிலையம் வந்து போன டாக்சிக்காரர்களிடம் எல்லாம் விசாரித்து விட்டோம். யாரும் அவனை அழைத்து வரவோ, அங்கிருந்து அழைத்துப் போகவோ இல்லை.”

அக்‌ஷய் சொன்னான். “இதற்கெல்லாம் பதில் அவன் என்னைப் போட்டோ பிடிப்பதற்கு முன்னால் ஏன் அந்தக் கேமிராவைச் செயலிழக்கச் செய்தான் என்பதில் இருக்கும் என்று தோன்றுகிறது. அவன் விமான நிலையத்தில் நிமிர்ந்து பார்த்த ஒரே சமயம் அது தான். மற்ற எல்லா கேமிராக்களிலும் அவன் தலை குனிந்தே இருந்திருக்கிறான். நாம் எதையோ தெரிந்து கொள்வதை அவன் விரும்பவில்லை. அது அந்தக் கேமிராவில் பதிந்து விடும், அதன் மூலம் தெரிந்து கொள்வோம் என்று தான் முன்னெச்சரிக்கையாக அவன் அந்தக் கேமிராவை நிறுத்தியிருக்க வேண்டும். அது என்ன என்று தெரிந்து கொண்டால் அதன் மூலம் அவனைப் பற்றிய முக்கியத் தகவல் தெரிந்து கொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன்”

அவர்களுக்கும் அவன் சொல்வது சரி என்று தோன்றியது. உடனே அவர்கள் பரபரப்பாக யோசிக்க ஆரம்பித்தார்கள்.

சாலமன் முன் ஒரு தடித்த ஃபைல் இருந்தது. அதில் அவர் படித்துப் பார்த்து முக்கியம், முக்கியமில்லாதவை, மேலிடத்திற்குத் தகவல் தெரிவிக்க வேண்டியவை, வேறெதிலாவது சம்பந்தம் இருக்கக்கூடும் என்று அதோடு இணைத்து வைக்க வேண்டியவை என்றெல்லாம் தீர்மானித்து பிரித்து வைக்க வேண்டும். அதில் 90 சதவீதம் முக்கியமில்லாதவையாகவே இருக்கும் என்றாலும் அதைத் தீர்மானிக்கும் முன் அவர் அத்தனையும் படிக்க வேண்டும். அது அவருக்குச் சலிப்பை ஊட்டியது.

முறையாக அவருக்குப் பதவி உயர்வு கிடைத்திருந்தால் இப்போது அவர் இல்லுமினாட்டி உளவுத்துறையின் தலைவராக ஆகியிருப்பார். அவருடைய அதிகாரமும் ஆதிக்கமும் உச்சத்தில் இருந்திருக்கும். பல வருடங்களாக உபதலைவராக இருக்கும் அவரை அப்படியே தொடர்ந்து இருக்க வைத்து விட்டு எர்னெஸ்டோ பின்னால் இருந்த இம்மானுவலைத் தலைவனாக்கி விட்டார். அதை இப்போது நினைத்தாலும் அவருக்கு ஆத்திரமாக வந்தது.

இப்போது நடக்கும் நிகழ்வுகளில் மாற்றங்கள் ஏற்பட்டு, ஏதாவது நல்ல வழி பிறக்கும் என்ற எதிர்பார்ப்பு தான் இப்போது சிறிதளவாவது நம்பிக்கை ஊட்டி வருகிறது. அவருக்கு வாங் வே மீது நம்பிக்கை இருக்கிறது. தலைமைக்குழு உறுப்பினரான வாங் வே இல்லுமினாட்டியின் தலைமைப் பதவிக்குப் பல காலமாகக் குறி வைத்திருக்கிறார். இப்போதிருக்கும் மற்றவர்களை விட அவருக்குத் தலைவராகும் வாய்ப்பும் அதிகம். அப்படி அவர் தலைவரானால் கண்டிப்பாக சாலமன் நிலைமையும் உயரும். ஒரு வேளை விஸ்வம் ஜெயித்து அவன் கை இல்லுமினாட்டியில் ஓங்கினாலும் அவன் இம்மானுவலைச் சகிக்க மாட்டான். இப்போது அவனுக்கு எதிராக இயங்கும் மனிதர்களில் எர்னெஸ்டோவுக்கு அடுத்தபடியாக இருப்பவன் இம்மானுவல் தான். அதனால் அப்படி விஸ்வம் இம்மானுவலை அப்புறப்படுத்தினாலும் அவருக்கு மறுபடி உயர வாய்ப்பு இருக்கிறது....

அதை எல்லாம் எண்ணி சலிப்பை ஒதுக்கித் தள்ளிய சாலமன் அந்த ஃபைலில் இருக்கும் தகவல்களைப் படிக்க ஆரம்பித்தார். அத்தனையும் இல்லுமினாட்டி உறுப்பினர்களின் நடவடிக்கைகள் குறித்த தகவல்கள். இவை தினந்தோறும் சேகரிக்கப்பட்டு அலசப்பட்டு உளவுத்துறையின் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, முக்கியமாக இருந்தால் மேலிடத்திற்கும் தெரிவிக்கப்படும்...

சில உறுப்பினர்களின் சில அந்தரங்க அத்துமீறல்கள், அவர்கள் சந்தித்த அல்லது அவர்களைச் சந்தித்த சந்தேகப்படும்படியான நபர்கள் குறித்த தகவல்கள் இதெல்லாம் பல நாடுகளிலிருந்தும் உளவுத்துறை நபர்கள் அனுப்பி இருந்தார்கள். அவற்றில் பெரும்பாலனவைகளைச் சிவப்புப் பேனாவால் குறுக்கில் கோடிட்டார். அவை முக்கியமல்ல என்று அர்த்தம். மற்றவற்றில் சம்பந்தப்பட்டவர்களின் ஃபைல்களில் தகவலை ஃபைல் செய்யும்படி எழுதினார். சிலவற்றைத் தலைமைக்குழுவின் பார்வைக்கு அனுப்பக் குறித்தார். நேரடியாக இல்லுமினாட்டியின் தலைமைக்கு அனுப்பும் அளவுக்கு முக்கிய விஷயம் எதுவுமிருக்கவில்லை. இருந்திருந்தால் அதை எர்னெஸ்டோ பார்வைக்கு அனுப்பக் குறித்திருப்பார். ஆனால் அதன் ஒரு நகலை ரகசியமாக வாங் வேக்கும் அனுப்பி இருப்பார் என்பது வேறு விஷயம்.

கடைசியாக அவர் படித்த தகவல் அவருக்கு எந்த வகையில் எடுத்துக் கொள்வது என்று குழப்பியது. வாஷிங்டனில் இல்லுமினாட்டியின் முதிய உறுப்பினர் கர்னீலியஸின் கார் ஒரு சிக்னலில் தானாக நின்று விட்டது. எதனால் என்று தெரியவில்லை. உடனடியாக அதைச் சரிசெய்ய போலீஸ் உட்பட சிலர் முயற்சி செய்தனர் என்றும் ஆனால் காரைக் கிளப்ப முடியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. பின் கர்னீலியஸ் வேறு வாகனத்தில் வீடு திரும்பினார் என்றும் அவர் அப்படிப் போன பிறகு அவர் காரை உடனடியாக எடுக்க முடிந்தது என்பதையும் படித்த போது சாலமனின் புருவங்கள் உயர்ந்தன. இப்படி அமானுஷ்யமாகவும், அசாதாரணமாகவும் நடக்கும் போதெல்லாம் அவரால் விஸ்வத்தை நினைவுபடுத்திக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அவனை இணைக்க முடிந்த சம்பவங்களில் அலட்சியமாகவும் சாலமானால் இருக்க முடியவில்லை.

சாலமன் சிறிது நேர யோசனைக்குப் பின் அடுத்த வாரம் வாஷிங்டன் செல்லும் போது கர்னீலியஸைச் சந்தித்துப் பேசிவிட்டு வரலாம் என்று முடிவு செய்தார்.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 81



க்ரிஷ் மூன்று நாட்களாய் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து விடுகிறான். மாஸ்டர் அவனுக்குச் சொல்லித் தந்திருந்த தியானப் பயிற்சிகளை விடாமல் சிரத்தையுடன் செய்கிறான். உணர்வுநிலைகளைக் கூர்மைப்படுத்தி வருகிறான். மனம் லேசாகவும், தெளிவாகிக் கொண்டும் வந்தது. சிந்துவைப் பற்றி அவன் மனதில் எழ ஆரம்பித்திருந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளும் அவசியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. நேற்றைய ஒரு பத்திரிக்கையில் உதயும் சிந்துவும் கைகோர்த்தபடி ஒரு பிரபல உணவகத்திலிருந்து வெளியே வரும் புகைப்படம் வெளியாகியிருந்தது. நிருபர் ஒருவர் "ஏதாவது விசேஷச் செய்தி இருக்கிறதா?" என்று உள்ளர்த்தத்துடன் கேட்டதற்கு உதய் புன்னகையுடன் "விரைவில் தெரிவிக்கிறேன்" என்று சொல்லியிருந்ததும் செய்தியாக வெளியாகியிருந்தது. அது அதற்கடுத்த நாள் மற்ற பத்திரிக்கைகளிலும் வந்திருந்தது. சில தொலைக்காட்சிகளிலும் அந்தச் செய்தி இடம் பிடித்தது. திருமண ஏற்பாடுகளை இரண்டு மாதம் வீட்டில் தள்ளி வைத்தாலும் ஊடகங்களில் செய்திகள் இடம் பெறுவதைத் தடுக்க முடியவில்லை. சிந்துவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவது உறுதி என்பதால் உதயும் அந்தச் செய்திகளைத் தவிர்க்க முயலவில்லை.

இல்லுமினாட்டி அனுப்பிய தகவல்களை க்ரிஷ் வேறு யாருடனும் பகிர்ந்து கொள்ளவில்லை. ஆனால் கிட்டத்தட்ட அதே செய்திகளைத் தமிழக உளவுத் துறையும் சேகரித்து கமலக்கண்ணனிடம் தந்தது. அதில் சிந்துவின் தாயார் பற்றிய தகவல் மட்டும் இருக்கவில்லை. அந்தம்மாள் உயிரோடு இருப்பதையும் டெல்லியில் இருக்கும் இரண்டாவது குடும்பம் பற்றியும் அவர்கள் கண்டுபிடித்திருக்கவில்லை. மற்றபடி சிந்துவின் தந்தை, சித்தி, தங்கை பற்றி எல்லாம் தகவல்கள் சேர்த்திருந்தார்கள். தனக்கு வந்த ரிப்போர்ட்டை இளைய மகனிடம் கமலக்கண்ணன் காட்டினார். அவருக்கு அந்த ரிப்போர்ட்டில் எதுவும் சந்தேகத்திற்கு இடமாக இருப்பது போல் தெரியவில்லை. எதற்கும் க்ரிஷும் ஒரு முறை பார்க்கட்டும் என்று நினைத்துக் காட்டியதை முன்பே அறிந்திருந்த மாதிரி காட்டிக் கொள்ளாமல் படித்துப் பார்த்த க்ரிஷ் அவரிடம் தன் சந்தேகத்தைக் காட்டிக் கொள்ளவில்லை...

உதய் அவன் அறைக்குள் எட்டிப் பார்ப்பது தெரிந்தது. க்ரிஷ் புன்னகையுடன் அண்ணனை வரச்சொன்னான். உதய் உள்ளே நுழைந்த போது தான் அண்ணனிடம் நுட்பமாகத் தெரிந்த சில வித்தியாச அதிர்வலைகளை க்ரிஷ் உணர்ந்தான். உடனே அவற்றை நோக்கி க்ரிஷ் கவனத்தைக் குவித்தான். அந்த அதிர்வலைகள் என்ன என்று ஆராய்ந்தான். அவை வசிய அலைகளாய்த் தெரிந்தன. உடனடியாக க்ரிஷ் சந்தேகப்பட்டது சிந்துவைத் தான். ஆனால் இந்த நுட்பமான வசிய அலைகள் சாதாரண மனிதர்கள் அனுப்ப முடிந்ததல்ல. அனுப்புவதற்கு முன் அந்த மனிதனை மானசீகமாகச் சிறிது நேரமாவது ஆக்கிரமிக்க வேண்டும். பின் அவனில் அந்த வசிய அலைகளைச் செலுத்த வேண்டும். சிந்து அந்த வசிய அலைகளைப் பயன்படுத்தி உதய் மனதில் இடம் பிடித்துப் பின் ஆழமாக வேரூன்றி இருக்கலாம். ஆனால் அவளே அந்த வசிய அலைகளை அனுப்ப முடிந்தவளாக இருக்க வாய்ப்பில்லை. அதற்கு யாரோ உதவியிருக்க வேண்டும்..

"டேய் என்ன ஆச்சு? ஏன் என்னை அப்படிப் பார்க்கிறாய்?" உதய் அவனை உலுக்க க்ரிஷ் அலையுலகில் இருந்து மீண்டான். அவன் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. உதயை வேறு யாரோ ஆக்கிரமித்திருக்கிறார்கள், வசிய அலைகளை அவனுக்குள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்ற தகவலே க்ரிஷுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் அதை வெளிக்காட்டாமல் அண்ணனைப் பார்த்து அசட்டுப் புன்னகை பூத்தான். "ஒன்னுமில்லை. உன் கிட்ட ஏதோ வித்தியாசம் தெரிஞ்சுது. அதான் பார்த்தேன்."

உதய் முகத்தில் சின்னதாய் ஒரு வெட்கம் வந்து போனது. தம்பி அருகில் அமர்ந்தபடி சொன்னான். "காதலிக்க ஆரம்பிச்சாலே கொஞ்சமாவது வித்தியாசம் நமக்குள்ளே தெரிய ஆரம்பிச்சுடும்..."

க்ரிஷ் தன் முந்தைய அதிர்ச்சியை மனதின் ஒரு மூலையில் தள்ளி வைத்து விட்டுக் கிண்டலாகச் சொன்னான். "ஆனால் நீ ஆளே முழுசா மாறின மாதிரி தானே இருக்கு. எப்ப பாரு செல்போன்ல சிந்து கிட்டயே பேசிகிட்டு இருக்கறதா அம்மாவே சொல்றாங்க. பேசிகிட்டிருக்கிறப்ப சாப்பிட ஏதாவது பக்கத்துல வெச்சுட்டு வந்தாலும் நீ அதைக்கூட சாப்பிட மறந்துடறயாம்"

உதய் சொன்னான். "கிழவி வாய் சும்மாவே இருக்காது. என்னைப் பத்தி யார் கிட்டயாவது ஏதாவது சொல்லிகிட்டே இருக்கு. அதை விடு. நாளைக்கு சிந்து காலைலயே நம்ம வீட்டுக்கு வர்றா. சாயங்காலம் வரை இருப்பா. சாயங்காலம் நாங்கள் ஒரு சினிமாவுக்குப் போகப் போகிறோம். அதனால ஹரிணியையும் காலைலயே வரச் சொல்"

அப்போது தான் மறு நாள் ஞாயிற்றுக்கிழமை என்பது க்ரிஷுக்கு நினைவு வந்தது. க்ரிஷ் தலையசைத்தான்.

உதய் தம்பியிடம் சொன்னான். "கிழவி உன்னைப் பத்தியும் என் கிட்ட கவலையாச் சொல்லுச்சு. மூணு மூணரை மணிக்கு எல்லாம் முழிச்சிகிட்டு தியானம் பண்றியாம். உனக்குக் கல்யாணம் சீக்கிரம் செய்யலைன்னா நீ சன்னியாசி ஆகறது உறுதின்னு பயப்படுது."

க்ரிஷ் சிரித்துக் கொண்டே சொன்னான். "அப்படியெல்லாம் சன்னியாசி ஆக மாட்டேன். கவலைப்பட வேண்டாம்னு அம்மா கிட்ட சொல்லு."

உதய் சந்தேகத்துடன் கேட்டான். "நீ இப்ப அந்தப் பழைய பயிற்சி எல்லாம் செய்ய ஆரம்பிக்கக் காரணம் விஸ்வமா?"

க்ரிஷ் சொன்னான். "பாதி அவன். மீதி நான் இப்ப ஒரு ஆராய்ச்சியில் இறங்கி இருக்கிறேன். அதற்கு தியானம் அவசியம் தேவைப்படுது. உன் கிட்ட கேட்கணும்னு நினைச்சேன். நீ கொஞ்ச நாளுக்கு முன்னாடி, அதாவது சிந்துவையும் சந்திக்கறதுக்கு முன்னாடி, உனக்கு எதாவது அமானுஷ்யமான அனுபவம் ஏதாவது கிடைச்சுதா?"

உதய் சிறிது யோசனை செய்து விட்டுக் கேட்டான். "நீ எந்த மாதிரி அனுபவம் பத்தி கேட்கிறாய்?"

"உனக்குள் ஏதோ புகுந்த மாதிரி அல்லது உன்னை ஏதோ ஒரு சக்தி ஆக்கிரமிக்கிற மாதிரி..."

உதய் ஒரு கணம் திகைப்புடன் அவனைப் பார்த்து விட்டுச் சொன்னான். "அடப்பாவி நீ தானா அது? ஏண்டா இந்த மாதிரி ஆராய்ச்சி எல்லாம் பண்றப்ப முன்கூட்டியே சொல்ல மாட்டாயா? ஒரு நாள் அதிகாலைல ஏதோ ஒன்னு எனக்குள்ள புகுந்துட்ட மாதிரி தோணுச்சு. என்னால அசைய முடியலை. உள்ளுக்குள்ளே என்னென்னவோ ஆகுது. அது என்னன்னும் சொல்ல முடியலை. நான் பயந்தே போயிட்டேன். எல்லாம் கால் மணி நேரம் தான். அதற்கப்புறம் சரியாயிடுச்சு. பழையபடி நார்மலாயிட்டேன்... சில பேர் 'அமுக்கான்'னு சொல்வாங்க தெரியுமா. அசைய முடியாமல் ஏதோ ஒரு சக்தி கட்டிப் போட்ட மாதிரி உணர்வோமே. நான் அதுன்னு நினைச்சுகிட்டேன்"

க்ரிஷ் ஒன்றும் சொல்லவில்லை. அவன் தான் அப்படிச் செய்தான் என்று உதய் நினைத்ததை அவன் மாற்ற விரும்பவில்லை. என்ன நடந்திருக்கிறது என்று அவனே சரியாக அறியும் முன் உதயைப் பயமுறுத்த விரும்பாமல் வெறும் புன்னகை மட்டும் பூத்தான்.

உதய் சிறிது நேரம் சிந்து புராணம் பாடி விட்டுப் போனான். அவன் போகும் வரை அமைதியாக இருந்த க்ரிஷ் அவன் போன பிறகு தீவிரமாக என்ன நடந்திருக்கும் என்று ஆலோசித்தான். இது போன்ற நேரத்தில் மாஸ்டர் இருந்திருந்தால் நன்றாக இருக்கும் என்று மறுபடியும் அவனுக்குத் தோன்றியது.

திடீரென்று மாஸ்டர் முன்பொரு முறை அவருக்கும், அவருடைய குருவுக்கும் இடையே மானசீகத் தொடர்பு இருந்தது என்றும் எத்தனை தொலைவில் இருந்தாலும் இருவரும் தங்களுக்குள் தகவல்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார்கள் என்றும் சொல்லியிருந்தது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

மாஸ்டர் இமயமலைக் குகையில் இப்போதும் தவம் செய்து கொண்டு இருக்கிறார். தவத்தின் போது உணர்வுகள் உச்சத்தில் இருக்கும். ஏன் அவரைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்யக்கூடாது?

இந்த எண்ணம் தோன்றியவுடன் க்ரிஷ் தன் மனக்கண்ணில் மாஸ்டரைக் கொண்டு வந்தான். மானசீகமாக அவரை வணங்கி அவரையே நேரில் பார்ப்பது போல் பாவித்துக் கொண்டான். சிறிது நேரத்தில் அவன் எண்ணமெல்லாம் அவர் நிறைந்தார். அருகேயே அவர் இருப்பது போல அவன் உணர்ந்தது நிஜம் போலவே தோன்றியது. அவருடைய அன்பான பார்வையில் அவன் திளைத்தான். அதுவும் நிஜம் போலவே தோன்றியது. சிறிது நேரத்தில் சுற்றுச் சூழலை மறந்து மனம் மிக லேசாகியது. மாஸ்டர் அவனைப் பார்த்துப் புன்னகைப்பதாய் உணர்ந்தான். கண்கள் நிறைய க்ரிஷ் அங்கேயே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். மாஸ்டரின் விரல்கள் அவன் தலை மேல் படுவது போல் ஒரு உணர்வு. எழுந்து நின்ற போது அவர் பார்வை என்ன என்று கேட்டதாய் அவனுக்குத் தோன்றியது.

அவன் உதயிடம் உணர்ந்த வசிய அலைகளை நினைவுபடுத்திக் கொண்டே அவரைப் பார்த்தான். அந்த வசிய அலைகளின் மூலம் எங்கே என்று அவரிடம் மானசீகமாகக் கேட்டான்.

அவர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்த வசிய அலைகளைப் பற்றித் தெரிவிப்பதில் அவனுடைய திறமை போதவில்லையோ என்று எண்ணிய க்ரிஷ் மறுபடி அந்த வசிய அலைகளைத் தீவிரமாக நினைவுகூர்ந்தான். திடீரென்று அந்த வசிய அலைகள் மறைந்து விஸ்வம் தெரிந்து பின் அவனும் மறைந்தான். முன்பே சந்தேகம் இருந்தாலும் மாஸ்டரும் விஸ்வத்தையே அடையாளம் காட்டியது அதிர்ச்சியாகத் தான் இருந்தது.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 82



அடைந்த அதிர்ச்சி க்ரிஷின் மனதைக் கனக்க வைத்து, அவன் தியானப் பயிற்சிகளின் மூலம் அடைந்திருந்த உயர் உணர்வு நிலையில் இருந்து கீழே தள்ளியது. மனக்கண்ணில் தெரிந்து வந்த மாஸ்டர் மறைந்து போனார். இயல்பு நிலைக்கு வர க்ரிஷுக்கு நிறைய நேரம் தேவைப்பட்டது. விஸ்வம் உதயை ஆக்கிரமித்து வசிய அலைகளை ஏற்படுத்தி சிந்துவை அவனிடம் அனுப்பி வைத்திருக்க வேண்டும் என்பது புரிந்தது. அதனால் தான் அவளைப் பார்த்த முதல் கணத்திலேயே க்ரிஷ் ஆபத்தை உணர்ந்திருந்தான். இனி என்ன செய்வது என்று க்ரிஷ் ஆலோசித்தான். ஒரு இல்லுமினாட்டியாகவும், புத்திசாலியாகவும் அவன் செய்ய வேண்டிய ஒரே வேலை இல்லுமினாட்டிக்கு அவன் அறிந்ததைத் தெரியப்படுத்துவது தான். அவர்கள் சிந்துவை தங்கள் பாணியில் கையாண்டு அவளிடமிருந்து அறிய வேண்டியதை அறிந்து கடைசியில் அவள் கதையை முடித்து விடுவார்கள். ஆனால் அதோடு சேர்ந்து உதய் மனதில் வேகமாக உருவாக்கி விட்டிருக்கும் காதல் கோட்டையும் தவிடுபொடியாகும். அவன் அதிலிருந்து மீள்வானா என்பது சந்தேகமே! அவனிடம் சிந்து விஸ்வம் அனுப்பிய ஆள் என்று சொன்னால் அவனால் நம்ப முடியுமா, நம்பினாலும் தாங்க முடியுமா என்பது எல்லாம் கேள்விக்குறிகளே.

ஆனால் இந்த அதிர்ச்சி தரும் உண்மையை அறிந்து கொண்ட பின் எதாவது செய்தாக வேண்டிய நிலையில் க்ரிஷ் இருந்தான். மனதை அமைதிப்படுத்திக் கொண்டு ஆழமாக யோசித்தான். விஸ்வத்திற்கும் சிந்துவுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும் என்று யோசித்த போது அவன் வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் பெண்ணாகவே அவள் இருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இருக்கவில்லை. விஸ்வம் யாருடனும் சம்பந்தப்பட்டிருக்க விரும்பாத ஆள். இவள் பின்னணியிலும் வேறு வகையில் விஸ்வம் சம்பந்தப்பட்டிருக்க வழியில்லை. வேலையாள் என்றால் விஸ்வம் அவளுக்கு என்ன வேலை கொடுத்தனுப்பி இருக்கிறான் என்ற கேள்வி எழுந்தது. இங்கே வீட்டுக்குள் யாரையும் கொலை செய்வது அவன் உத்தேசமாக இருக்காது. ஏன் என்றால் கொலை செய்வதென்றால் பல திறமையான வாடகைக் கொலையாளிகள் அவனுக்குக் கிடைப்பார்கள். அவனே நேரில் வந்து கொல்ல முடியாத நிலைமையில் அவன் அந்த வாடகைக் கொலையாளி யாராவது ஒருவனைத் தான் அனுப்பி இருப்பான். காதலிக்க வைத்து இந்த வீட்டின் மருமகளாக உள்ளே நுழைந்த பின் அவளை வைத்து அந்த முயற்சி எடுக்கக் காரணம் எதுவும் இல்லை. வீட்டு ஆட்களின் உயிருக்கு ஆபத்தில்லை என்று உறுதியாகத் தெரிந்ததே மனதில் பெரிய நிம்மதியை ஏற்படுத்தியது. பின் எதற்காக சிந்துவை இங்கே அனுப்பி இருக்கிறான் என்பது புரியவில்லை.

இம்மானுவல் அவளுக்கு வந்த இண்டர்நேஷனல் போன்கால் ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது விஸ்வம் அவளை அழைத்துப் பேசியதாக இருக்கலாம். அதற்குப் பின் சில நாட்களில் அவள் சென்னை வந்து விட்டாள். திருமணம் ஆகி இந்தச் சொத்தை அனுபவிப்பது என்பது அவளுடைய உத்தேசமாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் விஸ்வத்திற்கு அதில் லாபம் எதுவும் இல்லை. அவனிடம் இருக்கக்கூடும் என்று இல்லுமினாட்டி கணித்திருக்கும் பல்லாயிரம் கோடிகளை வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் கமலக்கண்ணனும், உதயும் சேர்ந்து சேர்த்து வைத்திருப்பது வெறும் கிளிஞ்சல்கள் அளவிலானதாகத் தான் இருக்கும். கொலையும் அல்ல, பணமும் உத்தேசம் அல்ல என்றால் வேறு என்ன உத்தேசம் இருக்கும் என்று க்ரிஷுக்குப் புரியவில்லை.

சிந்து விஸ்வத்தின் ஆள் என்று தெரிந்த பின் எச்சரிக்கை உணர்வு மேலிட்டதே தவிர அவள் மேல் அப்போதும் க்ரிஷுக்குக் கோபமோ, வெறுப்போ வரவில்லை. காரணம் அவளுடைய வாழ்க்கை வரலாறு அவள் மீது ஏற்படுத்தி இருந்த இரக்கம் இன்னமும் அவன் மனதில் தங்கி இருந்தது. அன்பான குடும்பத்தில் வளர்ந்த அவனுக்கு அவள் அனுபவித்திருப்பது கடும் சித்திரவதையாகவே தோன்றியது. அதுவும் அவள் மேல் குற்றம் ஏதும் இல்லாத நிலையில் அவளுக்குக் கிடைத்திருக்கும் தண்டனை அநியாயமாகவே அவனுக்குப் பட்டது. அவள் அனுபவித்த தனிமை, அன்பின் வரட்சி எல்லாம் அவள் மீது பரிதாபத்தை வரவழைத்தது. அவளுக்கும் விஸ்வத்திற்கும் எப்போது தொடர்பு ஏற்பட்டது, ஏன் அவள் அவன் கொடுத்த வேலைக்கு ஒப்புக் கொண்டாள், அவள் என்ன உத்தேசத்தோடு வந்திருக்கிறாள் என்றெல்லாம் தெரியவில்லை. ஆனால் உதய் அவளை உயிருக்குயிராய் நேசிக்க ஆரம்பித்திருக்கிறான் என்ற உண்மை அவனை வேதனையில் ஆழ்த்தியது. அவன் தாயும் அவளை மானசீகமாக மருமகளாக ஏற்றுக் கொண்டு விட்டாள் என்பதும் அந்த வேதனையுடன் சேர்ந்து கொண்டது. இனி அவன் செய்ய வேண்டியதென்ன என்று க்ரிஷ் தீவிரமாகச் சிந்தித்தும் அவனால் உறுதியான ஒரு முடிவை எட்டவில்லை. அறிவொன்று சொன்னது. இதயம் வேறொன்று சொன்னது. இரண்டும் சேர்ந்து ஒருமித்து இயங்கும் உன்னத நிலை மனிதன் அடைய வேண்டிய நிலை என்று வேற்றுக்கிரகவாசி சொன்னது நினைவுக்கு வந்தது. உடனே அவன் நினைவும் வந்தது. 'நண்பா எங்கிருக்கிறாய்? எப்போது வருவாய்?' என்று அவன் மனம் கூவியது....

கர்னீலியஸ் சாமுவலின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார். சாமுவல் ஏன் வருகிறார் என்று அவருக்குத் தெரியவில்லை. இன்று காலை தான் சாமுவல் அவரைச் சந்திக்க வருவதாக அவருக்குப் போன் செய்திருந்தார். ரகசியச் சுவடி விஷயம் இல்லுமினாட்டி தலைமைக்குப் போய், இல்லுமினாட்டி தலைமை தான் அவரை இங்கே அனுப்பியிருக்கிறதா என்று அவருக்குச் சந்தேகமாக இருந்தது. அவர் இல்லுமினாட்டியின் உளவுத் துறையின் உபதலைவரான சாமுவலைப் பல வருடங்களாக அறிவார். மிகவும் கண்ணியமான மனிதர்... அவர் வந்து கேட்டால் உள்ளதை உள்ளபடி சொல்லலாமா வேண்டாமா என்று கர்னீலியஸ் யோசித்தார். சொல்ல அதிகம் இல்லை. இரண்டு நாட்கள் முன்பு நினைவுபடுத்த முடிந்த ரகசிய ஆவணத்தின் குறிப்பிட்ட முக்கியப்பக்கம் இப்போதும் தடைப்பட்ட நிலையிலேயே அவர் நினைவில் இருந்தது. நேற்றும் இன்றும் அவர் செய்த பயிற்சிகளில் எந்த முன்னேற்றமும் இல்லை. ஆனால் சாமுவலிடம் உண்மையைச் சொன்னால் வங்கி லாக்கரில் இருக்கும் ரகசிய ஆவணத்தை எடுப்பதற்கு இல்லுமினாட்டி ஒரு படையையே அவருடன் அனுப்பி வைக்கவும் கூடும். ஆனாலும் அதில் முடிவெடுக்க அவருக்குத் தயக்கமாக இருந்தது. சாமுவல் வந்த பின் யோசித்து நிலைமைக்குத் தகுந்தபடி முடிவு செய்யலாம் என்று கர்னீலியஸ் நினைத்துக் கொண்டார். அழைப்பு மணி அடித்தது. வந்தது சாமுவல் தான்.

கர்னீலியஸ் அவரை வரவேற்றார். மிகுந்த மரியாதையுடன் அவரை வணங்கி நலம் விசாரித்த சாமுவல் சிறிது நேர பேச்சுக்குப் பின் சில நாட்களுக்கு முன் சிக்னலில் அவர் கார் நின்று போனது பற்றி விசாரித்தார். கர்னீலியஸுக்கு அப்போது தான் அந்த விஷயமாக அவர் வந்திருக்கிறார் என்பது புரிந்தது.

“ஆமாம். பேங்க் போவதற்காகத் தான் கிளம்பியிருந்தேன். ஆனால் சிக்னலில் வண்டி அப்படியே நின்று விட்டது. எத்தனையோ முயற்சி செய்தும் அதைக் கிளப்ப முடியவில்லை. திரும்பி வந்து விட்டேன். அப்புறமாகக் கிளப்பிய போது அது உடனே ஸ்டார்ட் ஆகி விட்டது என்று சொன்னார்கள். ஒன்றும் புரியவில்லை”

சாமுவல் காலம் தாழ்த்தாமல் விஷயத்திற்கு வந்தார். “இல்லுமினாட்டியில் சமீப காலமாக ஏதேதோ அதிசயங்கள் நடக்கின்றன. உங்களுடைய இந்த நிகழ்வு கூட அது போல ஒன்றோ என்று சந்தேகம் எங்களுக்கு வந்தது. எதற்கும் உங்களிடம் நேரடியாகப் பேசித் தெரிந்து கொள்வோம் என்று தான் வந்தேன்...”

கர்னீலியஸ் தர்மசங்கடத்தில் ஆழ்ந்தார். ஒரு பக்கம் உண்மையைச் சொல்லி விடலாமா என்று தோன்றியது. இன்னொரு பக்கம் இல்லுமினாட்டியின் தலைமைக்குச் சொல்ல வேண்டிய விஷயத்தை இவரிடம் சொல்வது சரியல்ல என்று அவர் மனம் எச்சரித்தது. அவருடைய தயக்கத்தைப் பார்த்தவுடனேயே இதில் ஏதோ பெரியதாக ஒரு விவகாரம் இருக்கிறது என்பதை சாமுவல் புரிந்து கொண்டார். அவர் கர்னீலியஸைப் பார்த்தபடி பொறுமையாகக் காத்திருந்தார்.

கர்னீலியஸ் யோசித்துக் கொண்டிருந்தார். 'நாமாக இல்லுமினாட்டி தலைமைக்குத் தெரிவிக்கப் போக முடியாது. எர்னெஸ்டோவிடம் அப்பாயின்மெண்ட் வாங்குவதே கஷ்டம். இவராக வந்திருக்கும் போது இல்லுமினாட்டி தலைமையை அணுக இவரைப் பயன்படுத்திக் கொண்டால் என்ன?' என்று தோன்ற, பின் அவர் மெல்லச் சொன்னார். “உண்மையில் இல்லுமினாட்டி தலைமைக்கு இப்போதைய நிலைமை பற்றிய ரகசியத் தகவல் ஒன்றை எனக்குத் தெரிவிக்க வேண்டி இருக்கிறது. அந்தத் தகவல் சம்பந்தமாக நான் போன போது தான் எனக்கு இப்படி நிகழ்ந்தது. இது நம் எதிரியின் சதியா, இல்லை தற்செயலா என்று தெரியவில்லை.”

சாமுவல் உள்ளே பரபரப்படைந்தாலும் வெளியே அதைக் காட்டிக் கொள்ளாமல் அமைதியாகச் சொன்னார். “அந்தத் தகவலைச் சொன்னால் அதை அங்கே தெரிவித்து விடுகிறேன். இல்லா விட்டால் ஒரு மூடிய உறைக்குள் எழுதித் தந்தாலும் அதை அவர்களிடம் சேர்த்து விடுகிறேன்.”

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, December 31, 2020

இல்லுமினாட்டி 83



சிந்து விஷயத்தில் ஒரு முடிவுக்கு வர முடியாத மனக்குழப்பத்தில் இருந்த க்ரிஷ் கடைசியில் மாஸ்டரிடமே ஆலோசனை கேட்பது என்ற முடிவுக்கு வந்தான். சென்ற முறை அவரை மானசீகமாகத் தொடர்பு கொள்ள முடிந்திருந்ததால் மறுபடியும் முடியும் என்ற நம்பிக்கை அவனுக்குள் பிறந்திருந்தது. அதனால் முயற்சி செய்தான்.

இந்த முறை அவரைத் தொடர்பு கொள்ளவும் உணரவும் அவனுக்கு நிறைய நேரம் தேவைப்பட்டது. 'உதயிடம் தெரிந்த வசிய அலைகளின் மூலம் எங்கே என்று கேட்டாய். விஸ்வம் என்று தெரிவித்து விட்டேன். இனி என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுக்க வேண்டியவன் நீ. அதை விட்டு விட்டு மறுபடி என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய்?' என்று மாஸ்டர் பிடிகொடுக்காமல் நழுவுகிறாரோ என்ற சந்தேகம் அவனுக்கு வந்தது. ஆனால் அவன் மாஸ்டரை விடுவதாய் இல்லை. குரு-சிஷ்ய பந்தம் எல்லா பந்தங்களுக்கும் மேலானது. கிட்டத்தட்ட இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையே உள்ள பிணைப்பு போலத் தான். அதில் எல்லைகளோ, கட்டுப்பாடோ கிடையாது. சரணாகதி என்று காலைப் பிடித்தால் காப்பாற்றாமல் போக இறைவனுக்கே வலிமை போதாது என்கிற போது குரு சிஷ்யனிடமிருந்து தப்பிக்க வழியேது?

இந்த சிந்தனையோடு விடாமல் முயன்ற க்ரிஷ் ஒரு கட்டத்தில் மனம் லேசாகி லேசாகி மிதப்பது போல உணர ஆரம்பித்தான். அவனே ஒரு பறவை போல இமயமலையில் பறந்து அவரைத் தேடிப் போவது போலப் போனான். முடிவில் மெல்ல மெல்ல மாஸ்டரை உணர ஆரம்பித்தான். மாஸ்டர் அவனைப் பார்த்துப் புன்னகைத்ததைத் தெளிவாக நேரில் பார்ப்பது போல் அவனால் பார்க்க முடிந்தது.

“வர வர உன் தொந்தரவு அதிகமாகி விட்டது” என்று அவர் செல்லமாகக் கடிந்து கொண்டார்.

“சிஷ்யன் மனதை தெளிவிக்க வேண்டியது குருவின் கடமை. அதைச் செய்யாமல் இமயமலையில் போய் உட்கார்ந்து கொண்டால் சிஷ்யன் மனம் தெளிய வேறெங்கே போவான்” என்று க்ரிஷ் புன்னகையுடன் சொல்லி விட்டு மானசீகமாக அவரிடம் தன் நிலைமையைச் சொல்ல ஆரம்பித்தான். சிந்துவை அனுப்பி வைத்தவன் விஸ்வம் என்று தெரிந்தாலும் உதய் மனதில் அவள் நீக்க முடியாத இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டதால் அவனைப் படுகாயப்படுத்தாமல் அவளை அப்புறப்படுத்த முடியாது என்கிற நிலைமை இருப்பதை வருத்தத்துடன் சொன்னான். அதே போல் பத்மாவதி அவளை மருமகளாக மனதில் வரித்துக் கொண்டிருப்பதைச் சொன்னான். எதிரியின் கருவி என்று தெரிந்த பின்னும் அவளுடைய இளமைக்காலம் முதல் நடந்ததெல்லாம் அறிந்த பின் அவனுக்கே அவள் மீது பச்சாதாபம் தான் மேலோங்கி நிற்கிறது என்பதையும் சொன்னான். அவளை இல்லுமினாட்டியில் ஒப்படைப்பது தான் அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு என்று அறிவு சொன்னாலும், அவள் சித்திரவதைக்கு ஆளாவதையும், முடிவில் கொல்லப்படுவதையும் மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது என்பதையும் அவரிடம் கண்கலங்கச் சொன்னான். காரணம் அவள் பிறந்ததிலிருந்தே குற்றம் எதுவும் செய்யாமல் கடுமையாகத் தண்டிக்கப்பட்டவள் என்பதையும் இப்போது உதயின் காதலி என்பதையுமே மனம் திரும்பத் திரும்பச் சொல்கிறதென்று சொன்னான். ஆனால் அதே நேரத்தில் அவள் விஸ்வத்தின் கருவி என்பதால்,. அவன் உண்மையான உத்தேசம் தெரியா விட்டாலும் அவள் மூலம் அவன் என்னேரமும் அவர்களுக்கு எந்த ஆபத்தையும் வரவழைக்க முடியும் என்ற நிலைமையும் இருப்பதைச் சொன்னான். இந்தச் சூழ்நிலையில் அவன் என்ன செய்வது நல்லது என்று மாஸ்டரைக் கேட்டான்.

அவர் சொன்னார். “உன் இதயம் காட்டுகிற வழியில் போ. ஆனால் அறிவையும் கூடவே வைத்துக் கொள்”

”**த**கவலைச் சொன்னால் இல்லுமினாட்டி தலைமைக்குத் தெரிவித்து விடுகிறேன். அல்லது எழுதித் தந்தால் அதை அங்கே சேர்த்து விடுகிறேன்” என்று சொன்ன சாமுவலை கர்னீலியஸ் சிறு வருத்தத்துடன் பார்த்தார்.

“நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லாமல் சொல்கிறேன் என்று நீங்கள் எண்ணிவிடக்கூடாது. இது மிக முக்கியமான விஷயம். பல காலத்திற்கும் முன்னாலேயே தலைமைக்குத் தெரிவித்திருக்க வேண்டியது. அப்போது முக்கியமில்லை என்று நினைத்து விட்டு விட்டோம். இப்போது நடப்பதெல்லாம் பார்க்கையில் முக்கியத்துவம் புரிகிறது. அதனால் தான் தெரிவிக்க நினைக்கிறேன். ஆனால் தலைமையிடமே சொல்ல வேண்டிய விஷயத்தை சொல்லி அனுப்பவோ, எழுதி அனுப்பவோ நான் விரும்பவில்லை....”

அந்தப் பணிவான பேச்சு பலவீனத்திற்கு அறிகுறி அல்ல என்பதையும் கிழவர் தன் முடிவில் இருந்து பின் வாங்க மாட்டார் என்பதையும் சாமுவல் புரிந்து கொண்டார். 'இப்போது நடப்பதெல்லாம் பார்க்கையில் முக்கியத்துவம் புரிகிறது. அதனால் தான் தெரிவிக்க நினைக்கிறேன்.' என்று அவர் சொன்னது நடக்கும் சம்பவங்களுக்குச் சம்பந்தப்பட்டது என்பதைப் புரிய வைத்ததால் சாமுவலின் மூளை மிக வேகமாக வேலை செய்தது.

சாமுவல் மிகவும் கவனமாகப் பேசினார். “நீங்கள் நம் இயக்கத்தின் மிக மூத்த உறுப்பினர் என்பதால் உங்களிடம் சொல்வதற்கு எனக்குத் தயக்கமில்லை. விஸ்வத்தால் தலைவரின் உயிருக்கு ஆபத்து வந்து விடுமோ என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம். அதனால் அவர் யாரையும் சந்திப்பதையோ, வெளியே எங்கும் செல்வதையோ தவிர்த்து வருகிறோம். விஸ்வத்தைக் கண்டுபிடித்து அவன் சம்பந்தமாக ஒரு முடிவு தெரியாமல் இந்த நிலைமை சரியாகும் என்று தோன்றவில்லை. எதற்கும் அவரிடம் நீங்கள் சொன்னதைத் தெரிவிக்கிறேன்.”

கர்னீலியஸ் தலையசைத்தார். ஆனாலும் அவர் அசைந்து கொடுக்கவில்லை.

சாமுவல் மெல்ல எழுந்து விடைபெற்றார். அப்போதும் கர்னீலியஸ் மனதை மாற்றிக் கொள்கிறபடி தெரியவில்லை. வாசலை நோக்கி நான்கு அடிகள் வைத்த சாமுவல் போகும் முன் ஏதோ நல்ல யோசனை புலப்பட்டது போலத் திரும்பி கர்னீலியஸிடம் சொன்னார். “ஒரு வேளை தலைவரை நீங்கள் சந்திக்க ஏற்பாடு செய்ய முடியா விட்டால் தலைமைக்குழு உறுப்பினர்கள் யாராவது ஒருவரைச் சந்திக்க நான் ஏற்பாடு செய்யட்டுமா?”

சாமுவல் வாங் வேயை மனதில் வைத்து தான் அப்படிச் சொன்னார்.

கர்னீலியஸ் யோசித்தார். தலைவரிடம் சொல்ல முடியா விட்டால் உபதலைவரிடம் சொல்வது தான் சரியாக இருக்குமென்று அவருக்குத் தோன்றியது. ஆனால் தலைவர் ம்யூனிக் பங்களாவிலேயே அடைபட்டுக் கிடக்க வேண்டி வந்தால் உபதலைவருக்கு வேலை அதிகமாகி விடும். தலைவர் போக வேண்டிய முக்கிய நிகழ்வுகளுக்கெல்லாம் அவர் தான் போக வேண்டி வரும். இந்த நிலையில் உபதலைவர் இருக்கையில் அடுத்ததாய் அவரிடம் தான் சொல்வேன் என்று முரண்டு பிடிப்பதும் தவறு என்று தோன்றியது. உபதலைவருக்கு அடுத்தபடியாக இருப்பது தலைமைக்குழு உறுப்பினர்களே. அவர்கள் யாராவது ஒருவரிடம் தெரிவிப்பதும் முறையான செயலே. சொன்னது மிக முக்கியமான தகவல் என்று அவர்கள் உணர்ந்தால் கண்டிப்பாய் தலைவரின் கவனத்திற்கு அவர்கள் கொண்டு செல்வார்கள். கூடி ஆலோசித்து முடிவெடுப்பார்கள்...

கர்னீலியஸ் சம்மதித்து விட்டுச் சொன்னார். “அவர்களே என்னிடம் வர வேண்டும் என்றில்லை. நான் வேண்டுமானாலும் போய் அவர்களைச் சந்திக்கச் சித்தமாக இருக்கிறேன்”

சாமுவல் சரியென்று தலையசைத்து விட்டு, தன் பரம திருப்தியை வெளியே காட்டிக் கொள்ளாமல் வணக்கம் தெரிவித்து அங்கிருந்து விடைபெற்றார்.

அன்றிரவு வாங் வேக்குப் போன் செய்து சாமுவல் தகவலைச் சொன்ன போது வாங் வே பரபரப்பானார். அவர் கர்னீலியஸை மிக நன்றாக அறிவார். அதிகார வட்டத்தில் கர்னீலியஸ் மிக முக்கியமாக ஆள் இல்லை என்றாலும் அனைவரும் அறிந்த ஆள் தான். வருடத்திற்கு ஒரு முறை இல்லுமினாட்டி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் நாளில் அவர்களுக்கு பழங்காலச் சுவடிகளிலிருந்து உறுதிமொழியைப் படித்துக் காட்டுவது கர்னீலியஸ் தான். எல்லோரும் மிகவும் மதிக்கக்கூடியவர். இல்லாததை இருப்பது போல் சொல்லி சில்லறைத்தனமாய் முக்கியத்துவம் தேடும் ஆள் அவரல்ல. இப்போதைய சூழ்நிலையில் பயன்படக்கூடிய மிக முக்கியமான தகவல் அவரிடம் இருக்கிறது, அது தலைமைக்கு முன்பே தெரிவித்திருக்க வேண்டிய தகவல் என்று அவர் சொன்னால் அப்படியே முக்கியமானதாகத் தான் இருக்க வேண்டும்...

சாமுவல் சொன்னார். “இதை எர்னெஸ்டோவிடமோ, இம்மானுவலிடமோ நான் சொல்லாமல் உங்களிடம் சொல்கிறேன் என்று வெளியே தெரிந்தால்....”

வாங் வே சொன்னார். “இதில் உங்களுக்கு எதுவும் பிரச்னை ஆகாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். கவலைப்படாதீர்கள்.”

முதல் முறையாக அதிர்ஷ்டம் அவர் கதவைத் தட்டுவது போல் வாங் வே உணர்ந்தார். கர்னீலியஸ் சொல்வது போலவே மிக முக்கியமான தகவலாக இருந்தால் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதனால் அவருடைய திட்டங்களில் ஏதாவது ஒன்றாவது நிறைவேறலாம். எதிர்பார்த்ததற்கு மாறாக கர்னீலியஸ் முக்கியம் என நினைத்திருக்கும் தகவல் வாங் வேக்கு முக்கியமாக இல்லாமல் போனால் கூட நஷ்டமில்லை. அவர் சொன்னதை தலைமைக்குச் செய்தியாக அனுப்பி விடலாம்...

வாங் வே அவசரமாக சாமுவலிடம் கேட்டார். “கர்னீலியஸை இங்கே அழைத்து வருகிறீர்களா? இல்லை நான் வாஷிங்டன் வரட்டுமா?”

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 84



சிந்துவை அழைத்து வர உதய் காரை அனுப்பியிருந்தான். பள்ளிக்குச் செல்ல சிறிதும் விருப்பமில்லாத பிள்ளைகள் வேண்டா வெறுப்பாக வேறு வழியில்லாமல் பள்ளி வாகனத்தில் ஏறுவதைப் போல அவள் ஏறி உட்கார்ந்தாள். இந்த ஞாயிறு நரகம் தான். உதய் வீட்டு மனிதர்களைச் சகித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் செய்யும் கோமாளித்தனத்திற்கெல்லாம் சிரிக்க வேண்டும். அவர்களைப் போலவே கோமாளித்தனமாகப் பேச வேண்டும். க்ரிஷின் சந்தேகப் பார்வையைச் சகிக்க வேண்டும். பத்மாவதி பொழியும் பாச மழையில் நனைய வேண்டும். சாயங்காலம் உதயுடன் ஒரு சினிமா நரகத்தில் இருக்க வேண்டும். சினிமா அவளுக்குப் பிரச்னை அல்ல. உதயின் நெருக்கம் தான் பிரச்னை. கணவனாகப் போகிறவன் என்கிற உரிமையில் இப்போதெல்லாம் கூடுதல் நெருக்கத்தை அவன் காட்ட ஆரம்பித்திருக்கிறான். அவளுக்கோ அவன் நெருக்கமும், செய்யும் சில்மிஷங்களும் அருவருப்பாகவே இருந்தது. அவள் அந்த நேரங்களில் எல்லாம் விலக யத்தனித்ததை அவன் பெண்மையின் இயல்பான வெட்கம் என்று நினைத்தானே ஒழிய வெறுப்பின் வெளிப்பாடு என்று புரிந்து கொள்ளவில்லை.

முட்டாள்தனம் என்றாலும் இரண்டு மாதம் திருமணப் பேச்சே வேண்டாம் என்று சொன்ன ஜோதிடனை சிந்து மனமார வாழ்த்தினாள். அதற்குள் வேலை முடித்து தப்பித்து எங்காவது ஓடி மறைந்து விடவேண்டும். அவள் மட்டும் இருக்கிற ஒரு பாதுகாப்பான உலகில் இருந்து கொண்டு எதையும் யோசிக்காமல் செலவு செய்து வாழ்க்கையை நன்றாக அனுபவிக்க வேண்டும். விஸ்வம் அனைவரிடமும் மிக நெருக்கமாகப் பழகி அவர்கள் மனதில் அவள் இடம் பிடிக்க வேண்டும் என்றும் வீட்டுக்குள் எல்லா இடங்களுக்கும் தங்கு தடையில்லாமல் போகிற அளவு உரிமை பெற வேண்டும் என்றும் சொல்லி இருந்தான். பின் நேரம் வரும் போது என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதாகச் சொல்லி இருந்தான். அந்தப் பொன்னான நேரம் எப்போது வருமோ அவளுக்குத் தெரியவில்லை.

கார் உதயின் வீட்டை எட்டிய போது உதயும் பத்மாவதியும் வாசலில் அவளை வரவேற்கக் காத்திருந்தார்கள். பத்மாவதி வாயெல்லாம் புன்னகையாக மருமகளை வரவேற்றாள். க்ரிஷும், ஹரிணியும் அறையில் பேசிக் கொண்டிருந்தார்கள். சிந்துவை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தவுடன் பத்மாவதி "உட்காரும்மா, நான் க்ரிஷ், ஹரிணியைக் கூப்பிடறேன்" என்று சொல்லி வேகமாக க்ரிஷ் அறையை நோக்கிப் போனாள்.

உதய் மெல்ல முணுமுணுத்தான். "அம்மா உள்ளே போறப்ப கதவைத் தட்டிட்டுப் போ. அப்புறம் நீ தான் வெட்கப்பட்டுக்கணும்." சொல்லி விட்டு சிந்துவைப் பார்த்து அவன் அர்த்தத்துடன் புன்னகைக்க அவள் ரசிக்க முடியா விட்டாலும் கஷ்டப்பட்டு முகத்தில் வெட்கத்தைப் படர விட்டாள்.

அடுத்த நிமிடம் க்ரிஷ் அறையிலிருந்து மூவரும் வெளிப்பட்டார்கள். ஹரிணி நட்பின் புன்னகையோடு சிந்துவை நோக்கி வர, க்ரிஷ் அவளை ஆழமாகப் பார்த்தபடியே பின்னால் வந்தான். சென்ற முறை இருந்த சந்தேகப் பார்வை இப்போது அவனிடம் இல்லை. மாறாக அவள் யார் என்று புரிந்து கொண்டு பார்ப்பவன் போலவே அவளைப் பார்த்தான். சிந்துவுக்கு திக்கென்றது. இது அவளுடைய தோன்றல் அல்ல நிஜம் என்று அவள் உள்ளுணர்வு சொன்னது. அவள் ஹரிணிக்காக முகத்தில் காட்டிய போலி அன்புப் புன்னகை அப்படியே உறைந்து போனது. 'நான் மிகவும் கவனமாகச் சரியாகத் தானே நடந்து கொள்கிறேன்? அப்படி இருக்கையில் க்ரிஷ் எப்படிக் கண்டுபிடித்தான்?'

வாங் வேயிடம் சாமுவல் சொன்னார். "கர்னீலியஸை ஷாங்காய் அழைத்து வந்தால் அது கண்டிப்பாக சந்தேகத்தை ஏற்படுத்தும். ஏனென்றால் அவர் அப்படி எங்கேயும் வழக்கமாகப் போகாதவர். அதனால் நீங்கள் ஏதாவது வேலையாக வாஷிங்டன் வருகிற மாதிரி இருந்தால் நல்லது. இங்கே வந்தவர் கர்னீலியஸை ஏதாவது சாக்கு வைத்துப் பார்ப்பது போல் இருந்தால் சந்தேகம் வராது"

வாங் வேக்கு வாஷிங்டன் போவதற்குச் சந்தர்ப்பமே இல்லை. அங்கே எந்த நிகழ்ச்சியோ, யாரையும் சந்திக்கக் காரணமோ இல்லை. ஆனாலும் ஏதாவது அழைப்பை அவரால் உருவாக்கிக் கொள்ள முடியும்...

வாங் வே தன் நண்பர் அகிடோ அரிமாவுக்குப் போன் செய்து இப்போது திடீரென்று அவருக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு பற்றிச் சொன்னார். கண்டிப்பாக இப்போதைய நிலைமையில் மறைமுகமாக அவராலும் ஏதாவது செய்ய முடியும் என்று நம்பிக்கை பிறந்திருப்பதாகச் சொன்னார்.

அகிடோ அரிமா சொன்னார். "நண்பரே. மிகுந்த எச்சரிக்கை தேவை. எர்னெஸ்டோவுக்கோ, இம்மானுவலுக்கோ விஷயம் தெரிந்தால் உங்களுக்குப் பேராபத்து. அதை மறந்து விட வேண்டாம். நீங்கள் வாஷிங்டன் போய் கர்னீலியஸைச் சந்தித்தால் அது உளவுத்துறைக்குத் தெரியாமல் போகவே போகாது. கர்னீலியஸை யாரும் ஒரு கணக்கில் எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்றாலும் உங்களைக் கண்டிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். நீங்கள் எப்போதும் சந்திக்கப் போகாத அவரை இப்போது சந்திக்கப் போகிறீர்கள் என்றால் ஏன் என்ற கேள்வி வராமல் இருக்காது"

அகிடோ அரிமா நட்பின் அக்கறையில் சொல்வதை வாங் வேயால் அலட்சியம் செய்ய முடியவில்லை. இல்லுமினாட்டி தலைமைக்கே தெரியாமல் ரகசியமாக அவர் இயங்குகிறார், காய்களை நகர்த்துகிறார் என்பது தெரிய வந்தால் உடனடியாக அவர் கணக்கை அவர்கள் முடித்து விடுவது உறுதி...

வாங் வே மறுபடியும் சாமுவலுக்குப் போன் செய்து பேசினார். அகிடோ அரிமாவின் எச்சரிக்கையைச் சொன்னார்.

சாமுவல் சொன்னார். "உளவுத்துறைக்குக் கண்டிப்பாக அந்தத் தகவல் வந்து சேரும். ஆனால் அது என் பார்வைக்குத் தான் வரும். நான் தான் வேண்டியது வேண்டாதது, முக்கியமானது என்றெல்லாம் பிரித்து சம்பந்தப்பட்டவர்கள் பார்வைக்கு அனுப்பி வைப்பேன். அதனால் அது பற்றி நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. விஸ்வம் இப்போது எங்கே இருக்கிறான் என்பது தெரிந்தாலோ, மற்றவர்களுக்கு முன் அவனுடன் தொடர்பு கொள்ள முடிந்தாலோ நன்றாக இருக்கும் என்று நீங்கள் சொன்னதால் தான் இதைச் சொன்னேன். உங்களுக்கே தயக்கம் இருந்தால் இதை இத்தோடு மறந்து விடுவோம். கர்னீலியஸ் சொன்னதை நான் இம்மானுவல் காதில் போட்டு வைக்கிறேன். மீதியை அவனும் தலைவரும் தீர்மானித்துக் கொள்ளட்டும்"

வாங் வே யோசித்தார். கர்னீலியஸிடமிருந்து கிடைக்கப் போகும் தகவல் இப்போதைய நிலவரம் அல்லது விஸ்வம் சம்பந்தமானது என்று சாமுவல் நம்புகிறார். கர்னீலியஸின் வார்த்தைகளும் அப்படித்தான் இருக்கிறது. இப்படி ஒரு சந்தர்ப்பம் இனி ஒரு முறை கண்டிப்பாகக் கிடைக்காது. ஆபத்து இதில் வரலாம் தான். ஆனால் ஆபத்தைச் சந்திக்காமல் பெரிய வெற்றிகளை யாரும் பெற்று விட முடியாது. சாமுவல் மிக மிக எச்சரிக்கையானவர். அப்படிப்பட்ட அவரே தைரியமாக ஒரு முடிவெடுத்து இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கிறார். இதுவே ஒரு நல்ல சகுனம். இந்த நேரத்தில் தயக்கம் காட்டினால் கடைசி வரை இப்படியே இருந்து விட வேண்டியது தான் என்று நினைத்த வாங் வே அவசரமாகவும், உறுதியாகவும் சொன்னார். "உளவுத்துறைக்குப் போகும் தகவல்கள் முதலில் உங்கள் பார்வைக்குத் தான் வரும் என்றால் இந்தச் சந்திப்பு பற்றி இல்லுமினாட்டி தலைமைக்குத் தெரியாமல் நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள் என்று தைரியம் தந்தால் மற்றதை யோசிக்க ஒன்றுமில்லை சாமுவல். நாம் தைரியமாக இதில் இறங்குவோம். இனி சில நாட்களில் வாஷிங்டனில் நடக்கும் பெரிய நிகழ்ச்சிகள் என்னென்ன என்பதை எனக்குப் பட்டியல் அனுப்புங்கள். அதில் ஏதாவது ஒன்றுக்கு எனக்கு அழைப்பு வருகிற மாதிரி நான் பார்த்துக் கொள்கிறேன்...."

சாமுவல் வாங் வேயின் உறுதியான வார்த்தைகளில் தைரியம் பெற்றார். அடுத்த அரை மணி நேரத்தில் ஐந்தாறு நாட்களில் வாஷிங்டனில் நடக்கவிருக்கும் சில முக்கிய நிகழ்ச்சிகள், விருந்துகள் பட்டியல் வாங் வேக்கு வந்து சேர்ந்தது. சில மணி நேரங்களில் அந்த நிகழ்ச்சிகளில் ஒன்றில் கலந்து கொள்ள அழைப்பிதழையும் வாங் வே பெற்றார். வரும் இரண்டு மூன்று தினங்களில் அவர் கொடுத்திருந்த அப்பாயின்மெண்ட்களை எல்லாம் ரத்து செய்யச் சொல்லித் தன் காரியதரிசிக்கு உத்தரவிட்டார்.

மறுநாளே வாங் வே வாஷிங்டன் கிளம்பினார்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, January 14, 2021

இல்லுமினாட்டி 85



க்ரிஷ் எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருக்கிறான் என்று உள்ளுணர்வு தெரிவித்தவுடன் சிந்துவிற்குத் தோன்றிய முதல் எண்ணம் அங்கிருந்து எப்படியாவது தப்பித்துவிட வேண்டும் என்பது தான். கண்டுபிடிக்கப்பட்ட குற்றவாளி பிடிபட்டு தண்டனைக்குள்ளாவதற்கு முன் தப்பிக்க வேண்டும் என்று இயல்பாகத் துடிப்பது போல் தான் இதயம் படபடத்தது. ஆனால் அவள் அப்படிச் செய்தால் குற்றத்தை அவளாக ஒப்புக் கொண்டது போலாகி விடும் என்ற உண்மை அவளுக்கு உறைத்தது. அதுமட்டுமல்லாமல் அப்படி ஏதாவது சொல்லி அங்கிருந்து தப்பித்துப் போனாலும் அவளைக் கண்டு பிடிக்க அவர்களுக்கு நிறைய நேரம் தேவைப்படாது என்றும் அவள் அறிவு எச்சரித்தது. அது எப்படியாவது அங்கிருந்துத் தப்பித்துப் போகும் அவசர எண்ணத்தை மெல்ல மாற்றியது.

அடுத்த சில நிமிடங்கள் அவள் எந்திரத்தனமாக அவர்களிடம் பேசினாள், அவர்கள் கேட்டதற்குப் பதில் சொன்னாள் என்றாலும் அவள் கவனம் எல்லாம் மற்றவர்கள் எல்லோரும் அவளிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதிலேயே இருந்தது. அவர்கள் எல்லோரும் பழையபடியே அன்பாகவும், நெருக்கமாகவும் அவளிடம் பழகினார்கள். அப்படியானால் க்ரிஷ் தான் கண்டுபிடித்து வைத்திருப்பதை அவர்கள் யாரிடமும் சொல்லவில்லை என்பது உறுதியாகியது. ஆனால் அது ஏன் என்று தெரியவில்லை. அவன் பார்வை மட்டும் அவள் மீதே தைக்கப்பட்டது போல் இருந்தது. ஒரு ஆராய்ச்சியாளன் தன் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட பொருளை ஆராய்வது போல, ஒரு நீதிபதி குற்றவாளியின் போக்கைக் கவனமாகத் தீர்மானித்துக் கொண்டிருப்பது போல அவளையே க்ரிஷ் பார்த்துக் கொண்டிருந்தான். சிந்துவோ அவன் பார்வையிலிருந்து எப்படித் தப்பிப்பது என்று தவித்துக் கொண்டிருந்தாள். நல்ல வேளையாக பத்மாவதி சமைக்கக் கிளம்பிய போது ஹரிணி அவளுக்கு உதவக் கூடப் போக, அவர்களுடன் சிந்துவும் சேர்ந்து கொண்டாள். க்ரிஷ் அங்கும் கூடவே வந்தாலும் வருவானோ என்ற பயம் அவளுக்கு இருந்தது. ஆனால் க்ரிஷும் உதயும் ஹாலிலேயே தங்கி விட சிந்து சிறிது நிம்மதியடைந்தாள்.

தாயிற்கு சமையலில் உதவ ஹரிணி போன போது சிந்துவும் சேர்ந்து போனது உதய்க்குத் திருப்தியாக இருந்தது. அவன் மனநிறைவுடன் தம்பியிடம் சொன்னான். "எனக்கு வரப் போகிற மனைவி இப்படி எல்லாம் இருக்கணும்னு சில கனவுகள் எப்பவுமே என் மனசில் இருந்தது. ஆனால் அப்படி ஒருத்தி கிடைப்பாளா, அவளும் ஹரிணி மாதிரி நம் குடும்பத்தில் அன்பாய் சேர்ந்து கொள்வாளான்னு தெரியாமல் இருந்தது. இப்ப தான் மனசு நிம்மதியாயிருக்கு. கிழவி விடாமல் சாமி கும்பிட்டது வீண் போகலை"

க்ரிஷ் கஷ்டப்பட்டுப் புன்னகைத்து விட்டுத் தலையாட்டினான். பேச முடியாமல் அவனுக்குத் தொண்டையை ஏதோ அடைத்தது.

சிந்து பள்ளி சென்று கொண்டிருந்த காலத்தில் அவளுடைய வீட்டில் அவள் சமையலறைக்குப் போய் சமைக்க அனுமதி இருக்கவில்லை. அவளாக ஒருவேளை சென்றால் உடனே சித்தி சமையலறையிலிருந்து தனதறைக்குப் போய் விடுவாள். சிந்து சமையலறையிலிருந்து வெளியே வராமல் அவள் சமையலறைக்குப் போக மாட்டாள். சமையலில் ஒத்தாசை செய்து சித்தியின் அன்பைச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தில் மண் விழுந்த பிறகு சிந்து பின் எப்போதும் தன் வீட்டில் சமைக்கப் போவதை நிறுத்தியிருந்தாள். வீட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறித் தனியாக வீடு எடுத்து வாழ ஆரம்பித்த பிறகு அவள் மட்டும் தான் அவளுடைய சமையலறையில் இருப்பாள். இன்று வேறு வீட்டுச் சமையலறையில் வேறிரண்டு பேருடன் இருப்பது அவளுக்கு அன்னியமாகப் பட்டது.

ஹரிணி கேட்டாள். "அத்தை இன்றைக்கு என்ன எல்லாம் பண்ணப் போறீங்க?"

பத்மாவதி சந்தோஷமாக ஒரு பட்டியலைச் சொன்னாள். தானும் எதாவது கேட்க வேண்டுமே என்பதற்காக சிந்து கேட்டாள். "இதில் உங்களுக்கு ரொம்ப பிடிச்ச பதார்த்தம் என்ன?"

பத்மாவதி அந்தப் பட்டியலில் அவளுக்குப் பிடித்த பதார்த்தம் எதுவும் இல்லை என்றாள். எல்லாமே அவளுடைய இரண்டு பிள்ளைகளுக்குப் பிடித்தவை தானாம். தனக்குப் பிடித்தவை அவர்களுக்குப் பிடிப்பதில்லை என்பதால் அதை மிக அபூர்வமாகத் தான் சமைப்பதாய் அவள் எந்த விதமான வருத்தமும் இல்லாமல் சொன்னாள். தனது பிள்ளைகளுக்காக வாழ்ந்து வரும் அவளைப் பார்க்கையில் சிந்துவுக்குத் தாயின் நினைவு வந்து போனது. இப்போதும் ஆழத்தில் மனம் வலித்தது. இந்த வீடு அவள் இழந்ததை எல்லாம் அறைகிற மாதிரி சொல்கிறது. எல்லாவற்றையும் மறந்து வாழ நினைக்கும் அவளுக்கு அதனாலேயே இவர்கள் யாரையும் பிடிக்கவில்லை.

பலவந்தமாக மனதைத் திருப்பி இழுத்து விட்டு அவர்களுடன் சமையல் வேலையில் சிந்து தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். கைகள் சமையல் வேலை செய்த போதிலும் அவள் மனம் க்ரிஷ் பார்வை பற்றியும், இனி அவள் எடுக்க வேண்டிய முடிவு பற்றியும் கவலைப்பட ஆரம்பித்தது. ஆரம்பத்தில் அவள் நினைத்தது போல அவள் ஓடிப் போக முடியாது. க்ரிஷ் ஏதாவது செய்வானா என்பது வேறு விஷயம். விஸ்வமே அவன் ஒப்படைத்த வேலையைச் செய்யாமல் போக விட மாட்டான். ஒருவேளை அவள் ஓடிப்போனால், மனோகர் போல அவளும் எங்கேயாவது இறந்து கிடக்க நேரிடலாம். அவளுக்கு வாழ்க்கையை நன்றாக அனுபவிக்காமல் அற்பாயுசில் சாக விருப்பமில்லை... நிலைமை இப்படி இருப்பதால் என்ன ஆனாலும் சரி இங்கேயே இவர்களிடமே தாக்குப்பிடிக்க வேண்டும்....

அப்படித் தாக்குப் பிடிக்க க்ரிஷ் அனுமதிக்க வேண்டும். உண்மை அறிந்தவன் இப்போது அதை ஏதோ சில காரணங்களால் தன் குடும்பத்திற்குச் சொல்லவில்லை. ஆனால் எப்போதுமே சொல்லாமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பான் என்று அவள் நம்புவதும் முட்டாள்தனம். வீட்டுக்குத் தெரிவிக்காமலேயே சத்தமில்லாமல் ஒருநாள் அவள் கதையை முடித்து விட அவன் ஏற்பாடு செய்யவும் கூடும். எதையும் நிச்சயமாய் சொல்ல முடியாது. அமைதியானவர்கள் ஆபத்தானவர்கள்....

"சிந்து எதோ கனவுலகில் இருக்கிறாள்" என்று ஹரிணி பத்மாவதியிடம் சொன்ன போது தான் தன் எண்ண ஓட்டங்களில் இருந்து மீண்டாள். இல்லை என்று மறுத்தால் என்ன நினைத்துக் கொண்டிருந்தாள் என்பதைச் சொல்ல வேண்டியிருக்கும் என்று நினைத்து முகத்தில் ஒரு வெட்கப் புன்னகையை சிந்து படரவிட்டாள்.

பத்மாவதி சிரித்தபடி சொன்னாள். "அதெல்லாம் சகஜம் தானே"

ஹரிணி பத்மாவதியிடம் ரகசியமாய் கேட்பது போலக் கேட்டாள். "அத்தை நீங்களும் உங்கள் இளம் வயதில் கனவுலகில் நிறைய இருந்திருக்கிறீர்களா?"

ஹரிணி இப்படி உரிமை எடுத்துக் கொண்டு கேட்பது சிந்துவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. பத்மாவதியும் மாமியார் என்ற பந்தா எதுவும் இல்லாமல் புன்னகையுடன் அன்றைய யதார்த்தத்தைச் சொன்னாள். "அந்தக் காலத்தில் எங்களுக்குக் கனவு காணக் கூட முடிஞ்சதில்லை. பொண்ணுங்களுக்குக் காலா காலத்தில் கல்யாணம் ஆகிறதே பெரிய விஷயம். அதையே அதிர்ஷ்டமா நினைப்போம். பொண்ணுங்களைக் கிள்ளுக் கீரையாய் நினைச்ச காலம் அது. பையனைப் பிடிச்சுதா இல்லையான்னு கூடக் கேட்க மாட்டாங்க. பெரியவங்க பார்த்து இவன் தான் பையன்னு சொல்வாங்க. பையன் வயசான ஆளு, இரண்டாம் தாரம்னு இல்லாமல் கல்யாணம் ஆனா அதுவே ஒரு பாக்கியம்னு பொண்ணுங்க நினைச்ச காலம் அது..."

சிந்துவுக்கு அந்தக் காலத்து ஆட்கள் மேல் கோபம் வந்தது. அதை ஏற்றுக் கொண்டு வாழ்ந்த பத்மாவதி போன்ற பெண்கள் மீதும் கோபம் வந்தது. அதை மறைக்க முகத்தைத் திருப்பிக் கொண்டு ஹால் பக்கம் பார்த்தாள். உதய் தன் அலைபேசியில் எதோ பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் க்ரிஷ் அவளையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருப்பது தெரிந்தது. அவன் எப்போது இடம் மாறி உட்கார்ந்தான்? அவனுக்குச் சில சக்திகள் இருப்பதாகச் சொல்கிறார்களே, இவ்வளவு நேரம் அவள் மனதில் ஓடும் எண்ணங்களை எல்லாம் அவனுக்கு அறிய முடிந்திருக்குமோ? நினைக்கவே அவளுக்குப் பகீரென்றது. உடனே அவள் அவன் ஹாலில் இருந்து பார்க்க முடியாதபடி இடம் மாறி பத்மாவதி அருகே அவள் சமைப்பதைப் பார்க்க ஆசைப்படுவது போல் நின்று கொண்டாள். ஆனால் அவள் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

சீக்கிரம் இந்த வேலையை முடித்து விட்டுத் தப்பித்தால் போதும் என்று மறுபடியும் தோன்றியது. விஸ்வம் என்ன வேலை கொடுப்பான் என்று தெரியவில்லை. அதை எப்போது கொடுப்பான் என்றும் தெரியவில்லை. வேலை எதுவானாலும் அதை அவள் சீக்கிரம் முடிக்க வேண்டும்.... அதிலும் அவளுக்கு ஒரு சிக்கல் இருக்கிறது. யாரும் சந்தேகப்படாத சமயங்களில் சில வேலைகளைச் செய்வது சுலபம். கண்கொத்திப் பாம்பு போல க்ரிஷ் பார்த்துக் கொண்டிருக்கையில் அவளால் என்ன செய்ய முடியும் என்று தெரியவில்லை. இவன் தொடர் பார்வையிலிருந்து எப்படித் தப்புவது என்று தீவிரமாக யோசித்த போது அவள் மூளையில் ஒரு அருமையான திட்டம் உதயமானது. பிரச்னைக்குத் தீர்வு கண்ட திருப்தியுடன் அவள் புன்னகைத்தாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, January 21, 2021

இல்லுமினாட்டி 86



சாமுவல் வாங் வே வரப் போவதை உடனடியாகக் கர்னீலியஸுக்குச் சொல்லவில்லை. முதலில் போன் செய்து இல்லுமினாட்டியின் தலைவர், உபதலைவர் இருவரின் அப்பாயின்மெண்டையும் பெறக் கடுமையாக முயன்றும் கிடைக்கவில்லை என்று சொல்லி இனி தலைமைக்குழு உறுப்பினர்களைத் தொடர்பு கொள்ள முயல்வதாகத் தெரிவித்தார். பின் இரண்டு மணி நேரம் கழித்து மறுபடி போனில் பேசினார். தலைமைக்குழு உறுப்பினர்களில் ஒருவரான வாங் வே வாஷிங்டனில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருப்பதாக அறிந்து அவரைத் தொடர்பு கொண்டதாகவும், அவரிடம் விஷயத்தைச் சொன்னவுடன் அவர் உடனடியாக கர்னீலியஸைச் சந்திக்க ஒத்துக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

தனக்காக இவ்வளவு தூரம் முயற்சிகள் எடுத்த சாமுவலுக்கு நன்றி சொன்ன கர்னீலியஸ் வாங் வேயைத் தானே சென்று சந்திக்கத் தயார் என்றும் எங்கு எப்போது சந்திக்க வேண்டும் என்று சொன்னால் போதும் என்றும் சொன்னார்.

சாமுவல் சொன்னார். “இப்போதைய நிலைமையில் நீங்களாக அவரைச் சந்திக்கச் சென்றால் யார் மூலமாகவாவது விஸ்வம் தெரிந்து கொண்டு எச்சரிக்கை அடைந்து விடவும் வாய்ப்பு இருக்கிறது. அதனால் வாங் வேயே தங்கள் வீட்டுக்கு வந்துச் சந்திப்பது நல்லது. அவரிடம் அதைச் சொல்லி அவரும் ஒப்புக் கொண்டு விட்டார். அவர் நாளை மாலை ஆறரை மணிக்கு உங்களைச் சந்திப்பார்”

“உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்று தெரியவில்லை” என்று கர்னீலியஸ் நெகிழ்ச்சியுடன் சொன்னார்.

“நான் என் கடமையைத் தான் செய்திருக்கிறேன்” என்று அடக்கமாகச் சொல்லி சாமுவல் போனை வைத்து விட்டார். இனி மீதியை வாங் வே பார்த்துக் கொள்வார்.

கர்னீலியஸ் வாங் வேயை நன்றாக அறிவார். தலைமைக்குழு உறுப்பினர்களிலேயே வாங் வே மிகவும் துடிப்பானவர்.... அவரே நேரில் வரச் சம்மதித்தது கர்னீலியஸுக்குத் திருப்தியாக இருந்தது. அவரிடம் தெரிவித்தால் இல்லுமினாட்டி தலைவருக்குக் கண்டிப்பாகத் தகவல் போய்ச் சேர்ந்துவிடும்.. .வாங் வே வருவதற்குள் அடுத்த வாசகம் எதாவது நினைவுக்கு வருகிறதா என்று கர்னீலியஸ் கடைசியாக ஒரு முறை முயன்று பார்த்தார். பரபரப்புடன் முயன்றதாலோ ஏனோ மனம் அமைதி அடைய மறுத்தது. அதனால் அந்தப் பயிற்சி பலனளிக்கவில்லை...

மறுநாள் சரியாக மாலை ஆறரை மணிக்கு வாங் வே கர்னீலியஸ் வீட்டில் இருந்தார். அவரை மரியாதையாக வரவேற்று அமர வைத்த கர்னீலியஸ் உபசரிப்பில் இறங்கினார். இல்லுமினாட்டியின் தலைமைக்குழு உறுப்பினர் அதிகார பந்தா எதுவுமில்லாமல் அவருடைய வீடு தேடி வந்திருப்பதில் அவருக்கு ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியை அவருக்கான கௌரவத்தை அளித்துக் காட்டுவது தான் முறை என்று அவர் நினைத்தார்.

வாங் வேயோ விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் அவசரத்தில் இருந்தார். இந்தக் கிழவரின் உபசரிப்பில் காலந்தாழ்த்தப்படுவது இம்சையாக அவருக்கு இருந்தது. அவர் உபசரிப்பை வெட்டிச் சொன்னார். “பெரியவரே. நாம் ஒரே குடும்பத்தவர்கள் போலத் தான். அதனால் விருந்தாளிக்கான உபசரிப்பு எனக்குத் தேவையில்லை. மிக ஆபத்தான காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். கனவிலும் நினைத்திராதது எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து தப்பிக்க உதவும் தகவல்கள் உங்களிடம் இருக்கலாம் என்று கேள்விப்பட்டு வந்திருக்கிறேன். அந்தத் தகவல்கள் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன என்பதிலிருந்து ஆரம்பித்துச் சொன்னால் நன்றாய் இருக்கும்.”

கர்னீலியஸ் அந்த ரகசிய ஆவணம் அவர் கையில் எப்படிக் கிடைத்தது என்பதைச் சொல்லி அதன் முக்கியத்துவம் அந்தக் காலத்தில் புரியாததால் அதை மேலோட்டமாகப் படித்து வங்கி லாக்கரில் வைத்ததையும், விஸ்வம் வேறு உடலில் போய்ச் சேர்ந்ததை அறிந்த பின் அப்படி ஒன்று நடக்கும் என்று ஆரகிள் சொன்னது நடந்து விட்டபடியால் அதற்குப் பின் ஆகப் போவதை சங்கேத பாஷையில் விவரித்திருந்ததும் நடக்க வாய்ப்பிருக்கிறது என்பதை உணர்ந்ததையும் விவரித்தார்.

மிகவும் கவனமாக அவர் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வாங் வே திகைத்தார். கேள்விப்பட்டது எதுவும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆரகிள் சொன்ன முதல் பகுதி அப்படியே பலித்திருக்கிறது. அதைப் புரிந்து கொள்வதில் எத்தனையோ குழப்பங்கள் இருந்த போதும் எல்லாம் முடிந்த பிறகு யோசித்துப் பார்க்கையில் எல்லாமே முன்பு கூறியபடி தான் நடந்திருக்கின்றன. இப்போது இதில் இரண்டாம் பகுதி இருந்திருக்கிறது என்பது இவர் மூலம் தெரிகிறது. இதில் கூடுவிட்டு கூடு பாயும் சம்பவம் நடக்கும் என்றது நடந்திருக்கிறது. அதனால் அதில் இனி என்ன சொல்லி இருக்கிறதோ அதுவும் நடக்கவே கூடும். இப்படி எல்லாம் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு அப்படியே நடப்பதில் வாங் வேக்கு சம்மதமில்லை. இந்த விஷயத்தில் அவரும் விஸ்வம் கட்சி தான். விதியை அவரே தீர்மானிப்பதில் தான் அவருக்குத் திருப்தி.... ஆனால் முதலில் ஆரகிள் என்ன சொல்லியிருக்கிறது என்று தெரிந்து கொண்டால் அதற்குத் தகுந்தபடி தனக்கு லாபகரமான முடிவெடுப்பது நல்லது என்று எண்ணிக் கொண்டார்.

கர்னீலியஸ் தொடர்ந்து விஸ்வத்தின் மறுபிறவி பற்றிக் கேள்விப்பட்டபின் வங்கி லாக்கரில் வைத்திருந்த அந்த ரகசிய ஆவணத்தை எடுக்கப் போகும் போது ஏற்பட்ட அனுபவங்களைச் சொன்னார். வாங் வே திகைத்தார். கர்னீலியஸ் சந்தேகப்பட்டது போல இது விஸ்வத்தின் வேலையே என்று அவருக்கும் தோன்றியது. வேறு யாராலும் இப்படிச் செய்திருக்க முடியாது.... பின் கர்னீலியஸ் தான் இளமையில் கற்றிருந்த ஒரு ரகசிய நினைவுபடுத்திக் கொள்ளும் கலையைப் பயன்படுத்தி அந்த ரகசிய ஆவணத்தில் எழுதியிருந்ததை நினைவுக்குக் கொண்டுவர முயன்று கொண்டிருப்பதாய்ச் சொன்ன போது வாங் வே அதிசயித்தார். இந்தக் கிழவனும் சாதாரணமான ஆள் கிடையாது என்று தோன்றியது. இந்தக் காலமும் அசாதாரணமானது போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டார். அதனால் தான் அவர் உட்பட எல்லோரும் என்னென்னவோ மாதிரி நடந்து கொள்கிறார்கள். முடிவில் எவன் ஜெயிக்கிறானோ அவன் செய்ததெல்லாம் சரி என்று சரித்திரம் பேசும். தோற்றவன் செய்ததெல்லாம் முட்டாள்தனமாகி விடும். எனவே இதில் யார் ஜெயிப்பார்கள் என்று அந்த இரகசிய ஆவணம் சொல்கிறதோ அந்தப் பக்கம் சேர்ந்து கொள்வது தான் புத்திசாலித்தனம்...

கர்னீலியஸ் தன்னுடைய முயற்சியில் கிடைத்த ஆரம்ப வெற்றியைத் தெரிவித்து விட்டு நினைவுக்குக் கொண்டு வர முடிந்த வரிகளைச் சொல்லி விட்டுச் சொன்னார். “இனி என்ன செய்ய வேண்டும் என்பதை இல்லுமினாட்டி தீர்மானம் செய்வது நல்லது. தகுந்த பாதுகாப்போடு போய் வங்கியிலிருந்து எடுத்துத் தருவதானால் எடுத்துத் தருகிறேன். நான் என்னுடைய இந்தப் பயிற்சி வழியே முயற்சி செய்தால் முழுமையாக எப்போது நினைவுபடுத்திக் கொள்ள முடியும் என்பது எனக்கே நிச்சயமில்லை.”

வாங் வே யோசித்தார். கர்னீலியஸுடன் ஓரிரண்டு பேரை அனுப்பிப் பயனில்லை. இந்த முறை கார் நிற்கும் என்றும் சொல்ல முடியாது. ஆட்களே விபத்துக்குள்ளாகி இறந்து போகலாம். பலத்த பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் போவது என்றால் பலர் சூழ கர்னீலியஸ் போக வேண்டியிருக்கும். அப்படிப் போய், வாஷிங்டன் நகரமே அறியும் ஒரு விஷயம் இம்மானுவலை எட்டாமல் போகாது. அது ஆபத்து.

வாங் வே மெல்லச் சொன்னார் “விஸ்வத்திற்குத் தெரியாமலேயே நம்மால் அதில் என்ன இருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியும் என்றால் அதுவே நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. இனியும் நான்கு நாட்களோ, ஒரு வாரமோ ஆனால் கூட உடனடியாக எதுவும் நடந்து விடப் போவதில்லை. நீங்கள் உங்கள் முயற்சியையே தொடருங்கள். நீங்கள் கண்டுபிடித்திருக்கும் அந்த வாசகங்களை மறுபடி சொல்கிறீர்களா, நான் எழுதிக் கொள்கிறேன்...”

கர்னீலியஸ் சொன்னதை வாங் வே எழுதிக் கொண்டார். இதில் முக்கியமானது விஸ்வம் போய்ச் சேரும் இடம் பற்றி இருக்கும் வாசகம் தான். அந்த இடத்தைக் கண்டுபிடிப்பது பெரிய விஷயமில்லை. சாமுவலிடம் சொன்னால் சீக்கிரம் கண்டுபிடித்துச் சொல்வார்.... அப்படிக் கண்டுபிடித்து ரகசியமாக விஸ்வத்தை முதலில் சந்தித்துப் பேசினால் நன்றாக இருக்கும்....

வாங் வேயிடம் கர்னீலியஸ் சொன்னார். “தலைவரிடம் பேசும் போது நான் மன்னிப்பு கேட்டேன் என்றும் சொல்லுங்கள். அந்த ஆவணம் அர்த்தமுள்ளது, முக்கியமானது என்று முதலிலேயே தெரிந்திருந்தால் முன்பே தலைமையிடம் அதை ஒப்படைத்திருப்பேன்...”

வாங் வே சொன்னார். “நீங்கள் மட்டுமல்ல யாருமே அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் தந்திருக்க மாட்டார்கள். இப்போது முக்கியத்துவம் தெரிந்தவுடன் உங்கள் கடமையைச் சரியாகச் செய்திருக்கிறீர்கள். அதனால் மன்னிப்பு கேட்க அவசியமே இல்லை என்று நினைக்கிறேன். ஆனால் நீங்கள் சொன்னதாகக் கண்டிப்பாகத் தலைவரிடம் தெரிவிக்கிறேன்.”

கர்னீலியஸ் அவருடைய வார்த்தைகளில் நெகிழ்ந்து போனார். வாங் வே கிளம்பும் முன் சொன்னார். “நீங்கள் உங்கள் பயிற்சிகளை மட்டும் தயவுசெய்து தொடர்ந்து செய்யுங்கள். உங்களுக்கு மற்ற வாசகங்களும் நினைவுபடுத்திக் கொள்ள முடிந்தால் அது இல்லுமினாட்டிக்குச் செய்யும் பெரிய சேவையாக இருக்கும். அப்படி நினைவுக்கு வந்தால் உடனடியாக எனக்குப் போன் செய்து சொல்லுங்கள். என் போன் நம்பரைக் குறித்துக் கொள்ளுங்கள்”

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, January 28, 2021

இல்லுமினாட்டி 87



சிந்து தன் திட்டத்தைச் சமயம் பார்த்து நிறைவேற்றுவது என்று முடிவு செய்தாள். அது வரை க்ரிஷின் கழுகுப் பார்வையைப் பொறுத்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் பொறுக்க வேண்டி இருந்தது க்ரிஷ் பார்வையை மட்டுமல்ல, மற்ற மூவரையும் கூடத் தான். எல்லாமே அன்னியமாகவும், சித்திரவதையாகவும் இருந்தது. அதையெல்லாம் வெளிக்காட்டாமல் கலகலவென்று நடிக்க முடிந்தாலும் அங்கிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் யுகமாய் நகர்வதாய் உணர்ந்தாள்.

சாப்பிட்டு முடித்த பின் பத்மாவதி பழைய ஆல்பங்களை எல்லாம் கொண்டு வந்து கொடுக்க ஹரிணியும், சிந்துவும் அந்த ஆல்பங்களைப் பார்க்க ஆரம்பித்தார்கள். க்ரிஷ், உதய் இருவரின் சிறு வயதுப் படங்கள் நிறைய இருந்தன. பத்மாவதி குழந்தைகளை விதவிதமாய் அலங்கரித்து படம் எடுத்திருந்தாள். க்ரிஷுக்கு நான்கைந்து வயது ஆகும் வரை அவனைப் பெண்ணாகக்கூட அலங்கரித்து எடுத்திருந்தாள். ஹரிணி அதை எல்லாம் ரசித்துச் சிரித்த போது இரண்டாவது குழந்தை ஒரு பெண்ணாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டதாக பத்மாவதி சொன்னாள். அப்படிப் பிறக்காமல் போனதால் க்ரிஷையே பெண்பிள்ளை மாதிரி அலங்கரித்துப் படம் எடுத்ததாகவும் ஐந்து வயதிற்கு மேல் அப்படி எடுக்க அவன் மறுத்து ஓடி விடுவான் என்றும் வருத்தத்துடன் சொன்னாள்.

உதய் சிரித்துக் கொண்டே சொன்னான். “விட்டிருந்தால் அவனுக்கு மீசை முளைக்கிற வரை கிழவி அந்த மாதிரியே அலங்காரம் பண்ணி படம் எடுக்கத் தயங்கியிருக்காது”

பத்மாவதி மகனை முறைத்தாள். “போடா அப்படியெல்லாம் இல்லை.”

பல புகைப்படங்களில் இரண்டு மகன்களுடன் பத்மாவதி கம்பீரமாகத் தெரிந்தாள். இந்த இரண்டு பிள்ளைகளின் தாய் என்கிற பெருமிதம் எல்லாப் படங்களிலும் தெரிந்தது. பழையபடி தன் தாயின் நினைவு வருவதை சிந்துவால் தவிர்க்க முடியவில்லை. மனம் அலைபாய பார்வையை ஆல்பத்தில் இருந்து எடுத்து நிமிர்ந்த போதும் க்ரிஷ் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். இதை இப்போதே நிறுத்த வேண்டும் என்று தோன்றியது. சரியாக ஹரிணி, உதய் இருவரும் கூட இருக்கிறார்கள். பத்மாவதி இருப்பது கூட நல்லதற்குத் தான்.

ஹரிணி க்ரிஷைப் பார்த்துத் திடீரென்று கேட்டாள். “நீங்கள் ஏன் என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?”

ஹரிணி, உதய், பத்மாவதி மூவரும் உடனடியாக க்ரிஷைப் பார்த்தார்கள். க்ரிஷ் அப்போதும் பார்வையை அவள் மீதிருந்து எடுக்கவில்லை. அவன் அவள் நோக்கத்தைப் புரிந்து கொண்டது போலப் புன்னகையுடன் இப்போதும் பார்த்தான். அவன் அழுத்தம் சிந்துவைத் திகைக்க வைத்தது.

உதய் சிரித்துக் கொண்டே சொன்னான். “அவன் உன் கிட்ட எதையோ புரிஞ்சுக்க முயற்சி பண்றான்னு நினைக்கிறேன். எங்களையும் சில சமயம் அப்படியே தான் பார்ப்பான். என்னன்னு கேட்டால் பதில் சொல்ல மாட்டான்...”

ஹரிணி புன்னகையுடன் சொன்னாள். “எனக்கென்னவோ அவன் உன் கிட்ட ஏதோ ஆராய்ச்சி பண்ணற மாதிரி தெரியுது. இந்த மாதிரி நேரங்கள்ல நீ என்ன நினைக்கிறாய்னு அவன் கண்டுபிடிச்சுடுவான். அதே மாதிரி உன் எண்ணங்களின் போக்கைக் கூட மாற்றி விடுவான்... அவன் கொஞ்ச காலமா இந்த மாதிரி ஆராய்ச்சிகள்ல தான் இறங்கியிருக்கான்...”

பத்மாவதி இளைய மகனைத் திட்டினாள். “எங்க கிட்ட வாய் விட்டுப் பேசறதுக்கு உனக்கு நேரமில்லை. வீட்டாளுக கிட்டயே ஆராய்ச்சி என்னடா வேண்டிக்கிடக்கு”

உதய் சிந்துவைப் பார்த்துக் குறும்புப் புன்னகை பூத்தபடியே தம்பியிடம் சொன்னான். “டேய் ஆராய்ச்சி பண்ணிக் கண்டுபிடிக்கறதை முழுசா என் கிட்ட சொல்லு. அவ என் அளவுக்கு எதையும் வெளிப்படையா சொல்ல மாட்டேங்கறா”

பேச்சு இப்படியெல்லாம் திசைமாறி தன் திட்டம் புஸ்வானமாகப் போகும் என்று சிந்து சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவள் எதிர்பார்த்த பொறாமை, சந்தேகம் இரண்டும் இங்கே யாரிடமும் ஏற்படாதது பெரிய ஏமாற்றத்தைத் தந்தது. முக்கியமாய் உதய் சந்தேகப்பார்வை பார்க்க ஆரம்பிப்பான் என்று நினைத்தாள். அடுத்து ஓரளவாவது ஹரிணியும் க்ரிஷின் பார்வையைக் கவனிக்க ஆரம்பிப்பாள் என்று நினைத்தாள். அவள் அப்படி ஏதும் செய்யாதது மட்டுமல்ல சிந்துவின் மனதில் க்ரிஷ் ஆராய்ச்சி செய்கிறான் என்றும் அவளுடைய எண்ணப் போக்கையே மாற்றி விடுவான் என்றும் வேறு சொல்கிறாள். அது விளையாட்டாய் சொன்ன வார்த்தைகளாய்த் தெரியவில்லை.

சிந்து உள்ளே எழுந்த பீதியை மறைத்துக் கொண்டு க்ரிஷிடம் சொன்னாள். “அது என்ன ஆராய்ச்சி எனக்கும் சொல்லிக் கொடுங்களேன்”

பத்மாவதி பயந்து போனாள். “நீ சும்மா இரும்மா. இந்த வீட்டுல ஒருத்தன் ஆராய்ச்சியையே தாங்க முடியல...”

உதய் தாயின் பயத்தைப் பார்த்துக் கலகலவென்று சிரிக்க க்ரிஷும் சேர்ந்து கொண்டான். மெள்ள பேச்சு திசை மாறியது. க்ரிஷ் சிந்துவைப் பார்ப்பதைக் குறைத்துக் கொண்டு இயல்பாய் பேசினான். ஆனாலும் அவள் மனதினுள் அவன் பார்வை இன்னமும் பதிந்திருந்தது போல் அவளுக்கு ஒரு பிரமை இருந்தது...

மாலை வரை பேசிக் கொண்டிருந்தார்கள். உதயும் சிந்துவும் சினிமாவுக்குப் போவது குறித்துப் பேச, க்ரிஷ் ஹரிணியிடம் கேட்டான். “நாமளும் எங்கேயாவது போகலாமா?”

ஹரிணி ஒரு கணம் திகைத்து, ஆச்சரியப்பட்டுப் பின் முகமெல்லாம் மலர்ந்தாள். அப்போது தான் அவர்கள் இப்படி எங்கேயும் வெளியே போய்ப் பல காலம் ஆகிவிட்டது என்பது க்ரிஷுக்கு நினைவுக்கு வந்தது. சிறிது நேரத்தில் அவர்கள் இருவரும் கிளம்ப அவர்கள் போவதையே மகிழ்ச்சியுடன் பத்மாவதி பார்த்துக் கொண்டிருந்து விட்டு சிந்துவிடம் சொன்னாள். “நீ வந்த நேரம் இந்த வீட்டுல எல்லாம் நல்லபடியா நடக்குது. உங்களைப் பார்த்துட்டு தான் தானும் அவளை எங்கேயாவது கூட்டிகிட்டு போகணும்னு அவனுக்குத் தோனியிருக்கு. என்ன பிள்ளையோ? அறிவு மத்த விஷயத்துல எல்லாம் நிறையவே இருக்கு. ஆனா இதுல போதாது”

சிந்துவைப் பார்த்துக் கண்ணடித்து விட்டு உதய் தாயிடம் கேட்டான். “இவனுக்கு யார் புத்தி வந்திருக்குன்னு தெரியலை. அப்பா எப்படிம்மா?”

பத்மாவதி சொன்னாள். “சேச்சே. அவர் இவன்மாதிரியெல்லாம் இருக்கலை. இவனே சீனியரா இருக்கறதால தான் இவன் சிந்தனை எல்லாம் அறிவு, ஆராய்ச்சின்னே இருக்கு..”

உதய் சிரித்துக் கொண்டே சிந்துவுக்கு விளக்கினான். “ஜீனியஸ்ங்கிறதைத் தான் சீனியர்னு சொல்றாங்க”

பத்மாவதி அசட்டுச் சிரிப்பு சிரித்தபடியே “ஆமா அது தான். அது தான். சாதாரண ஆளுக இல்ல, பெரிய பெரிய அறிவாளிகளே க்ரிஷை அப்படித் தான் சொல்வாங்க” பெருமையாகச் சொன்னாள்.

சிந்து உதயைப் பார்த்தாள். அவனும் ‘ஆமாம். அப்படித்தான்’ என்பது போல் ஆமோதித்துத் தலையாட்டினான். இது போன்ற பிரிக்க முடியாத குடும்பத்தை சிந்து பார்த்ததில்லை. காதல்வயப்பட்ட வேகத்தில் கூட உதயைத் தம்பியிடம் இருந்து பிரிப்பது சுலபமல்ல என்பது புரிந்தது. இது ஆபத்து என்று அவள் உள்ளுணர்வு எச்சரித்தது. ஒருவேளை அவளைப் பற்றி அறிந்து கொண்டதை க்ரிஷ் இவனிடம் சொன்னால் இவன் தம்பியின் உத்தேசத்தைத் தப்பாய் எடுத்துக் கொள்ள மாட்டான்... மாறாக அவளைச் சந்தேகிக்கவும் வாய்ப்பு இருக்கிறது....

அவர்கள் இருவரும் சினிமாவுக்குப் போய்க்கொண்டிருந்த போதும் அவளுடைய எண்ண ஓட்டம் அதுவாகவே இருந்தது.

உதய் அவளிடம் கரிசனத்துடன் கேட்டான். “ஏன் என்னவோ மாதிரி இருக்கிறாய்?”

ஒன்றுமில்லை என்று சொல்லப் போனவள் அதைத் தவிர்த்துச் சொன்னாள் “என்னவோ தெரியவில்லை, பயமாக இருக்கிறது”

உதய் திகைப்புடன் கேட்டான். “என்ன பயம்?”

அவள் கண்கலங்கச் சொன்னாள். “யார் பேச்சையாவது கேட்டு என்னை நீங்கள் கைவிட்டு விடுவீர்களோ, வெறுத்து விலகி விடுவீர்களோ என்று பயம்?”

உதய் பதறிப் போனான். “ஏய் அசடு. என்ன பைத்தியக்காரத்தனமான பயம்?”

சிந்து கண்களைத் துடைத்தபடியே சொன்னாள். “வாழ்க்கையில் நிறைய இழந்தவள் நான். சந்தோஷமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த உங்களுக்கு என் பயம் புரியாது.”

உதய் அவள் துக்கத்தில் உருகிப் போனான். அவன் அவளுடைய கைகளை இறுக்கிப் பிடித்தபடி உறுதியாகச் சொன்னான். “யார் என்ன சொன்னாலும் சரி. நீ தான் என் மனைவி. நான் என்றுமே உன்னை விட்டுப் பிரிய மாட்டேன். இது சத்தியம்”

சிந்து நிம்மதியடைந்தாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, February 4, 2021

இல்லுமினாட்டி 88



"நீங்கள் தொழுத இடம் போய்ச் சேரும்...."

வாங் வே அனுப்பியிருந்த அந்த ரகசிய ஆவணச் செய்தியின் கடைசி வரியை வைத்து அந்த இடத்தைக் கண்டுபிடிக்க சாமுவல் பல முயற்சிகள் எடுத்து விட்டார். டேனியல் உடலில் இருக்கும் விஸ்வம் இன்னும் ஜெர்மனியை விட்டு வெளியேறவில்லை என்பதில் இல்லுமினாட்டி உளவுத் துறைக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. தரைவழி எல்லைகளிலும், விமானநிலையங்களிலும் கடுமையான தளராத பரிசோதனை இருந்ததால் விஸ்வம் தப்பிச் சென்றிருக்க வழியேயில்லை என்பதை இல்லுமினாட்டியின் உளவுத்துறை அறிந்திருந்தது. அதனால் அவர்கள் போய்ச் சேர்ந்திருக்கக்கூடிய தொழுத இடம் ஜெர்மனிக்குள் தான் இருக்க வேண்டும் என்றும் தவறில்லாமல் யூகித்தது. அதற்குப் பிறகு ஜெர்மனியில் இல்லுமினாட்டியினர் தொழுத இடங்களின் பட்டியல் எடுக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் அப்படிப்பட்ட தொழும் இடங்கள் நிறைய இருந்தன. பிறகு ஹிட்லரின் கெடுபிடியால் இல்லுமினாட்டியினர் பகிரங்கமாகத் தொழும் இடங்கள் எல்லாம் மாற்றப்பட்டன. அதன் பின்னர் வழிபாட்டு ஆர்வமும் குறைந்து போனதால் இல்லுமினாட்டியினர் வழிபாட்டு இடங்கள் எதையும் பெரிதாகக் கட்டவில்லை. பழைய கோயில்கள் எல்லாம் நூலகங்கள், காட்சியகங்கள், அவர்கள் கூடுமிடங்களாக மாறின. வழிபாடு என்பதே வருடத்திற்கு ஒரு முறை நடக்கும் சம்பிரதாயமாக மாறிவிட்டது. அப்படி மாறிய இடங்களில் எல்லாம் ஒளிந்து கொள்ளும் வசதி இருக்கவில்லை. என்றாலும் தனக்கு மிக நம்பிக்கையான ஊழியர்கள் ஐந்தாறு பேரை அந்த இடங்களுக்கெல்லாம் சாமுவல் அனுப்பி ஏதாவது வகையில் அங்கே விஸ்வம் ஒளிந்திருக்க வாய்ப்பு இருக்கிறதா என்று முழு சோதனைகள் செய்து பார்த்தார். விஸ்வம் அங்கெல்லாம் இல்லை என்று உறுதியாகத் தெரிந்து விட்டது.

ஜெர்மனியில் பழைய இரண்டு வழிபாட்டு இடங்கள் இப்போது சர்ச்கள் ஆகியிருந்தன. அதில் ஒரு சர்ச்சில் இப்போது வழிபாடு எதுவும் நடப்பதில்லை. அங்கு முதலிலேயே ஆட்கள் சென்று பார்த்து யாரும் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். பூட்டிய இடங்கள், காலியாக இருக்கும் பொது இடங்கள் எல்லாம் பார்க்கும் போது அதையும் பார்த்து புகைப்படம் கூட எடுத்து ஃபைலில் வைத்திருந்தார்கள். இன்னொரு சர்ச்சில் இப்போது வழிபாடு நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஆட்கள் தினசரி போய் வரும் சர்ச்சில் விஸ்வம் ஒளிந்திருக்க வாய்ப்பே இல்லை.

இந்த நிலைமையை வாங் வேக்கு சாமுவல் போன் செய்து சொன்னார். வாங் வே ஏமாற்றத்தோடு சொன்னார். "நான் அந்த ஒரு வரியிலேயே விஸ்வம் இருக்கும் இடத்தை உங்களால் கண்டுபிடிக்க முடியும் என்று நிறையவே நம்பி இருந்தேன்..."

சாமுவல் வருத்தத்துடன் சொன்னார். "தொழுத இடங்கள் எல்லாம் பார்த்தாகி விட்டது. அவன் இல்லை....இன்னும் கூடுதலான தகவல்கள் கிடைத்திருந்தால் கண்டுபிடிப்பது சுலபமாக இருந்திருக்கும்."

வாங் வே யோசனையுடன் சொன்னார். "அந்த ரகசிய ஆவணத்தில் இனி வரும் வரிகளில் ஏதாவது கூடுதல் தகவல்கள் இருக்கலாம்"

"அப்படி ஏதாவது கிடைத்தால் நன்றாக இருக்கும்" என்று சாமுவல் சொன்னார். "கர்னீலியஸிடம் கூடுதலாக தகவல்கள் ஏதாவது கிடைத்திருக்கிறதா என்று தினமும் விசாரித்துக் கொண்டு தான் இருக்கிறேன். அந்த ஆளும் முயற்சி செய்து கொண்டு தான் இருக்கிறார்... பார்ப்போம்"

எர்னெஸ்டோவை மிக அருகில் இருந்து கவனிக்க முடிந்த அக்‌ஷய்க்கு அவர் அறிவுகூர்மையும், மன உறுதியும், முடிவுகள் எடுப்பதில் இருந்த தெளிவும் அசத்தின. நள்ளிரவை நெருங்காமல் உறங்கப் போகும் பழக்கம் அவரிடம் இல்லாததால் காலை மிகவும் தாமதமாகத் தான் எர்னெஸ்டோ கண்விழிப்பார். கண்விழித்து, காலைக்கடன்கள் முடித்த பின், பால் கலக்காத காபி ஒரு கோப்பை குடித்து விட்டு அவர் வேலைகள் ஆரம்பமாகும். 'அவசரம், அதிமுக்கியம்' என்று அவர் பார்வைக்கு உளவுத்துறையும், மற்றவர்களும் அனுப்பிய செய்திகளைப் படிக்க ஆரம்பிக்கையில் அவர் முழுக்கவனமும் அவற்றில் தான் இருக்கும். ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்து முடிவெடுக்க வேண்டியதில் முடிவெடுக்க அவர் அதிக நேரம் எடுத்துக் கொள்வதில்லை என்பதை அக்‌ஷய் கவனித்தான். சில சமயங்களில் முடிவெடுப்பதற்கு முன் கூடுதல் தகவல் ஏதாவது தேவையிருந்தால் உடனடியாகச் சம்பந்தப்பட்ட நபர்களை அழைத்துப் பேசுவார். அதைக் கேட்டு உள்வாங்கிக் கொண்டு முடிவுகளை எடுத்து கட்டளை பிறப்பித்து விடுவார். சில சமயங்களில் சிலர் போன்கால்களில் அதிஅவசரமாக அவரை அழைப்பதுண்டு. பேசுபவர்கள் யாரும் மூன்று நிமிடங்களுக்கு அதிகமாக அவரிடம் பேசுவதில்லை என்பதையும் அக்‌ஷய் கவனித்தான். அதற்கு அதிகமாகப் பேசுபவர்களை அவர் முன்பே தவிர்த்து அதற்குள் சுருக்கிச் சொல்லுமாறு பழக்கியிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். பல நாடுகளின் அரசியல், பொருளாதாரம் முதல் தீவிரவாதிகளின் இயக்கங்கள் வரை அவருடைய முடிவுகள் பாதிப்பதாகவும், இருக்கும் நிலைமைகளை மாற்றுவதாகவும் இருந்தது.

"உடனடியாகக் கொன்று விடு. விபத்து போல் தெரிய வேண்டும்", "இப்படிச் செய்யச் சொல்.....", "இந்த அறிவிப்பு நாளைக்குள் வெளியாக வேண்டும்" "இப்போதைக்கு ஒன்றும் செய்ய வேண்டாம். இரண்டு நாள் பொறுப்போம்" "ஒரு மில்லியன் யூரோவை அவர்களுக்கு அனுப்பு" "பத்து மில்லியன் அமெரிக்க டாலர் இல்லுமினாட்டிக்கு அனுப்பு. பிறகு பார்ப்போம்" "உடன்படிக்கையில் இந்த ஷரத்தைச் சேர்த்து விட்டு அறிவிக்கச் சொல்" என்றெல்லாம் ஓரிரண்டு வாக்கியங்களில் அறிவித்து ஒவ்வொரு பிரச்னையாக அவர் முடித்து வைக்கும் விதம் அவனை ஆச்சரியப்படுத்தியது.

அதன் பின் காலை உணவு சாப்பிட்டு விட்டு முன்பே அப்பாயின்மெண்ட் கொடுத்திருக்கும் மிக முக்கியமான மனிதர்களை அவர் சந்திப்பார். அவர்களும் அவரிடம் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் அவரிடம் பேச அனுமதி இல்லை. அதனால் வருபவர்கள் தாங்கள் சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொல்லக் கற்றுக் கொண்டே அவரிடம் வந்திருப்பதையும் அவனால் கவனிக்க முடிந்தது. சிலரிடம் மிகவும் நட்புணர்வுடன் பேசி, சிலரிடம் கண்டிப்புடன் பேசி, சிலரிடம் ஓரிரண்டு வார்த்தைகள் மட்டும் பேசி அனுப்பி வைத்தார். ஒருவரிடம் நடந்து கொண்டது போல இன்னொருவரிடம் அவர் நடந்து கொள்ளாததை அக்‌ஷய் கவனித்தான். அதே போல அவரைச் சந்திக்க வந்த ஒவ்வொருவரும் அவரிடம் உள்ளுக்குள் பயந்து நடுங்கியபடி தான் பேசியதாகவும் அவனுக்குப் பட்டது. பலரிடம் பல விதமாக நடந்து கொண்டு விட்டு மதிய உணவு உட்கொண்டு சுமார் ஒரு மணி நேரம் அவர் இளைப்பாறுவார். பின் பழையபடி சந்திப்புகள் தொடரும். சாயங்காலம் ஐந்து மணி முதல் எட்டு மணி வரை அக்‌ஷயிடம் அவர் பேசிக் கொண்டிருப்பார். அவனிடம் பேசும் போது எந்த விதமான பந்தாவும் அவரிடம் மறைமுகமாகக் கூட இருக்கவில்லை. ஒரு நண்பர் போலவே பேசிக் கொண்டிருப்பார்.

எட்டு மணிக்கு மேல் நள்ளிரவு வரை ஒயினும், பிதோவன் இசையும் மட்டுமே அவர் நேரத்தை ஆக்கிரமிக்கும். அவர் மூலம் பிதோவன் இசை அக்‌ஷய்க்கும் அறிமுகமாகியது. போகப் போக அவனும் அந்த இசையை ரசிக்க ஆரம்பித்தான். பிதோவனின் ஒன்பது சிம்பனிகளும், கன்சர்ட்களும், மற்ற இசைகளும் அவனுக்கும் பிடிக்க ஆரம்பித்தது. அவன் ரசிப்பதைக் கவனித்த அவர் அந்த இசையில் பொதிந்திருந்த சூட்சுமங்களை அவனுக்கு விளக்க ஆரம்பித்தார். அவை புரிந்த பின் அவனுக்கு பிதோவன் இசை மேலும் பிடிக்க ஆரம்பித்தது. சில நேரங்களில் அந்த இசை அவனைத் தியான நிலைக்குக் கொண்டு போனது. அந்த நேரங்களில் அவன் சம்மணமிட்டுத் தரைவிரிப்பில் அமர்ந்து கொண்டு ஒரு பரவசநிலையில் அமர்ந்திருப்பான். அந்தச் சமயங்களில் எர்னெஸ்டோவுக்கு அவனைப் பார்க்கப் பொறாமையாக இருக்கும்.

பிதோவனை அறிமுகப்படுத்தியபடி ஒயினையும் அக்‌ஷய்க்கு அறிமுகப்படுத்த அவரால் முடியவில்லை. அவரிடம் உலகின் பல பகுதிகளிலிருந்து வரவழைக்கப்பட்ட பழமையானதும், விலையுயர்ந்ததுமான ஒயின்கள் பல வகைகள் இருந்தன. ஆனால் அவர் எவ்வளவு சொல்லி ஒயினைக் குடிக்க அவன் மறுத்தான். சிறிய அளவில் கூட அவன் மூளை மற்றும் உடலின் சக்திகள் தளர்வதை விரும்பவில்லை. சில வகை ஒயின்கள் உடலுக்கு மிக நல்லது என்று சில ஆராய்ச்சிகளில் நிரூபிக்கப்பட்டிருப்பதை அவர் சொன்னார். அதெல்லாம் அவனைச் சிறிதும் மாற்றவில்லை. "எங்கள் யோகாவை விட இதெல்லாம் உடலுக்கு அதிக நல்லதைச் செய்து விட முடியாது" என்று அவன் சொல்லி மறுத்தான்.

எர்னெஸ்டோவுக்கு விஸ்வம் நினைவுக்கு வந்தான். இவன், அவன் எல்லாம் ஒருவிதத்தில் ஒரே ரகம் என்று அவருக்குத் தோன்றியது.... இப்போது நிறைய நேரமாக எந்த விதமான அசௌகரியத்தையும் உணராமல் தொடர்ந்து அவனால் தரைவிரிப்பில் சம்மணமிட்டு உட்கார முடிவதும் அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனை ஆச்சரியத்துடன் அவர் பார்த்துக் கொண்டிருந்த போது திடீரென்று அவருடைய அறைக்கு வெளியே ஹாலில் ஏதோ பொருட்கள் உருளும் சத்தம் கேட்டது.

அடுத்த கணம் அக்‌ஷய் அவருடைய அறைக்கதவருகே இருந்தான். அவரை அமைதியாக இருந்த இடத்திலேயே அமர்ந்திருக்கும்படி சைகையால் தெரிவித்தான்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, February 11, 2021

இல்லுமினாட்டி 89



ஏர்னெஸ்டோ அடைந்த திகைப்பிற்கு அளவேயில்லை. அவருடைய திகைப்பு ஹாலில் கேட்ட சத்தத்தின் விளைவாக இருக்கவில்லை. அக்‌ஷயின் அதிவேகத்தைப் பார்த்துத் தான் அவர் திகைத்திருந்தார். "இப்போது தானே சம்மணமிட்டு தரை விரிப்பில் அக்‌ஷய் அமர்ந்திருந்தான். எப்படி இவன் கதவருகே போனான்?" என்று திகைப்புடன் அவர் தனக்குள்ளே கேட்டுக் கொண்டார். அவன் சம்மணம் கலைத்ததையோ, நின்றதையோ, கதவை நோக்கித் தாவியதையோ அவர் பார்த்திருக்கவில்லை. காற்றின் வேகத்தில் நகரக்கூடியவன் என்று அவன் ஃபைலில் இருந்தது உயர்வு நவிற்சியாக அவருக்கு இப்போது தோன்றவில்லை. விஸ்வம் கணப்பொழுதில் தாக்கக்கூடியவன் என்று அறிந்த பின் அவனிடமிருந்து அவரைக் காப்பாற்றப் பொருத்தமானவன் என்று அக்‌ஷயை ஏன் இம்மானுவல் தேர்ந்தெடுத்தான் என்பது இப்போது விளங்கியது.

அவர் அவனிடம் அமைதியாகச் சொன்னார். "நீ பயப்படும்படி எதுவும் இருக்க வழியில்லை. என்னிடம் 96 வயது வேலையாள் ஒருவர் வேலை பார்க்கிறார். அவர் அடிக்கடி இப்படி எதையாவது கீழே நழுவ விட்டு விடுவது வழக்கம். அவராகத் தான் இருக்கும்"

அக்‌ஷய் பாதி இறுக்கம் தளர்ந்தாலும் எச்சரிக்கையுடன் மெல்ல கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான். எர்னெஸ்டோ சொன்னபடியே ஒரு முற்றிய முதியவர் ஹாலில் தவறு செய்து விட்ட குழந்தை போல் நின்று கொண்டிருக்க இரண்டு வேலையாட்கள் கீழே விழுந்திருந்த பாத்திரங்களை எடுத்து வைத்துக் கொண்டும், தரையைத் துடைத்தும் கொண்டும் இருந்தார்கள்.

கதவைச் சாத்திவிட்டுத் திரும்பும் போது தான் அக்‌ஷய் இயல்பான நிலைக்கும் திரும்பினான். எர்னெஸ்டோ மென்மையான குரலில் சொன்னார். "அவர் ஆர்லாண்டோ. நான் பிறந்த போதே ஆர்லாண்டோ என் தந்தையிடம் வேலையில் இருந்தார். அப்போது அவர் பத்து வயதுப் பையன். நான் என் தாய் தந்தை தோளில் இருந்த காலத்தை விட அவர் தோளில் இருந்த காலம் அதிகம். நான் விளையாடியதும் அவரிடம் தான் அதிகம். அன்றிலிருந்து இன்று வரை என்னிடம் இருக்கிறார். வேலை பார்த்தது போதும், ஓய்வில் இருங்கள், எவ்வளவு பணம் வேண்டுமானாலும் நான் தருகிறேன், ஒரு ராஜாவைப் போல் இருங்கள் என்று பல முறை சொல்லி விட்டேன். அவர் கேட்பதாயில்லை. சில நாட்கள் உடம்புக்கு முடியாமல் படுத்திருப்பார். திடீரென்று ஒரு நாள் எழுந்து வேலை செய்வார். எனக்கு ஏதாவது சாப்பிடக் கொண்டு வந்து கொடுப்பார். நான் சாப்பிட்டு முடியும் வரை என் பக்கத்தில் அமர்ந்திருப்பார். பின் போவார். இரண்டு மூன்று நாள் இப்படி வேலை செய்வார். பழையபடி முடியாமல் சில நாட்கள் படுத்துக் கொள்வார். பின் மெல்ல எழ முடிந்தால் இப்படி வந்து விடுவார். அவருக்கு இப்போதெல்லாம் கைபலம் இருப்பதில்லை. சாமான்களைக் கீழே போட்டு விடுகிறார்...."

மெல்ல கதவைத் திறந்து அந்த முதியவர் எட்டிப் பார்த்தார். "நான் உனக்கு சில காய்கறிகளை வெட்டி சாலட் செய்து கொண்டு வந்தேன். அது கீழே விழுந்து விட்டது. மறுபடி கொண்டு வருகிறேன்."

எர்னெஸ்டோ புன்னகைத்தார். "சரி ஆர்லாண்டோ."

ஆர்லாண்டோவின் முகத்தில் குற்றவுணர்ச்சி போய் பேரன்புடன் புன்னகை விரிந்தது. "சரி சீக்கிரம் வருகிறேன். காத்திரு" என்று சொல்லி விட்டு மெல்லக் கதவை மூடினார்.

எர்னெஸ்டோ நெகிழ்ச்சியுடன் சொன்னார். "எந்த எதிர்பார்ப்பும், காரணமும் இல்லாமல் என்னை எனக்காகவே நேசிக்கின்ற ஒரே மனிதர் இவர் தான் அக்‌ஷய். எனக்கு முன் அவர் இறந்து விட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஏனென்றால் என் மரணத்தைப் பார்க்கும் சக்தி அவருக்கு இருக்காது. நான் முன்னால் போய் விட்டால் அவருக்கு நேசிக்கவும் யாருமில்லை, அவரை நேசிக்கவும் யாருமில்லை..."

அக்‌ஷய் எர்னெஸ்டோவின் புதிய பரிமாணத்தைப் பார்க்கிறான். அந்த மனிதரை அவனுக்கு மிகவும் பிடித்து விட்டது.

அவன் திரும்பி வந்து அவருக்கு எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்த பிறகு எர்னெஸ்டோ அவனிடம் ஆச்சரியத்துடன் கேட்டார். "உன்னால் எப்படி உட்கார்ந்திருந்த நிலையிலிருந்து எழுந்து அவ்வளவு சீக்கிரம் அந்தக் கதவுப் பக்கம் போக முடிந்தது"

அக்‌ஷய் சொன்னான். "இதெல்லாம் பயிற்சி தான்"

எர்னெஸ்டோ சொன்னார். "நீ எழுந்ததையோ, நின்றதையோ, அங்கே போனதையோ நான் பார்க்கவில்லை... நான்கைந்து வினாடியில் அத்தனையும் நடந்து முடிந்தது எப்படி? "

அக்‌ஷய் சிறு புன்முறுவல் பூத்து மௌனமாகவே இருந்தான். எர்னெஸ்டோ அவனை மௌனமாக இருக்க விடுவதாக இல்லை. அது எப்படி என்று அறிந்து கொள்ள அவர் ஆர்வமாக இருந்தார். அக்‌ஷய் சொன்னான். "நீங்கள் ஒரு வினாடி என்று சொல்கிறீர்களே அது ஒன்றும் குறைந்த கால அளவு அல்ல. ஒரு வினாடியை ஒரு ஆயிரத்தால் வகுத்து அதை 'மில்லி செகண்ட்' என்கிறார்கள். அந்த மில்லி செகண்டை ஆயிரத்தால் வகுத்து அதை மைக்ரோ செகண்ட் என்கிறார்கள். அந்த மைக்ரோ செகண்டை ஆயிரத்தால் வகுத்து அதை'நானோ செகண்ட்' என்கிறார்கள். அந்த அளவுகளில் பார்த்தால் வினாடி என்பதே நீண்ட காலம் தான், அப்படி மில்லி செகண்ட், நானோ செகண்ட்களில் கூட நம்மால் இயங்க முடியும். நம் உடலில் எத்தனையோ வேலைகள் அந்த அளவுகோல்களில் தான் நடக்கிறது..."

எர்னெஸ்டோவுக்குத் தலைசுற்றியது. பிரமிப்புடன் அக்‌ஷயைக் கேட்டார். "அப்படி இயங்க நீ எங்கே கற்றுக் கொண்டாய்."

அக்‌ஷய் சொன்னான். "திபெத்தில்"

சினிமா பார்த்து விட்டு உதய் வீடு திரும்பிய போது க்ரிஷும் பத்மாவதியும் பேசிக் கொண்டிருந்தார்கள். பத்மாவதி இன்று போலவே வாரம் ஒரு முறையாவது ஹரிணியை வெளியே கூட்டிக் கொண்டு போக வேண்டும், அது அவனது கடமை என்று இளைய மகனுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தாள். க்ரிஷ் தலையாட்டிக் கொண்டிருந்தான். உதயைப் பார்த்தவுடன் தாயிடமிருந்து தப்பிக்க அவன் கேட்டான். "சிந்து என்ன சொல்கிறாள்?"

"பாவம்டா அவள்" என்று சொன்னபடி தம்பியருகே உட்கார்ந்த உதய் சிந்து அவனிடம் ""யார் பேச்சையாவது கேட்டு என்னை நீங்கள் கைவிட்டு விடுவீர்களோ, வெறுத்து விலகி விடுவீர்களோ என்று பயம்?" என்று கண்கலங்கச் சொன்னதையும் அதற்கு அவன் "யார் என்ன சொன்னாலும் சரி. நீ தான் என் மனைவி. நான் என்றுமே உன்னை விட்டுப் பிரிய மாட்டேன். இது சத்தியம்" என்று வாக்கு கொடுத்திருப்பதையும் மிகவும் உருக்கமாகச் சொன்னான்.

பத்மாவதி கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள். "பாவம் அந்தப் பொண்ணு. அந்த அளவு வாழ்க்கைல அன்பு கிடைக்காமல் கஷ்டப்பட்டிருக்கு. அதனால் தான் அப்படி பயப்படுது"

க்ரிஷ் தானும் முகத்தில் அனுதாபத்தைக் காட்டினான். சிந்து தன் நிலைமையைக் கூடுமானவரை ஸ்திரப்படுத்திக் கொள்ள முயல்வது அவனுக்குப் புரிந்தது. அம்மா சொல்லும் அந்தப் பாவப்பட்ட பெண் மிகவும் விவரமாகத் தான் நடந்து கொண்டு வருகிறாள்... நாளுக்கு நாள் உதய்க்கு சிந்து மேல் உள்ள காதலும் நெருக்கமும் கூடிக் கொண்டே போகிறது என்பதிலும், இனி உண்மையெல்லாம் தெரிய வந்தால் கூட அவனால் அவளைப் பிரிவது மிகவும் கஷ்டம் என்பதிலும் க்ரிஷுக்குச் சந்தேகமில்லை. ஒருவிதத்தில் எல்லாமே அவன் கையை மீறித் தான் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் அவன் இன்னொரு விதத்தில் முயன்று கொண்டிருக்கிறான். கத்தி மேல் நடப்பது போல் ஆபத்து நிறைந்தது தான் அந்த இன்னொரு விதம்.... ஆனால் துணிந்து இறங்கி விட்டதிலிருந்து அவன் பின்வாங்க முடியாது.

அன்றிரவு சிந்துவுக்கு உறக்கம் வரவில்லை. இப்போதும் க்ரிஷின் பார்வை அவள் மனதோடு பதிந்திருப்பது போல் தோன்றியதை அவளால் அலட்சியப்படுத்த முடியவில்லை. க்ரிஷ் விஸ்வம் இந்த இரண்டு பேர் தவிர வேறு யாராவது பார்ப்பது போல் தோன்றியிருந்தால் அவள் பொருட்படுத்தியிருக்க மாட்டாள். பிரமை என்று ஆரம்பக் கணமே அலட்சியப்படுத்தியிருப்பாள். ஆனால் விஸ்வத்திடமும், க்ரிஷிடமும் அவள் உணர்ந்திருந்தது பிரமை அல்ல என்பதை அவள் அறிவாள். இப்போது அவளுக்கு ஒரு புதிய பயம் வேறு ஏற்பட்டிருந்தது. க்ரிஷ் ஹரிணி சொன்னது போல் ஏதோ ஆராய்ச்சி மாதிரி அவள் மனதிலிருப்பதை கவனித்துக் கொண்டிருப்பது உண்மையானால் எப்போதாவது விஸ்வம் எங்கிருந்தாவது அவள் மனதின் மீது அதே முயற்சியை எடுத்தால் என்ன ஆகும்?

விஸ்வம் அந்த சமயத்தில் க்ரிஷ் அவள் மனதைக் கவனித்துக் கொண்டிருப்பதை உடனடியாகக் கண்டுபிடித்து விடுவானல்லவா? அதன் பின் என்ன ஆகும்?

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 90



எர்னெஸ்டோ பிதோவன் இசையையும், ஒயினையும் மறந்து அன்றிரவு அக்‌ஷயின் திபெத் அனுபவங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவன் எப்படி காற்றின் வேகத்தில் நகரக் கற்றுக் கொண்டான் என்பதை விளக்கும் போது அதிகாலை மூன்று மணிக்கு இமாலயக் குளிரில் எழுந்து செய்த பயிற்சிகளைச் சொன்னான். ஒரு நாளுக்கு மூன்று மணி நேரம் தியானம் செய்ததையும், ஏழு மணி நேரம் பயிற்சிகள் செய்ததையும் சொன்னான். மாதக்கணக்கில் இப்படித் தொடர்ந்து செய்து அவன் மனமும், உடலும் இணைந்து அந்த வித்தையில் தேர்ச்சி பெற்றதைச் சொன்னான். தினமும் பத்து மணி நேரம் பல மாதங்கள் தொடர்ந்து அவன் பயிற்சி செய்ததைக் கேட்ட போது மகத்தான விஷயங்கள் சுலபமாகக் கிடைத்து விடுவதில்லை என்று மனதிற்குள் அவர் சொல்லிக் கொண்டார்.

அவர் அவனிடம் கேட்டார். “எங்கே போனாலும் ஒருசில வினாடிகளில் நீ நிறைய விஷயங்களைக் கவனிக்கும் சக்தி படைத்தவன் என்று உன்னைப் பற்றிச் சொன்னார்கள். அது எப்படி சாத்தியமாகிறது?”

அக்‌ஷய் சொன்னான். “அதற்கும் என் குரு தான் காரணம். ஏதாவது பயிற்சிகள் செய்ய சில சமயங்களில் வெளியிடங்களுக்கு என்னை அனுப்புவார். நான் திரும்பி வந்தவுடன் என்னிடம் அந்தப் பயிற்சிகளுக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத பத்து கேள்விகளாவது கேட்பார் .”நீ வருகிற வழியில் எத்தனை ஆடுகள் பார்த்தாய் ,நீ தியானம் செய்த இடத்தில் உன் எதிரில் எத்தனை பைன் மரங்கள் இருந்தன ,நீ நடந்து வந்த போது உன்னைக் கடந்து போன மனிதர்கள் எத்தனை” என்கிற மாதிரி கேள்விகள் எல்லாம் கேட்பார் . ஆரம்பத்தில்எனக்குப் பத்தில் இரண்டு கேள்விகளுக்குக் கூடப் பதில் தெரியாது .சின்னச் சின்ன விஷயங்களையும் கவனிப்பது முக்கியம் என்றுஎன் குரு அடிக்கடி சொல்வார் ….”

எர்னெஸ்டோவுக்கு ஒரு கணம் அவன் மீது பொறாமையாக இருந்தது. எப்படிப்பட்ட அனுபவங்கள் நிறைந்த வாழ்க்கை அவன் வாழ்ந்திருக்கிறான்!

அக்‌ஷய் பழைய நினைவுகளில் புன்னகை பூத்தவனாகச் சொன்னான். ”நான் அவர் இந்தக் கேள்வி கேட்கலாம், அந்தக் கேள்வி கேட்கலாம் என்று எதிர்பார்த்து அதையெல்லாம் கவனித்துக் கொண்டு வந்து பதில் சொல்லத் தயாராயிருப்பேன். ஆனால் அதைத் தெரிந்து வைத்தவர் போல அதை மட்டும் கேட்க மாட்டார். அவர் கேட்கும் கேள்விகளுக்கு நான் யோசித்து தான் பதில் சொல்ல வேண்டியதாயிருக்கும்… அவர் எப்போதும் சொல்வார். “வாழ்க்கையில் எதிர்பார்ப்பதை விட அதிகமாக எதிர்பார்க்காதது தான் நடக்கும். அதற்கு நாம் எப்போதுமே தயாராக இருக்க வேண்டும்.” என்பார்…” எர்னெஸ்டோ அந்த குருவின் தீர்க்கதரிசனத்தையும், அதைத் தன் சீடனுக்கு அவர் சொல்லிக் கொடுத்த விதத்தையும் வியந்தார். மேலும் சிறிது நேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். பின் எர்னெஸ்டோவுக்குக் கண் இமைகள் தானாக மூட ஆரம்பித்தன. இருவரும் உறங்க ஆயத்தமானார்கள்.

அந்த நேரத்திலும் விஸ்வம் உறங்காமல் தியானத்தில் இருந்தான். அவன் இப்போதெல்லாம் பாதாள அறையில் தான் அமர்ந்து தியானம் செய்கிறான். அவன் மனம் டேனியலின் உடலைத் தன் கட்டுப்பாட்டுக்குள் இப்போது முழுமையாக எடுத்துக் கொள்ள ஆரம்பித்திருந்தது. சில நாட்களுக்கு முன் காட்டிய எதிர்ப்பை அந்த உடல் இப்போதெல்லாம் காட்டுவதில்லை…

அவனையே பார்த்தபடி ஜிப்ஸி அமர்ந்திருந்தான். விஸ்வம் அவனை எப்போதுமே ஆச்சரியப்படுத்தத் தவறுவதில்லை. விஸ்வத்துடனான முதல் சந்திப்பு ஜிப்ஸிக்கு இப்போதும் பசுமையாக நினைவிருந்தது. எந்தக் குறிக்கோளும் இல்லாமல், இலக்குமில்லாமல் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து கொண்டிருந்தவன் பின் எப்படி நேரெதிராக மாறி விட்டான்! ஜிப்ஸி எதிர்பார்த்ததற்கும் மேலாக ஒவ்வொரு கட்டத்திலும் விஸ்வத்தின் முன்னேற்றம் இருந்தது. தொடுவானம் நோக்கி விரையும் எரிநட்சத்திரம் போல இலக்குகளை நோக்கிய அவன் பயணம் இருந்தது. இல்லுமினாட்டியில் சேர்ந்து அங்கும் அவர்களிடம் அவன் பிரமிப்பையே ஏற்படுத்தினான். க்ரிஷ் இல்லுமினாட்டியில் பேச வரும் வரை எல்லாமே பிசிறில்லாமல் தான் போனது. அதன் பின் அங்கே நடந்ததை ஜிப்ஸியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

கடைசியில் அவனாலும் விஸ்வத்தைக் காப்பாற்ற முடியாமல் போன போது எல்லாம் முடிந்து விடவில்லை என்று தெரிவிக்கும் விதமாக வூடு சடங்கில் ஆவியை உடலில் வரவழைக்கும் இசையை அவன் மீட்டி அந்த இசையை விஸ்வத்தைச் சேரும் அலைவரிசையில் அனுப்பியும் வைத்தான். அந்த இசை ஆரம்பிக்கும் இடத்தில் ஒரு உடலிலிருந்து உயிர் போய்க் கொண்டிருப்பதைச் சூசகமாகத் தெரிவிக்கவும் செய்தான். விஸ்வம் வாழ்ந்த காலத்தில் செய்த சாதனைகள் எல்லாம் வேறு ரகம். உயிர் போய்க் கொண்டிருக்கும் போது அவன் கற்ற வித்தைகளோடு இன்னொரு உடலுக்கு வந்து சேர்வது வேறு ரகம். உயிரோடிருக்கையில் விஸ்வம் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தவன் தான். ஆனால் அது அவன் முழுமையாகத் தயார்நிலையில் இருந்து திட்டமிட்டுச் சாதித்தது. ஒரு உடல் அழியும் நிலையில் இருக்கையில் அதிலிருந்து வெளியேறி இன்னொரு உடலை நிரந்தரமாக அடைவது வேறு ரகம் மட்டுமல்ல. சக்திகளைத் துல்லியமாக வசப்படுத்தி வைத்திருந்த ஒருவனுக்குத் தயார்நிலையிலும் இருந்தால் மட்டுமே சாதிக்க முடிந்த உச்ச ரகம். கூடுவிட்டுப் பாயும் வழி இருக்கிறது, உடலும் இருக்கிறது என்று தெரிவித்ததை, பழைய உடலை இழந்து கொண்டிருந்த இக்கட்டான நிலையில் இருந்த விஸ்வம் பயன்படுத்திச் சாதித்தது இதுவரை யாரும் சாதிக்காத சாதனை தான்….

ஜிப்ஸி அவன் சாதனையையும், அதைத் தொடர்ந்து இந்தக் கணம் வரை அவன் எடுத்துக் கொண்டிருக்கும் தளராத முயற்சியையும் வியந்தபடி எழுந்து பாதாள அறையிலிருந்து மேலே சென்றான். ’இவன் கண்டிப்பாக வெல்வான். இவனோடு சேர்ந்து நானும் வெல்வேன்’ என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

சில நிமிடங்கள் கழித்து விஸ்வம் கண் திறந்தான். அந்தப் பாதாள அறையில் இருள் மண்டிக் கிடந்தது. என்றாலும் எதிர் சுவரில் இருந்த கதேயின் கவிதை மட்டும் மெலிதாக மிளிர்ந்தபடி இருந்தது. அந்தக் கடைசி வரிகளை மறுபடியும் படித்தான்.

"Choose well; your choice is
"Brief and yet endless; "Here eyes do regard you
"In eternity's stillness; "Here is all fullness,
"Ye have to reward you, "Work, and despair not."

அந்த வார்த்தைகளில் எல்லையில்லாத சக்தி இருந்தது. அது அவனுடைய அந்தராத்மாவைத் தொட்டுப் புத்துணர்ச்சியை எழுப்பியது. அவன் ஆழமாக நம்பினான். தனக்குள்ளே அந்தக் கணமே சத்தியமும் செய்து கொண்டான். “நான் கண்டிப்பாக வெல்வேன். நிச்சயமாகத் தோற்க மாட்டேன்”

இம்மானுவல் அக்‌ஷய் வந்ததிலிருந்து எர்னெஸ்டோவின் பாதுகாப்பு பற்றிய கவலையை விட்டொழித்திருந்தான். எர்னெஸ்டோவுக்கு அக்‌ஷயை விடச் சிறந்த மெய்க்காப்பாளனை உலகத்தில் கண்டிப்பாக அவனால் தேடிக் கண்டுபிடித்திருக்க முடியாது. அந்த விஷயத்தில் நிம்மதியைடைந்திருந்த அவன் மற்ற விஷயங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்த விட்டான். அவனுக்கு இப்போதும் சிந்து பற்றிய சந்தேகம் இருந்து கொண்டே இருந்தது. நேரடியாகச் சொல்லா விட்டாலும் எல்லாத் தகவல்களையும் அவன் க்ரிஷுக்குத் தந்திருக்கிறான். க்ரிஷ் அதை அலட்சியம் செய்திருக்க மாட்டான். ஆனால் சிந்து பற்றிய எந்தப் புகாரும், சந்தேகமும் க்ரிஷிடமிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் சிந்து விஸ்வத்தின் ஆளாக இருக்க வாய்ப்பில்லை. அதனால் அந்த நம்பர் தெரியாத இண்டர்நேஷனல் காலும் விஸ்வம் செய்ததாக இருக்க வாய்ப்பில்லை என்று அவள் பற்றிய கவலையையும் இம்மானுவல் விட்டொழித்தான்.

அவன் இப்போது முழுக்கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிற ஆள் விஸ்வத்தின் கூட்டாளி தான். அவனைப் பற்றி இம்மானுவல் இதுவரை சேகரித்திருக்கும் தகவல்கள் எல்லாம் ஓரளவு திருப்திகரமாகவே இருந்தன. இன்னும் சில தகவல்கள் மட்டும் வர பாக்கி இருந்தன. மூன்று நாட்களுக்குள் அவையும் கிடைத்து விடும். அப்படிக் கிடைத்து விட்டால் ஒரு தீர்மானத்திற்கு வர அவன் க்ரிஷை ஜெர்மனிக்கு வரவழைப்பது என்று முடிவு செய்தான். க்ரிஷ் வந்தால் விஸ்வத்தின் கூட்டாளி பற்றித் தெளிவு பிறந்து விடும்!

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, February 25, 2021

இல்லுமினாட்டி 91



சிந்துவின் நோக்கத்தை க்ரிஷ் அறிந்து விட்டான் என்பதையும், ஏதோ காரணத்தால் அவளை ஒன்றும் செய்யாமல் இருக்கிறான் என்பதையும், சிந்துவின் மனதை இப்போதும் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருக்கிறான் என்பதையும் விஸ்வம் அறிந்து விட்டால் என்ன ஆகும் என்று யோசித்த போது சிந்து அடிவயிற்றிலிருந்து அச்சத்தை உணர்ந்தாள். அடுத்ததாக க்ரிஷை அவன் என்ன செய்வான் என்பது தெரியா விட்டாலும் அவளை என்ன செய்வான் என்பது சிந்துவுக்குத் தெரிந்தே இருந்தது. இனி அவள் மூலம் க்ரிஷுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது என்றும், இனி அவளால் எந்தப் பயனும் இல்லை என்றும் அவனுக்கு உறுதியாகத் தெரியுமானால் உடனடியாக அவளைக் கொன்று விட அவன் தயங்க மாட்டான். இது தெளிவாகத் தெரிந்த பின் அவளால் உறங்க முடியவில்லை. அவள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். இந்த இரண்டு மனோசக்தி மனிதர்களுக்கு இடையில் இப்படி வசமாக மாட்டிக் கொண்டோமே என்று அவள் மனம் புலம்பியது.

இப்படியொரு இக்கட்டான நிலையைச் சரிசெய்ய எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது அவளுக்கே அவள் மேல் கோபத்தை வரவழைத்தது. ஏதாவது செய்தேயாக வேண்டும் என்கிற அவசரத்தை அவள் தீவிரமாக உணர்ந்தாள். என்ன செய்வது, எப்படிச் செய்வது என்பதைத் தீர்மானிக்கும் முன் தன் பக்கம் இருக்கும் சாதக, பாதகங்களைத் தெளிவாக அறிந்திருப்பது நல்லது என்று நினைத்த அவள் ஒரு வெள்ளைத் தாளையும், ஒரு பேனாவையும் எடுத்துக் கொண்டாள்.

தாளில் சாதகம் என்று எழுதி அடிக்கோடிட்டாள். பின் கீழே எழுத ஆரம்பித்தாள்.

- விஸ்வம் என்னை ஆழமாகக் காதலிப்பது.
- என்ன ஆனாலும் சரி என்னையே கல்யாணம் செய்வதாய் சத்தியம் செய்திருப்பது.
- பத்மாவதியும் என்னை மருமகளாகவே நினைக்க ஆரம்பித்திருப்பது.
- என் மேல் அவர்கள் கண்டுபிடிக்கிற மாதிரி எந்தப் போலீஸ் ரிகார்ட்டும் இல்லை.
- விஸ்வத்தின் ஆள் நான் என்று கண்டுபிடிக்கவும் அவர்களிடம் எந்த ஆதாரமும் இல்லை.
- அதனால் கடைசி வரை எந்தக் குற்றச்சாட்டு வந்தாலும் அரசியல்வாதிகள் போல "பொய், பொய், பொய்" என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

தாளில் பின்பக்கத்தில் பாதகம் என்று எழுதி அடிக்கோடிட்டு எழுத ஆரம்பித்தாள்.

- க்ரிஷ் மீது அவன் குடும்பத்தாருக்கு இருக்கும் அன்பும், நம்பிக்கையும் என்னால் கூட மாற்ற முடியாதது.
- விஸ்வத்தைப் போலவே க்ரிஷும் சில அபூர்வ சக்திகளை வைத்திருப்பது. அதற்கு உதாரணம் என்னைக் கண்டுபிடித்தது.
- ஒருவேளை க்ரிஷ் என்னைக் குற்றவாளியாகச் சொன்னால் அவன் தந்தை அவன் பக்கம் தான் நிற்பார். அவர் ஆரம்பத்தில் இருந்தே என்னிடம் ஒரு இடைவெளி விட்டே தான் பழகுகிறார். முதலமைச்சர் பதவியில் இருக்கும் அவர் என்னை என்ன வேண்டுமானாலும் செய்ய முடிந்தவராக இருக்கிறார்.
- க்ரிஷ் என்னைக் குற்றவாளியாகச் சொன்னால் உதய் தம்பியை வெறுத்து என் பக்கம் வந்து விட மாட்டான். பெரும்பாலும் இருபக்கமும் விடமுடியாதபடி தான் இருப்பான்.
- அப்படி ஒரு நிலை வந்தால் பத்மாவதி எனக்காக வருத்தப்படலாம். ஆனால் சின்ன மகனை எதிர்க்கும் நிலையைக் கண்டிப்பாக எடுக்க மாட்டாள்.
- கண்டிப்பாக இங்கிருந்து தப்பித்துப் போக முடிகிற வாய்ப்பு இல்லவே இல்லை.

இரண்டு பக்கத்திலும் எழுதியதை ஒரு முறை படித்துப் பார்த்து விட்டு சிந்து யோசித்தாள். குழப்பத்தில் ஸ்தம்பித்து விடுவதைப் போல முட்டாள்தனம் எதுவும் இருக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது. ஏதாவது செய்தாக வேண்டும். என்ன செய்வது? முதலில் க்ரிஷ் மனதில் என்ன உள்ளது, என்ன கண்டுபிடித்து வைத்திருக்கிறான் என்பது உறுதியாகத் தெரிய வேண்டும். வெறும் அனுமானங்கள் இதுபோன்ற வாழ்வா சாவா என்கிற சூழ்நிலையில் உதவாது. துணிச்சலாக க்ரிஷை எதிர்கொள்ள வேண்டும்... அது அவளைப் பற்றிய உண்மையை அவன் சொல்லி விடுவதில் கூட முடியலாம். ஆனால் அவன் கடவுள் அல்ல. அவன் சொன்னது எல்லாமே சரியாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை என்பதைக் கேட்பவர்கள் மனதில் பதித்து விட முடியும். அது பொய் என்று அவள் தைரியமாக மறுக்க முடியும். பல முறை பொய் என்று சொன்னால் எப்படிப்பட்டவனுக்கும் அப்படித் தானிருக்குமோ என்ற சந்தேகம் வரும்.

இந்த முடிவு எடுத்தவுடன் மனம் சற்று அமைதியடைந்தது. இதை எப்படிச் செயல்படுத்துவது என்று யோசித்து அவள் ஒரு முடிவுக்கு உடனடியாக வந்தாள். உதயை வைத்துக் கொண்டே அவள் க்ரிஷை எதிர்கொள்வது என்று முடிவெடுத்தாள். க்ரிஷ் அவளை எதிர்த்து அப்புறப்படுத்தாதற்குக் காரணம் உதய் அவள் மீது வைத்திருந்த காதலாக இருக்குமானால் அவன் உதயை அருகில் வைத்துக் கொண்டு சொல்லத் தயங்குவான். அப்படி இல்லாமல் அவன் தன் எந்த சந்தேகத்தைச் சொன்னாலும் சரி. நிலைமை என்ன என்று தெரியாமல் குழப்பத்துடன் இருப்பதை விடத் தெளிவாய் புரிந்து கொள்வதே நல்லது.

அவள் அதன் பின் நிம்மதியாக உறங்கினாள். மறுநாள் அதிகாலையிலேயே வழக்கம் போல் உதய் அவளுக்குப் போன் செய்த போது பேச்சினிடையே கேட்டாள். "உங்கள் தம்பி என்னைப் பற்றி என்ன சொன்னார்?"

உதய் குழப்பத்துடன் கேட்டான். "ஒன்றும் சொல்லவில்லை. ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

சிந்து சொன்னாள். "அவர் ஏதோ என்னைப் பற்றிப் புரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டு இருக்கிறார் என்று நேற்று சொன்னீர்களே. பின் நீங்கள் என்ன இருந்தாலும் உங்களிடம் சொல்லக்கூடச் சொன்னீர்களே. அதனால் தான் அவர் உங்களிடம் தனியாக என்னைப் பற்றிக் கண்டுபிடித்ததை ஏதாவது சொன்னாரா என்று கேட்டேன்"

உதய் சிரித்தான். "அதைச் சொல்கிறாயா? அவனாக எதையும் சொல்லவில்லை. நானும் அவனிடம் எதையும் கேட்கவில்லை"

சிந்து சொன்னாள். "எனக்கு அதைத் தெரிந்து கொள்ள ஆசையாய் இருக்கிறது. அவர் மாதிரி புத்திசாலி என்னைப் பற்றி எனக்கே தெரியாத ஏதாவது ஒன்றைக் கூடக் கண்டுபிடித்திருக்கலாம். நான் எப்போதுமே பத்திரிக்கைகளில் வரும் சைக்காலஜி க்விஸ் எல்லாம் படித்து பதில் குறித்துக் கொண்டு என்னைப் பற்றி கணிப்பு என்ன சொல்கிறது என்று படிப்பேன்... அதனால் தான் அவர் என்ன கணித்திருக்கிறார் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்..."

உதய் சொன்னான். "நீயே வந்து அவனிடம் கேள்..."

சிந்து குரலில் முழு ஆர்வத்தைக் காட்டிச் சொன்னாள். "அப்படியானால் நான் இன்றைக்கு சாயங்காலமே வரட்டுமா?

உதய் சந்தோஷமாகச் சொன்னான். "சரி வா?"

சிந்து சொன்னாள். "ஆனால் நான் அவரிடம் கேட்க வருகிறேன் என்பதை அவரிடம் சொல்லி விடாதீர்கள். திடீரென்று வந்து கேட்டால் தான் அவருக்கு யோசிக்க நேரம் இருக்காது. அப்போது தான் அவர் உள்ளதை உள்ளபடியே சொல்வார்" உதய் சம்மதித்தான்.

கர்னீலியஸின் மனம் அன்று சலனங்கள் அதிகமில்லாமல் இருந்தது. அது அபூர்வமாகத் தான் அமையும் என்பதால் அப்படி உணர்ந்தவுடன் அந்தப் பயிற்சியை ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் அந்த ரகசிய ஆவணத்தை முதல் முதலில் படித்த கணத்திற்கே போனார். அந்த ஆவணத்தைக் கையில் பிடித்த உணர்வை இப்போதும் தத்ரூபமாக அவரால் உணர முடிந்தது. பிரித்துப் பார்க்கிறார்.... அவருக்கு வேண்டியிருந்த அந்த பக்கத்திற்கு வந்தார். வாசகங்களை அவரால் தெளிவாகவும், தங்குதடையில்லாமலும் படிக்க முடிந்தது....

"முன்கூட்டிக் கணக்கிட்டு, காலம் நிர்ணயித்து ஓருடல் விட்டு மறு உடல் போவது யாம் அறிந்ததே, பல முறை கண்டதே! ஓருடல் நஷ்டப்பட்டு அழியும் போது வெளியேறி மறு உடல் கண்டு சேர்ந்து நிரந்தரமாய்த் தங்கும் புதிய முயற்சி அரங்கேறும் போது ஆபத்துக் காலம் உச்சம் சென்றதென்று அறிக. இது நீங்கள் அறியாது நடக்க வழியில்லை. நடந்த பின் அறிவது உறுதி. மறு உடல் கண்ட மனிதன் மறைய உதவி கிடைக்கும். நீங்கள் தொழுத இடம் போய்ச் சேரும். உங்கள் மகாகவி ஒருவன் அற்புதக் கவிதை ஒன்றை எழுதிய அவ்விடம் இரு தளம் கொண்டது....."

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, March 4, 2021

இல்லுமினாட்டி 92



அலைபேசி அலற ஆரம்பித்தது. கர்னீலியஸ் அதை மௌனமாக்கி விட்டு இந்தப் பயிற்சியைச் செய்ய ஆரம்பித்திருக்க வேண்டும் என்று தன்னையே கடிந்து கொண்டார். அலட்சியம் செய்து விட்டுத் தொடர அந்தச் சத்தம் அனுமதிக்கவில்லை. பெருமூச்சு விட்டவராக அந்தக் கடைசி வாசகத்தை மறுபடி நினைவுபடுத்திக் கொண்டார். "உங்கள் மகாகவி ஒருவன் அற்புதக் கவிதை ஒன்றை எழுதிய அவ்விடம் இரு தளம் கொண்டது....". அதை மனதின் ஒரு மூலையில் நினைவுபடுத்திக் கொண்டே அலைபேசியில் அழைப்பது யாரென்று பார்த்தார். வாங் வே.

அலைபேசியை எடுத்துப் பேசிய கர்னீலியஸ் எந்த சந்தர்ப்பத்தில் அவருடைய அழைப்பு வந்திருக்கிறது என்று விளக்கிய போது வாங் வே பல முறை மன்னிப்பு கேட்டார். அது சம்பிரதாயமான வார்த்தைகளாக இருக்காமல் உண்மையாகவே அவர் உணர்ந்ததாய் இருந்தது. தினமும் ஏதாவது கூடுதலாகத் தெரிந்ததா, தெரிந்ததா என்று கேட்கும் அவர் இந்த முறை, தெரிய ஆரம்பித்ததை இடைமறித்து விட்டோமே என்று பச்சாதாபப்பட்டார். எல்லா நேரங்களிலும் பயிற்சி பலனளிப்பதில்லை, சில அபூர்வ சமயங்களில் மட்டுமே மனம் லயித்து வெற்றி கிடைக்கிறது என்று கர்னீலியஸ் அவரிடம் முன்பே சொல்லியிருந்தது அவருடைய குற்றவுணர்ச்சியை அதிகரித்திருந்தது. அவர் மட்டும் இப்போது 'ஏதாவது கூடுதலாகத் தெரிந்ததா?' என்று கேட்கப் போன் செய்யாமல் இருந்திருந்தால் முழுமையாகவே எல்லா விவரங்களும் கிடைத்திருக்கலாம்; அவர் என்ன செய்வது என்று அதற்கேற்றபடி தீர்மானித்திருக்கலாம்...

இந்த எண்ண ஓட்டத்தில் மனம் நொந்தவராக வாங் வே "இனிமேல் நான் போன் செய்ய மாட்டேன். நீங்களே போன் செய்யுங்கள்..." என்று சொல்லி, கூடுதலாகத் தெரிந்த அந்த ஒரு வாக்கியத்தை அவரிடம் கேட்டு எழுதிக் கொண்டார்.

மாலை நேரத்தில் சிந்து உதயின் வீட்டுக்குப் போன போது வீட்டில் பத்மாவதி இருக்கவில்லை. அவள் ஏதோ கோயிலுக்குப் போயிருந்தாள். உதயும், கிரிஷும் மட்டும் தான் வீட்டில் இருந்தார்கள்.

வாசலுக்கு வந்து வரவேற்ற உதயிடம் சிந்து கேட்டாள். "நான் வருவது க்ரிஷுக்குத் தெரியாது தானே? நீங்கள் சொல்லவில்லை அல்லவா?"

அவன் புன்னகையுடன் "சொல்லவில்லை" என்று சொன்னான். சிந்துவுக்குத் திருப்தியாக இருந்தது. இருவரும் சேர்ந்து க்ரிஷ் அறைக்குப் போனார்கள். உள்ளே க்ரிஷ் தரைவிரிப்பு ஒன்றில் தியானத்தில் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு எதிரே ஒரு தேஜஸ்வியான மனிதரின் புகைப்படம் இருந்தது. அவள் வாயைத் திறந்து யாருடைய புகைப்படம் அது என்று கேட்க முற்பட்ட போது உதய் அவள் உதடுகளில் விரலை வைத்து 'சத்தம் வேண்டாம்' என்று எச்சரிக்கை செய்தான்.

சிந்து தலையசைத்தாள். ஆனாலும் உதய் அவள் உதடுகளில் இருந்து அவனுடைய விரலை எடுக்காமல் அவளைக் காதல் பார்வை பார்க்க அவள் அவன் விரலுக்கு முத்தமிட்டு வைத்தாள். இது போன்ற செய்கைகளில் ஆரம்பத்தில் உணர்ந்த அருவருப்புகளை அவள் உதறித்தள்ளப் பழகியிருந்தாள். சின்ன சந்தோஷத்துடன் அவன் விரலை எடுத்தான். சிந்துவுக்கு ஒருவிதத்தில் க்ரிஷ் தியானத்தில் இருந்தது வசதியாக இருந்தது. க்ரிஷையும் அவன் அறையையும் அவன் அறியாமல் ஆராய அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

க்ரிஷ் சிலை போல அமர்ந்திருந்தான். அவன் முகத்தில் தெரிந்த அமைதி அவளுக்கு அசாதாரணமாகத் தெரிந்தது. அவன் ஏதோ ஒரு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறான் என்று தோன்றியது. அவனுடைய பெரிய அறையில் இரண்டு அலமாரிகளில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அறிவியலில் இருந்து ஆன்மிகம் வரை எல்லாத் துறைகளிலும் புத்தகங்கள் இருந்தன. சில புத்தகங்களை எடுத்துப் பார்த்தாள். எடுத்துப் பார்த்த எல்லாப் புத்தகங்களிலும் பல பக்கங்களில் பக்கவாட்டில் க்ரிஷ் எழுதிய குறிப்புகள் இருந்தன. அவன் படிக்காமல் வெறுமனே எடுத்து வைத்திருக்கிற புத்தகங்கள் எதுவும் இல்லை என்பது புரிந்தது. அவனைப் பற்றி அவள் படித்திருந்த குறிப்புகளில் எத்தனையோ படித்திருந்த போதும் நேரில் பார்த்து உணர்வது கூடுதல் பிரமிப்பாக இருந்தது...

க்ரிஷின் குரல் கரகரத்துக் கேட்டது. "என்ன ரெண்டு பேரும் திடீர்னு?"

சிந்து திரும்பி க்ரிஷைப் பார்த்தாள். தியானத்திலிருந்து மீண்டிருந்த அவன் முகத்தில் அந்தப் புகைப்படத்தில் இருந்த ஆளைப் போலவே தனி தேஜஸ் தெரிந்த மாதிரி உணர்ந்தாள். ஏதோ ஒரு பேரின்ப அனுபவத்திலிருந்து திரும்பியவன் போல் அவன் குரல் மென்மையும் நிறைவும் கொண்டதாய் இருந்தது. அந்தத் தியான அனுபவத்தினாலோ என்னவோ வழக்கமாய் பார்க்கும் சந்தேகத்துடன் சேர்ந்த கூரிய பார்வையையும் காணோம். அவளை அன்பாகவே அவன் பார்த்த மாதிரி இருந்தது.

சிந்து சொன்னாள். "உங்க கிட்டே எனக்கு கொஞ்சம் கேட்க வேண்டியிருந்தது. அதனால் தான் நேரிலேயே பார்த்துப் பேசலாம் என்று வந்தேன்."

உதய் லேசாய் சிரித்துக் கொண்டே சொன்னான். "உன் கிட்டே சொல்ல வேண்டாம்னு சொன்னாள். திடீர்னு வந்து கேட்டால் தான் நீ உள்ளதை உள்ளபடி சொல்வாயாம்"

சிந்து முதலில் அந்தப் புகைப்படத்தைக் காட்டிக் கேட்டாள். "இது யார் ஃபோட்டோ"

க்ரிஷ் புன்னகையுடன் சொன்னான். "இது என் குரு. மாஸ்டர்னு கூப்பிடுவோம்... இதைக் கேட்கத் தான் வந்தாயா என்ன?"

உதய் சிந்துவிடம் சொன்னான். "முதல்ல உட்கார். அவன் அறைக்கு வந்தால் அவனாய் எப்போதும் உட்காரச் சொல்ல மாட்டான். ஏன்னா நாம உட்கார்ந்தா சீக்கிரம் வெளியேற மாட்டோம். அவனோட படிப்பு, ஆராய்ச்சி எல்லாம் தடைப்பட்டுப் போகும்னு நினைப்பான். அதனால நமக்கு வேணும்னா நாமளா உட்கார்ந்துக்கணும்"

சொல்லி விட்டு அங்கிருந்த இருக்கை ஒன்றில் சிந்துவை அமர வைத்து விட்டுத் தானும் ஒரு இருக்கையில் உதய் உட்கார்ந்து கொண்டான். க்ரிஷ் அண்ணனைப் பார்த்து அசட்டுச் சிரிப்பு சிரித்தது அவன் சொன்னது பொய் அல்ல என்று ஒத்துக் கொள்வதாய் இருந்தது.

சிந்து ஒரு புன்னகை உதிர்த்து விட்டுச் சொன்னாள். "இல்லை நான் என்னைப் பற்றிக் கேட்க வந்தேன். ஹரிணி என்னைப் பற்றி நீங்க ஏதோ ஆராய்ச்சி செய்துகிட்டிருக்கிறதா சொன்னாள் அல்லவா. அதனால் தான் என்ன கண்டுபிடித்திருக்கிறீர்கள் என்று உங்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று வந்தேன்...."

உதயை வைத்துக் கொண்டே இப்படித் தைரியமாகக் கேட்கும் அவள் துணிச்சலை க்ரிஷால் மெச்சாமல் இருக்க முடியவில்லை. புத்திசாலித்தனத்தோடு சேர்ந்திருக்கும் இந்தத் தைரியத்திற்காகத் தான் விஸ்வம் இவளைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்....

உதய் சொன்னான். "பத்திரிக்கைகளில் வரும் சைக்காலஜிகல் க்விஸ் மாதிரி கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லி என்ன கணிப்பு கொடுத்திருக்கிறார்கள் என்று படித்துப் பார்ப்பதில் எல்லாம் இவளுக்கு ஆர்வமாம்..."

க்ரிஷ் உடனடியாக எதையும் சொல்லாமல் யோசித்தான். முடிவில் அவன் "நான் உன்னை வைத்து ஆராய்ச்சி எல்லாம் செய்யவில்லை. அவர்கள் சும்மா சொல்கிறார்கள்" என்று சொல்வான் என்று சொல்லித் தவிர்க்கப் பார்ப்பான் சிந்து எதிர்பார்த்தாள்.

ஆனால் க்ரிஷ் அப்படிச் சொல்லாமல் அவளை அசத்தினான். "சிந்து. உண்மை எல்லா நேரங்களிலும் கசப்பானது தான். அதனால் தான், சொல்ல வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வரும் போது கூட, அதற்குக் கொஞ்சம் தேன்பூசி இனிமையாகச் சொல்லி, புத்திசாலிகள் எதிர்ப்பு வராதபடி தப்பிக்கிறார்கள். எனக்கு அப்படி இனிமையாகச் சொல்லும் வித்தை எல்லாம் தெரியாது. உள்ளதை உள்ளபடி சொல்வேன். நீயும் வாய் வார்த்தைக்கு அப்படிச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்து வந்ததாய்ச் சொன்னாலும், நான் சொல்வதை எப்படி எடுத்துக் கொள்வாய் என்று எனக்குத் தெரியாது. நீ வருத்தப்பட்டால் இவன் என்னைச் சும்மா விட மாட்டான். கோபம் வந்து என்னோடு சண்டைக்கு வருவான். எதற்கு வம்பு? நான் எதுவும் சொல்லா விட்டால் உனக்கும் நிம்மதி. இவனுக்கும் திருப்தி"

சிந்து க்ரிஷின் இந்த உபாயத்தை எதிர்பார்க்கவில்லை. என்ன சொல்லப் போகிறான் என்று தெரியாவிட்டாலும் கசப்பானதாகத் தான் இருக்கும் என்று சொல்கிறான். அதைக் கேட்டு அவளுக்கு வருத்தமாகும் என்கிறான். உதய்க்குக் கோபம் வரும் என்கிறான். அப்படியும் சொல்லச் சொன்னால் ஏடாகூடமாய் என்னென்ன சொல்வான் என்று சொல்ல முடியாது. சொல்லி அவள் மறுத்தால் 'இதற்காகத் தான் நான் சொல்ல மாட்டேன். நீ தான் என்னை வற்புறுத்திக் கேட்டாய்' என்று சொல்வான்....

ஆனால் எதையும் தெரிந்து கொள்ளாமல் திரும்பிப் போய் குழப்பத்திலும், பயத்திலுமேயே மறுபடியும் தங்கியிருக்க சிந்துவுக்குச் சிறிதும் விருப்பமிருக்கவில்லை. என்ன ஆனாலும் சரி அவன் மனதில் உள்ளதை வாய் விட்டுச் சொல்ல வைக்காமல் அவள் திரும்பிப் போவதாய் இல்லை.

"பரவாயில்லை சொல்லுங்கள். சொல்வது உண்மையாக இருந்தால் நான் கண்டிப்பாக வருத்தப்பட மாட்டேன்." என்று சிந்து தைரியமாகச் சொன்னாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, March 11, 2021

இல்லுமினாட்டி 93



"சொல்வது உண்மையாக இருந்தால் நான் கண்டிப்பாக வருத்தப்பட மாட்டேன்" என்று சிந்து சொன்னதில் அவளுடைய சாமர்த்தியத்தை க்ரிஷால் பார்க்க முடிந்தது. சொன்ன பிறகு "நீ சொல்வது உண்மையல்ல. அதனால் தான் வருத்தப்படுகிறேன்" என்று சொல்ல வழியை ஏற்படுத்திக் கொண்டே அவள் பேசுகிறாள்...

க்ரிஷ் சொன்னான். "சரி நான் சொல்கிறேன். நான் பேசும் போது நீ குறுக்கே பேசக்கூடாது. முழுவதும் கேட்க வேண்டும். உனக்கு எதாவது சொல்ல இருந்தால் நான் பேசி முடித்த பிறகு நீ சொல்லலாம். நீ பேசும் போது நானும் குறுக்கிட மாட்டேன். சரியா?"

சிந்துவுக்கு அவனுடைய அந்த நிபந்தனை பிடிக்கவில்லை. உண்மையைப் பேசுபவனை முழுவதும் பேச அனுமதித்தால் அது ஆபத்து. அவன் முடித்த பின் பேச ஒன்றுமிருக்காது... ஆனால் அவள் அந்த நிபந்தனைக்கு ஒத்துக் கொண்டால் ஒழிய அவன் எதுவும் சொல்ல மாட்டான் என்று அவனைப் பார்க்கையிலேயே புரிந்தது. இருந்தாலும் அவன் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் படுகிற மன உளைச்சலை உடனடியாக முடித்துக் கொள்ள தீர்மானித்து விட்டு வந்திருப்பதால் அவள் சரியென்று தலையசைத்தாள்.

க்ரிஷ் எழுந்து ஒரு நாற்காலியை சிந்துவுக்கு முன்னால் இழுத்துப் போட்டு அதன் நுனியில் உட்கார்ந்தான். பின் மிக மென்மையான குரலில் அவன் சொல்ல ஆரம்பித்தான். "சிந்து உலகத்தில் அன்பானவர்கள், அன்பில்லாதவர்கள் என்று இரண்டு பிரிவிலும் நிறைய ஆட்கள் இருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக உன் வாழ்க்கையில் சிறிய வயதில் உனக்கு அன்பானவர்கள் கிடைக்கவில்லை. பிஞ்சு வயதில் அப்படிப்பட்ட அனுபவம் கஷ்டம் தான். ஆனால் பெற்றோரும், உறவுகளும் அமைவது நம் தீர்மானத்தில் இல்லை. அன்பு கிடைக்காத அந்தச் சூழ்நிலையில் உன்னைத் தவிர வேறு எந்தக் குழந்தையாவது வளர்ந்திருந்தால் உடைந்து போயிருக்கும், நீ திடமான மனதுடன் அருமையாகச் சமாளித்தாய். ஆனால் அன்பை எதிர்பார்த்தால் மனம் ரணமாகும் என்ற தப்பான பாடத்தையும் நீ படித்துக் கொண்ட மாதிரி எனக்குத் தெரிகிறது. தனியாகவே இருப்பது மன வலியையும், ஏமாற்றங்களையும் தவிர்க்க நல்ல வழி என்று ஒரு தீவாகவே நீ வாழ்ந்து விட்டாய்..."

சிந்து எதை எதிர்பார்த்திருந்தாலும் இதைச் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை என்பது அவளைப் பார்க்கும் போதே தெரிந்தது. க்ரிஷ் தொடர்ந்தான். "அன்பான குடும்பம் அமையாததால் அன்பே தேவையில்லை என்று நீ இருந்து விட்டது சரியல்ல. குடும்பத்தில் கிடைக்காதது வெளியேயும் கிடைக்காது என்று நினைத்ததும் சரியாகத் தெரியவில்லை. நீ முயற்சி செய்திருந்தால் உனக்கு நல்ல நண்பர்கள், தோழிகள் கிடைத்திருப்பார்கள். ஒரு அன்பான, இயல்பான வாழ்க்கையை அவர்கள் மூலம் நீ வாழ்ந்திருக்கலாம். அதற்குப் பதில் நீ உன் தாயின் தவறுக்கும், தந்தையின் தவறுக்கும் உன்னையே தண்டித்துக் கொண்டிருக்கிறாய். அது தேவையாக இருந்திருக்கவில்லை."

சிந்து சிலை போல அமர்ந்திருந்தாள். அவள் பேச நினைத்திருந்தாலும் அவளால் பேச முடிந்திருக்காத நிலையில் இருந்தாள். அவள் இதயத்தின் ரணத்தை அவன் இப்படி வெளிப்படையாகப் பேசி உரசுவான் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. உதய்க்கு க்ரிஷ் சொல்வதெல்லாம் உண்மையாக இருந்தாலும் இப்போது தேவையில்லாமல் அவளுடைய சின்ன வயதுக் கஷ்டத்தைச் சொல்லிக் காட்டியிருக்க வேண்டாம் என்று தோன்றியது. இப்போது அவள் மாறி அவனைக் காதலிக்க ஆரம்பித்திருக்கிறாள், அவர்கள் குடும்பத்தை நேசிக்க ஆரம்பித்திருக்கிறாள். அப்படி இருக்கையில் என்றோ இருந்த நிலைமையைப் பற்றி ஏன் இவன் பேசுகிறான் என்று நினைத்தான். மேலும் க்ரிஷ் கடைசியாகச் சொன்ன வார்த்தையில் தவறுதலாகத் 'தாய்' என்று சொல்லி விட்டதாக நினைத்தான். அவன் தம்பியிடம் சொன்னான். "க்ரிஷ் சிந்து சின்னவளாக இருக்கும் போதே அம்மா இறந்துட்டாங்க. நீ அவளோட சித்தியைச் சொல்றாய்ன்னு நான் நினைக்கிறேன்"

க்ரிஷ் அண்ணனிடம் ஒன்றும் சொல்லாமல் தலையை மட்டும் அசைத்து விட்டுத் தொடர்ந்தான். "உனக்கு யாரும் அவசியமில்லை, யாருடைய அன்பும் அவசியமில்லை, உனக்கு வேண்டிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும் அளவு நீ சம்பாதிக்கிறாய். அதை வைத்துக் கொண்டு நிம்மதியாய் வாழ்வாய் என்று நம்பிக் கொண்டிருக்கிறாய். அது தவறு சிந்து"

உதய் முதல் முறையாய் தம்பி மேல் குறை கண்டுபிடித்தான். க்ரிஷ் அறிவுஜீவி தான். அவள் இங்கு வரும் வரை இருந்த நிலைமையை அவன் கண்டுபிடித்திருக்கலாம். ஆனால் அதை இப்போது அலச வேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்தவனாய் சொன்னான். "அந்தப் பழைய கதை எல்லாம் இப்ப எதுக்குடா? சிந்து இப்ப என்னைக் காதலிக்க ஆரம்பிச்சிருக்கா. நம் குடும்பத்தை நேசிக்க ஆரம்பிச்சிருக்கா. அவள் மாறுவதற்கு இப்போது தான் அவளுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. அவ மாறிட்டா."

க்ரிஷ் பொறுமையாய் அண்ணனிடம் சொன்னான். "இப்பவும் கூட சில சமயங்கள்ல சிந்து அவள் போட்டுகிட்ட வட்டத்துக்குள்ளயே வாழற மாதிரி தோணுதுண்ணா. முழுசா வெளியே வர முடியலைன்னு பார்க்கறேன். இங்க இருக்கிறப்ப கூட அவள் மனசு அவள் குடும்பத்தை, அவர்கள் நடந்துகிட்டதை, அப்பப்ப ஒப்பிட்டுப் பார்த்துக்கற மாதிரி தோணுது. அவள் எதை எல்லாம் இழந்தாள்னு அவள் கணக்கெடுக்கற மாதிரி பட்டதால தான் சொன்னேன்..."

சிந்து தன் வாழ்க்கையின் மிக உச்சக்கட்ட வலியில் அந்தக் கணம் இருந்தாள். அவள் தன் மனக்காயங்களை இன்று வரை யாரிடமும் காட்டிக் கொண்டதில்லை. அவள் தந்தையிடமோ, சித்தியிடமோ, தங்கையிடமோ கூடக் காண்பித்துக் கொண்டதில்லை. அவர்களுடைய பாராமுகத்தினால், வெறுப்பினால் எந்தப் பாதிப்பும் அடையாதபடி அமைதியாகவும், அழுத்தமாகவுமே அவள் அவர்களுக்குக் காட்சியளித்திருந்தாள். முதல் முறையாக ஒருவன் அவள் அனுபவித்த வலிகளை உணர்ந்து சொல்கிறான். அந்த வீட்டில் அவள் அவர்கள் குடும்பத்தோடு தன் குடும்பத்தை ஒப்பிட்டுப் பார்த்ததைக்கூட துல்லியமாக உணர்ந்து கொண்டு பேசுகிறான். அவளுக்கு அந்தக் கணமே செத்து விட்டால் கூட தேவலை என்று தோன்றியது. அடுத்தவர்கள் இரக்கத்தை விட அது மேலானது என்றே நினைத்தாள். அவள் கட்டுப்பாட்டையும் மீறி அவள் உணர்ந்த கடுமையான வலி அவள் முகத்தில் தெரிந்தது.

க்ரிஷுக்கு அதைப் பார்க்கையில் தாங்க முடியவில்லை. அவன் எதிரியிடம் கூட இந்த வலியை ஏற்படுத்துவதை அவனால் தாங்க முடியாது. அவளை அவன் இப்போது எதிரியின் ஆளாகப் பார்க்கவும் இல்லை. அநியாயமாகத் துன்புறுத்தப்பட்ட ஒரு பாவப்பட்ட பெண்ணாக மட்டுமே அவளைப் பார்க்க முடிந்தது. லேசாகக் கண்கள் ஈரமாக அவள் கையைத் தன் இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு மானசீகமாகச் சொன்னான். "உன்னைக் காயப்படுத்தவோ, பழைய காயங்களைக் கிளறிப்பார்க்கவோ இதை எல்லாம் நான் சொல்லவில்லை சிந்து. நீ இது வரை அனுபவித்த வலி போதும். இனியும் நீ அதைச் சுமந்து கொண்டே இருக்கக்கூடாது. அதை உதறி விட்டு முழு மனதோடு புதிய வாழ்க்கை வாழ முடிவு செய்ய வேண்டும். அன்பே பிரதானம். வாழ்க்கையில் நேசிப்பவர்களுடன் இருப்பதே சொர்க்கம் சிந்து. அன்பின் இடத்தை பணமோ, சொத்துக்களோ, ஏன் சாதனைகளோ கூட ஈடுகட்டி விட முடியாது. உண்மையான நேசம் தரும் சந்தோஷத்தையும், நிறைவையும் அது எதுவுமே தந்துவிட முடியாது.... நீ புத்திசாலி.... தைரியமானவள். நீ முயற்சி செய்தால் உனக்கு எதுவும் முடியாததல்ல. நீ மாற வேண்டும். பழைய வாழ்க்கையிலிருந்து விலகி புதிய வாழ்க்கைக்கு முழுமையாய் வர வேண்டும் சிந்து..."

சிந்து மாபெரும் உணர்ச்சிப் போராட்டத்தில் இருந்தாள். அவளுடைய பழைய வாழ்க்கையைப் பற்றி அவன் அறிந்திருந்தது அதிர்ச்சியைத் தந்தது. அவளுடைய தாய் இறந்ததாய் தான் அவள் இது வரை எல்லோரிடமும் சொல்லி வந்திருக்கிறாள். ஆனால் அவள் தாய் ஓடிப்போனதை அவன் தெரிந்து வைத்திருக்கிறான் என்பது 'உன் தாயின் தவறுக்கும்' என்று சொன்னது மூலம் தெரிகிறது. அவள் எப்படியெல்லாம் தன் சிறு வயதில் உணர்ந்தாள் என்பதையும், அன்பே தேவையில்லை என்று முடிவெடுத்தாள் என்பதையும் கூட அவன் தெரிந்து வைத்திருக்கிறான். அவர்கள் வீட்டில் இருந்த போது தன் வீட்டை அவள் நினைத்து ஒப்பிட்டுப் பார்த்ததைக் கூடத் தெரிந்து வைத்திருக்கிறான். க்ரிஷ் அவன் மனதில் இருப்பதைச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்து வந்த அவளிடம் அவள் மனதை இருப்பதை எல்லாம் சொல்லி முடித்திருக்கிறான்...

ஏதாவது பேசினால் தவறாகப் பேசி விடுவோமோ என்று சிந்து பயப்பட்டாள். உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அடக்கிக் கொண்டு, அவன் கைகளில் இருந்து அவளுடைய கையை விடுவித்துக் கொண்டு க்ரிஷிடம் சொன்னாள். "நன்றி."

பின் எழுந்தவள் உதயிடம் சொன்னாள். "நான் கிளம்புகிறேன். நாளைக்குப் பேசுவோம்" அவன் பதிலேதும் சொல்வதற்கு முன் வேகமாக அவள் வெளியேறி விட்டாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, March 18, 2021

இல்லுமினாட்டி 94



உதய்க்கு சிந்து சடாரென்று போனது மிகவும் வருத்தமாய் இருந்தது. க்ரிஷிடம் அவன் கோபித்துக் கொண்டான். "ஏண்டா அவள் தான் என்ன கண்டுபிடித்தாய்னு கேட்டால் பேருக்கு ஏதாவது சொல்லிட்டு போலாம் தானே. அதை விட்டுட்டு ஆராய்ச்சி செய்யறேங்கற பேர்ல ஆளுகளையுமா இப்படி போஸ்ட் மார்ட்டம் செய்யறது? அதை வெளிப்படையாய் வேறு சொல்கிறாய். அவள் தான் கொஞ்சம் கொஞ்சமாய் மாறிகிட்டு வருகிறாள் தானே? என்னைக் காதலிக்கிறாள். நம் எல்லோரிடமும் அன்பாய் பழகுகிறாள். இப்படியே போச்சுன்னா முழுசுமா ஒருநாள் மாறியும் இருப்பாள். நீ அதுலயும் குறை கண்டுபிடிச்சு, அவளைக் கஷ்டப்படுத்தித் துரத்திட்டியே"

உதயிடம் கோபத்துடன் துக்கமும் வெளிப்பட்டதைக் கவனித்த க்ரிஷ் அண்ணனுக்காக அனுதாபப்பட்டான். அவள் காதலும் பொய், குடும்பத்தாரிடம் காட்டிய அன்பும் பொய் என்று தெரிந்தால் இவன் என்ன ஆவான் என்று நினைக்கவே அவனுக்கு மிகவும் கஷ்டமாய் இருந்தது.

க்ரிஷ் சொன்னான். "பாரு. காயத்தைச் சுத்தம் பண்ணி மருந்து போடறப்ப வலிக்கும் தான். ஆனால் அந்த வலிக்குப் பயந்து அப்படியே விட்டுட்டா நிலைமை விபரீதம் ஆயிடும். சிந்து இப்ப வருத்தத்துல போயிருக்கலாம். ஆனால் அவள் புத்திசாலி. வீட்டுக்குப் போய் யோசிப்பா. அப்ப தான் மாற்றம் வரும். இல்லாட்டி அவ வெளியே சந்தோஷமாயிருக்கிற மாதிரி இருக்கும். ஆனால் அந்த சந்தோஷம் ஆழமாயிருக்காது. உள்ளுக்குள்ளே அந்தப் பழைய துக்கம், வலி எல்லாம் அப்படியே தானிருக்கும். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறவ அப்படி உள்மனக் காயத்தோடவே இருந்துட்டா உனக்குப் பரவாயில்லையா?"

உதய்க்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. சில நேரங்களில் ஏதோ ஆழ்ந்த யோசனையில் சிந்து மூழ்குவதை அவனும் கவனித்திருக்கிறான். கூடவே இருக்கும் போதும் ஏதோ தனியுலகில் அவள் இருப்பது போல அவனும் உணர்ந்திருக்கிறான். இவன் சொல்வது போல் அது அவளுடைய உள்மனக்காயத்தின் விளைவாக இருந்து, அவள் அதில் இப்போதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதில் அவனுக்கும் சம்மதமில்லை. ஆனால் தம்பி காயத்திற்கு மருந்து போட்டு அனுப்பியிருக்கிறானா இல்லை, காயத்தைக் கிளறிவிட்டு அனுப்பியிருக்கிறானா என்பதை அவனுக்கு உறுதியாகக் கணிக்க முடியவில்லை. ஆனால் தம்பியை அதற்கு மேலும் கோபித்துக் கொள்ள அவனால் முடியவில்லை. அவன் ஆத்மார்த்தமாகத் தான் அறிவுரை கூறி இருக்கிறான் என்பது சிந்துவின் கைகளைப் பிடித்துக் கொண்டு அவன் கண்கள் ஈரமாகச் சொன்ன விதத்திலேயே அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனாலும் சிந்து ஏதோ ஒரு மாதிரியாகிப் போன விதம் அவன் மனதை என்னவோ செய்து கொண்டிருக்கிறது. 'பேசாமல் நானே இவனிடம் கேட்டுக் கொண்டு அவளிடம் விஷயத்தைப் பக்குவமாய்ச் சொல்லி இருக்கலாம்....'

சாமுவலுக்கு வாங் வே போன் செய்து கர்னீலியஸ் கூடுதலாகக் கண்டுபிடித்திருந்த வாசகத்தைத் தெரிவித்திருந்தார்.

"உங்கள் மகாகவி ஒருவன் அற்புதக் கவிதை ஒன்றை எழுதிய அவ்விடம் இரு தளம் கொண்டது"

அந்த வாசகத்தைப் படித்தவுடன் முதலில் சாமுவலுக்கு எரிச்சல் தான் வந்தது. கவிஞர்கள் எங்கே உட்கார்ந்து கவிதை எழுதினார்கள் என்பதை எல்லாம் யாராவது கண்டுபிடிக்க முடியுமா? அதிலும் கவிஞனின் பெயர் கூட இல்லை. யாரது மகாகவி? அவன் எப்போது எழுதிய கவிதை? அந்த வாசகத்தில் 'இரு தளம் கொண்டது' என்பது மட்டும் தான் ஒரு உபயோகமான தகவலாகத் தோன்றியது. ஜெர்மனியில் இருக்கிற இல்லுமினாட்டி கோயில்கள் எல்லாம் பார்த்தாகி விட்டது. அவற்றில் எதிலும் விஸ்வமும், கூட்டாளியும் இல்லை. அதில் இரு தளம் கொண்ட பழைய இல்லுமினாட்டி கோயில்களை மறுபடி பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

இல்லுமினாட்டி உளவுத்துறையின் உபதலைவருக்கு பார்த்ததையே மறுபடி பார்க்க சலிப்பாக இருந்தது. அதில் ஒரு பிரச்னையும் இருந்தது. அவர் சில குறிப்பிட்ட வகைகளை மட்டும் தேர்ந்தெடுத்து மறுபடி தேடுகிறார் என்ற செய்தி மட்டும் உளவுத்துறையின் தலைவனான இம்மானுவலுக்குத் தெரிந்தால் ஏன் என்ற கேள்வி ஒன்று எழும். ஒரு கேள்வி பின் பல கேள்விகளை எழுப்பும். அது பேராபத்து.

இம்மானுவல் இப்போதெல்லாம் அவருக்குப் பார்க்கவோ, பேசவோ அதிகம் கிடைப்பதில்லை. முந்தா நாள் அவனைப் பார்த்த போது அவன் கையில் விஸ்வத்தின் கூட்டாளி பற்றிய ஃபைல் இருந்தது. அது முன்பு பார்த்ததை விட தடிமனாக இருந்தது. கேட்டாலும் அவன் பதில் சொல்ல மாட்டான் என்று தெரிந்தே சாமுவல் ஃபைலில் எழுதியிருந்த பெயரைப் பார்த்தபின் நினைவு வந்தது போலக் கேட்டார். "இவனைப் பற்றி எதாவது தகவல் கிடைத்திருக்கிறதா?"

"சொல்லிக் கொள்கிற மாதிரி எதுவுமில்லை" என்று சொல்லியபடி இம்மானுவல் நகர்ந்து விட்டான்.

சாமுவலுக்குக் கோபம் பொங்கியது. உபதலைவரிடம் கூட மறைக்கிற இந்தப் போக்கு அவனுடைய அகம்பாவத்தைக் குறிப்பதாகவே அவர் நினைத்துக் கொண்டார். அதிர்ஷ்டம் அவர் பக்கம் இருந்து ஒரு மாற்றம் இல்லுமினாட்டியில் வருமானால் இவனைத் தக்க விதத்தில் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

ஏற்கெனவே பார்த்திருந்த பழைய இல்லுமினாட்டிக் கோயில்களில் இருதளம் உள்ள கோயில்களைத் தேர்ந்தெடுத்து ஏதாவது சாக்கு சொல்லிக் கொண்டு தானே நேரில் செல்வது என்று தீர்மானித்தார். போய் விசாரிக்கையில் ஏதாவது கவிஞர் அந்த இடத்திற்கு வந்து போனதோ, அங்கு கவிதை எழுதியதோ நடந்திருக்கிறதா என்றும் மெல்லக் கேட்டுப் பார்க்க வேண்டும். இதற்கு மற்றவர்களை அனுப்பினால் ஏதாவது பேச்சு வாக்கில் ஏதாவது உளறி தகவல் இம்மானுவலை எட்ட வாய்ப்பிருக்கிறது. எனவே அது வேண்டாம்...

சிந்து தன்னைப் பிரம்மப் பிரயத்தனம் செய்து கட்டுப்படுத்திக் கொண்டு தான் உடையாமல், வெடிக்காமல், வீடு வந்து சேர்ந்தாள். வீட்டுக்கு வந்து தன் படுக்கையில் விழுந்த போது அவள் அது வரை கட்டுப்படுத்தி வைத்திருந்த அழுகை குமுறிக் கொண்டு வந்தது. அவள் நினைவு தெரிந்த நாளில் இருந்து அழுததில்லை. அழுகையை அவள் பலவீனமாக நினைத்தாள். அதிலும் அவள் தந்தை, சித்தி, தங்கை முன் என்றுமே துக்கத்தின் சாயலைக் கூடப் பிற்காலங்களில் அவள் காட்டியதில்லை. வாழ்க்கையில் ஜெயிப்பவர்கள் அழுவதில்லை என்று எங்கோ எதிலோ படித்தது மனதில் பசுமையாகப் பதிந்திருந்தது. இதுநாள் வரை வெற்றிகரமாகச் சமாளித்தவளுக்கு இன்று தாக்குப்பிடிக்க முடியவில்லை.

அவளிடம் எல்லாவற்றையும் சொன்ன க்ரிஷின் முகத்தில் ஒரு கேலியோ, அவள் பழைய வாழ்க்கையை அக்கு வேறு ஆணி வேறாகப் பரிசீலித்து விட்ட கர்வமோ, ஒரு குற்றவாளிக்கு நீதிபதி சொல்லும் தீர்ப்பின் பாவனையோ தெரிந்திருந்தால் அவள் கண்டிப்பாக உடைந்திருக்க மாட்டாள். அவை எதுவும் ஒரு சதவீதம் கூட அவனிடம் தெரியவில்லை. அவள் வலியை உணர்ந்து அதில் பங்கு கொண்டவனாய் அவனும் வலியுடன் அவளிடம் பேசினான். அவன் கைவிரல்கள் அவள் கையைப் பிடித்திருந்ததில் கூட அவன் இரக்கம் வெளிப்பட்டது. அவன் கண்களில் தெரிந்த ஈரம் பொய் அல்ல என்பதை அவள் தன் அந்தராத்மாவில் உணர்ந்தாள். வாழ்க்கையில் நிறைய சம்பாதித்து யாருமே நினைத்துப் பார்க்க முடியாத உயரத்திற்குப் போய் அவளை அலட்சியம் செய்தவர்கள் எல்லாம் பொறாமைப்படும்படி வாழ்ந்து காட்ட வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டிருந்தாள். அதைக்கூட அவன் அறிந்தவனாய் அன்புக்கு எதுவும் இணையில்லை. அதற்கு ஈடாக நீ எதைச் சம்பாதித்தாலும் முடிவில் ஏமாந்து தான் போவாய் என்று ஆத்மார்த்தமாய் சொன்னது அவளை நிறையவே பாதித்தது. அதை அவனைத் தவிர வேறு யார் சொல்லி இருந்தாலும் அவள் அத்தனை முக்கியத்துவம் தந்திருக்க மாட்டாள். சாதிக்க முடியாதவனின் கையாலாகாத தத்துவம் என்று மனதிற்குள் பரிகசித்து ஒதுக்கியிருப்பாள். ஆனால் அவன் அதிகாரம், பணம், அறிவு, சொத்து, சாதனை என எல்லாவற்றிலும் உச்சத்திலேயே இருப்பவன். அவள் இனி வாழ்நாள் எல்லாம் உழைத்தாலும் எதிலும் அவனை எட்டவே முடியாது. அவன் அத்தனை அதிர்ஷ்டங்களுடன் அன்பையும் அளவில்லாமல் பெற்றவன். அப்படி எல்லாவற்றையும் அடைந்து உயரத்தில் இருப்பவன், பெற்றிருக்கும் அன்பை மற்றவற்றோடு வாழ்க்கையில் எடைபோடும் முழுத்தகுதியும் உள்ளவன், அவளிடம் அவள் இதயத்துடன் பேசுவது போலச் சொல்லியிருக்கிறான்.. "உண்மையான நேசம் தரும் சந்தோஷத்தையும், நிறைவையும் அது எதுவுமே தந்துவிட முடியாது.... நீ புத்திசாலி.... தைரியமானவள். நீ முயற்சி செய்தால் உனக்கு எதுவும் முடியாததல்ல. நீ மாற வேண்டும்"

அவனை பத்து வருடங்கள் முன் அவள் சந்தித்திருந்து, அவன் இந்த வார்த்தைகளைச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று கண்ணீரின் நடுவில் நினைத்துக் கொண்டாள். அப்போது கண்டிப்பாக அவள் மாறியிருப்பாள். இப்போதோ அவள் திரும்பிச் செல்ல முடியாத பயணத்தில் நிறைய தூரம் வந்து விட்டவள். இனி அவள் மாற நினைத்தாலும் விஸ்வம் விட மாட்டான்..... அவள் என்ன செய்வாள்?

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, March 25, 2021

இல்லுமினாட்டி 95



க்ரிஷ் ஆழ்ந்த ஆலோசனையில் இருந்தான். சற்று முன் தான் இம்மானுவல் அவனை அலைபேசியில் கூப்பிட்டுப் பேசினான். விஸ்வத்தின் கூட்டாளி பற்றிய குறிப்புகள் நிறையக் கிடைத்திருப்பதாகவும், அதை வைத்து அவனுடைய அடையாளம் பற்றி முடிவெடுப்பதற்கு க்ரிஷ் ம்யூனிக் வருவது நல்லது என்றும் இம்மானுவல் சொல்லியிருந்தான். இந்தியாவிலிருந்து கிளம்பிய கணம் முதல் அங்கு போய்ச் சேரும் வரை க்ரிஷின் பாதுகாப்புக்கு முழு ஏற்பாடு செய்திருப்பதாகவும் சொன்னான். விஸ்வம் அவர்களுக்குச் சிக்காமல் வெளியே இருக்கும் வரை எர்னெஸ்டோவுக்கு இணையாக க்ரிஷுக்கும் அவனால் நேரக்கூடிய அபாயம் இருப்பதால் எந்த விதமான அசம்பாவிதமும் நடந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் இம்மானுவல் இருந்தான்.

க்ரிஷுக்குத் தன் சொந்தப் பாதுகாப்பு பற்றிய கவலையை விடக் குடும்பத்தின் பாதுகாப்பு பற்றிய கவலை தான் பெரிதாக இருந்தது. முதலைமைச்சர் குடும்பம் என்பதால் அவர்கள் பாதுகாப்புக்கான வெளி ஏற்பாடுகள் உயர்மட்டத்திலேயே இருக்கும், இல்லுமினாட்டியும் கூட அதற்கான ஏற்பாடுகள் செய்யும் என்றாலும் அவன் கவலைப்பட்டது உள் ஏற்பாடுகளைத் தான். சிந்து அவன் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கும் வரை அந்த வீட்டில் எந்த நேரத்திலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். க்ரிஷ் போய் வருவதற்குள் எதிரியென்று வீட்டாரும், வெளியாட்களும் உணராத சிந்து என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அந்த ஆபத்து தான் க்ரிஷை நிறைய யோசிக்க வைத்தது.

மாஸ்டர் "உன் இதயம் காட்டுகிற வழியில் போ. ஆனால் அறிவையும் கூடவே வைத்துக் கொள்" என்று சொன்னபடி இரண்டையும் சேர்த்து தான் இது வரை சிந்து விஷயத்தில் அவன் நடந்து வருகிறான். இப்போதைக்கு சிந்துவிடம் சில மாற்று சிந்தனைகளை அவன் ஏற்படுத்தி இருக்கிறான். உதயின் காதலையும் காப்பாற்ற வேண்டும், சிந்து இந்தக் குடும்பத்தில் எந்தப் பிரச்னையையும் ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று எதிர்மாறான இரண்டு ஆசைகளை நிறைவேற்ற எச்சரிக்கையுடன் செயல்படுகின்றான். சிந்து ஒரேயடியாக மாறுவது நடக்கக்கூடிய காரியமல்ல. அவன் அவளை மாற்ற முடிவதில் வெற்றி பெறும் வாய்ப்பு இருந்தாலும் கூட அதற்குச் சிறிது காலமாவது தேவைப்படும். அது நடக்கும் வரை அவளை அவன் எதிரியின் ஆளாகவே தான் நினைக்க வேண்டும்.

சிந்து விஸ்வத்தின் ஆள் என்றாலும் அவளிடம் விஸ்வம் முடிவாக என்ன செய்ய வேண்டும் என்பதை இன்னும் தெரிவித்திருக்கவில்லை என்பது அவன் யூகமாக இருந்தது. ஏனென்றால் அவன் மாஸ்டர் சொல்லிக் கொடுத்த பயிற்சிகள் செய்து ஓரளவு அவள் மனதை ஊடுருவிப் பார்க்க முயன்ற போது உதயைக் காதலிக்கும் திட்டத்தைத் தவிர வேறு ஒரு திட்டவட்டமான திட்டத்தை அவனால் உணர முடியவில்லை. அதனால் உதயிடம் பழகி அவனைக் காதலித்து அவன் வீட்டுக்குப் போய்க்கொண்டிரு, பின் என்ன செய்ய வேண்டும் என்று சமயம் வரும் போது சொல்கிறேன் என்று மட்டுமே விஸ்வம் அவளிடம் சொல்லி இருக்கலாம் என்று தோன்றியது. அப்படி இருந்தால் எந்த நேரத்திலும் விஸ்வத்தின் கட்டளை அவளுக்கு வரலாம். அப்படி வந்தால் அவள் அதைக் கண்டிப்பாகச் செய்தே தீரவேண்டியிருக்கும். இல்லாவிட்டால் அவள் மனோகர் மாதிரியே உயிரை விடவேண்டி வரும்.

இப்படி ஒரு நிலைமை இங்கு இருக்கையில் அவன் எப்படி நிம்மதியாக வெளிநாடு போய் விட்டு வர முடியும்? போகவில்லை என்றால் அவன் என்ன காரணத்தை இல்லுமினாட்டியிடம் சொல்வான்? சிந்துவைப் பற்றி வந்திருக்கும் சந்தேகத்தைப் பற்றிச் சொன்னாலோ உடனடியாக சிந்துவை அப்புறப்படுத்தி விடுவார்கள். உதய்க்கு சிந்து கிடைக்க மாட்டாள். என்ன செய்வது என்று யோசித்து ஒரு முடிவுக்கு இறுதியாக வந்த க்ரிஷ் மறுநாள் அதிகாலையிலேயே சிந்துவுக்குப் போன் செய்து பேசினான். "அவசரமாக உன்னிடம் சிறிது பேச வேண்டியிருக்கிறது சிந்து" என்றான்.

இவனால் இரவெல்லாம் யோசித்து அழுது உறக்கம் கெட்டிருந்த சிந்து கறாராகச் சொன்னாள். "க்ரிஷ் நேற்றோட விஷயத்தைத் தொடரும் பேச்சாக இருந்தால் தயவுசெய்து வேண்டாம். நீ சொன்னது எனக்குப் புரிந்து விட்டது. அதை இன்னொரு தடவை சிறிது மாற்றிக் கூட நான் கேட்க விரும்பவில்லை"

"அதைப் பேசப் போவதில்லை. இது வேறு விஷயம்"

"சரி நான் வர வேண்டுமா இல்லை நீங்கள் வருகிறீர்களா?"

"நானே வருகிறேன். அரை மணி நேரத்தில் அங்கே இருப்பேன். பேச எனக்குப் பத்து நிமிஷங்கள் போதும்"

சிந்து சம்மதித்தாள். சொன்னபடியே க்ரிஷ் அரை மணி நேரத்தில் இருந்தான். சிந்து இரவெல்லாம் அழுது தூக்கம் தொலைத்திருந்தாலும் அதைத் தோற்றத்தில் அவனுக்குக் காட்டவில்லை. "என்ன விஷயம்?" என்று அமைதியாகக் கேட்டாள்.

"நான் அவசரமாய் வெளிநாடு போக வேண்டியிருக்கிறது. நான் இல்லாத நாட்களில் நீ என் வீட்டுக்கு வருவதை நான் விரும்பவில்லை" என்று க்ரிஷ் அமைதியாகச் சொன்னான்.

"இதை என்னிடம் சொல்வதற்குப் பதிலாக உங்கள் அண்ணாவிடமே சொல்லி இருக்கலாமே. அவர் தீர்மானமும் அதுவானால் வீட்டுக்கு அந்த நாட்கள் என்று இல்லை எந்த நாளிலுமே வர மாட்டேன்" என்று முகம் சிவந்து அவள் சொன்னாள்.

க்ரிஷ் சொன்னான். "அவனிடம் சொல்வதற்குப் பதிலாக நீ யார் என்பதை உன்னை இங்கே அனுப்பியவனின் சக்தி வாய்ந்த எதிரிகளிடம் சொன்னால் போதும் அவர்கள் மீதியைப் பார்த்துக் கொள்வார்கள். நீ எங்கேயும் எப்போதும் போக வேண்டியிருக்காது"

முதல் முறையாக ஒரு வித்தியாசமான க்ரிஷை சிந்து பார்க்கிறாள். சுற்றி வளைத்துப் பேசாமல் 'நீ யார் என்று எனக்குத் தெரியும், நீ யார் அனுப்பி வந்தாய் என்றும் எனக்குத் தெரியும், அனுப்பியவன் உத்தேசமும் எனக்குத் தெரியும்' என்பதையும் அவளுக்கு அவன் புரிய வைத்தான். அவனிடம் வழக்கமான அன்பு தெரியவில்லை... மென்மை தெரியவில்லை.... அவளைப் புரிந்து கொண்டதன் சாயல் கூடத் தெரியவில்லை.

அவளுக்கு விஸ்வத்தின் எதிரிகள் யார் என்று தெரியாது. ஆனால் அவன் சொன்னதிலிருந்து யாராயிருந்தாலும் அவர்கள் வலிமை வாய்ந்தவர்கள், பொல்லாதவர்கள் என்ற தொனியை சிந்து உணர்ந்தாள். அவளைப் பற்றி அவன் அவர்களிடம் இது வரை சொல்லவில்லை, அவள் மறுத்தால் க்ரிஷ் சொல்லி விடுவான், பின் அவள் நீண்ட நாள் உயிர்வாழ முடியாது என்பதை கூடுதல் வார்த்தைகள் இல்லாமல் சிந்து உணர்ந்தாள்.

"உதய் கேட்டால் என்ன சொல்வது?" என்று மெல்ல சிந்து கேட்டாள்.

"அவசரமாக வெளியூர் போக வேண்டி இருக்கிறது. தவிர்க்க முடியாதது என்று சொல்"

"எப்போது நான் திரும்பி வருவது?"

"நான் உனக்கு போன் செய்து தெரிவிக்கிறேன்"

அவள் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலைமையை உணர்ந்தாள். போகா விட்டால் உயிரே போய் விடும் என்கிறான் இவன். போனாலோ அது தெரிய வந்தால் விஸ்வம் உயிரை எடுத்து விடுவான். ஏனென்றால் அவன் எந்த நேரத்திலும் அடுத்து செய்ய வேண்டிய வேலையை அவளிடம் சொல்லலாம். அவள் என்ன செய்வாள்?

ஓரளவு அவள் மன ஓட்டத்தை க்ரிஷால் புரிந்து கொள்ள முடிந்தது. அவள் விஸ்வத்துக்கும் பயப்படுகிறாள். அவனுக்குத் தெரிய வந்தால் ஆபத்தாயிற்றே என்ன செய்வது என்று யோசிக்கிறாள். க்ரிஷ் சொன்னான். "உன்னை அனுப்பியவன் கேட்டால் நான் உன்னைக் கண்டுபிடித்து விட்டேன், நான் மிரட்டித் தான் நீ போனாய் என்று சொல். அவன் நல்லவனாக இல்லாமலிருக்கலாம், ஆனால் முட்டாள் அல்ல. அதனால் புரிந்து கொள்வான். நான் சொல்லியும் கேட்காமல் நீ இங்கேயே இருந்து அவர்களிடம் சிக்கிச் செத்தால் அதை அவனும் வீரமாய்ப் பார்க்க மாட்டான், முட்டாள்தனமாய் தான் நினைப்பான்."

சிந்து தளர்ந்து போனாள். இத்தனை நாட்கள் அவளிடமிருந்த அசாத்தியத் துணிச்சலும், தன்னம்பிக்கையும் இப்போது விலகிப் போயிருந்தன. விஸ்வம், க்ரிஷ் என்ற இரண்டு மலைகளுக்கு நடுவே சிக்கிக் கொண்டதைப் போல் உணர்ந்தாள். இவனும் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு விட்ட பின் அடுத்தது என்ன என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தது.

அதை அவள் நேரடியாகவே அவனிடம் கேட்டாள். "நீங்கள் திரும்பி வந்த பிறகு?"

க்ரிஷ் அமைதியாகச் சொன்னான். "அதை அப்போது பார்ப்போம்"

எல்லாமே அவன் அறிந்து கொண்ட பின் 'இனி பார்க்க என்ன இருக்கிறது' என்று அவள் நினைத்துக் கொண்டாள். ஏன் இன்னும் உதயிடமும், வீட்டாரிடமும் சொல்லாமல் இருக்கிறான் என்பதும் புரியவில்லை. இனி இந்த நாடகத்தைத் தொடர்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று அவளுக்குத் தெரியவில்லை.

அதைப் புரிந்து கொண்டவன் போல் க்ரிஷ் சொன்னான். "நான் இப்போதும் உன்னைக் கெட்டவளாக நினைக்கவில்லை சிந்து. உன் குழந்தைப் பருவத்தின் அநியாய பாதிப்புகளால் தடம் மாறிப் போனவளாகவே நினைக்கிறேன். அன்பினால் நீயும் மாற்றப்பட முடிந்தவளாகவே நினைக்கிறேன். ஆனால் அதே சமயத்தில் நீ மாறுவதற்கு முன் என் குடும்பத்தார் யாரும் உன் மூலமாகப் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதிலும் எச்சரிக்கையாக இருக்கிறேன்..."

அவன் போய் விட்டான்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, April 1, 2021

இல்லுமினாட்டி 96



சாலமன் மறுபடியும் ஒரு முறை பழைய இல்லுமினாட்டி கோயில்களுக்குப் போக ஆரம்பித்தார். இன்று நூலகம், அரங்கு, பழங்காலப் பொருள்களின் நினைவகம் என்று புதுவடிவம் பெற்றிருந்த அந்தக் கோயில்களில் இன்னொரு தளம் இருப்பதற்கு அறிகுறியே தெரியவில்லை. அவர் மேலும் அதிக நாட்கள் ஜெர்மனியில் இருக்க முடியாதபடி இம்மானுவல் மறுபடியும் மூன்று நாட்களில் ஜெர்மனி வருகிறான். க்ரிஷும் அன்று தான் ஜெர்மனி வரப்போகிறான் என்ற செய்தியும் அவருக்குக் கிடைத்தது. ஏதோ முக்கிய ஆலோசனைகள் நடக்கப் போகின்றன என்பது புரிந்தது. அதனால் தான் எல்லோரும் இல்லுமினாட்டியின் தலைவர் இருக்குமிடத்தில் கூடுகிறார்கள்.

அவசியத் தேவை இருந்தால் ஒழிய உளவுத்துறையின் தலைவரும், உபதலைவரும் அதிகம் சேர்ந்து ஒரே இடத்தில் இருப்பதில்லை. அதனால் உளவுத்துறையின் தலைவர் வந்த பிறகு உபதலைவரான சாலமன் வலுவான காரணம் ஏதுமில்லாமல் அங்கே இருக்க முடியாது. மற்ற இடங்களிலும் நிறைய வேலைகள் இருக்கின்றன... அதனால் விஸ்வம் இருக்கக்கூடும் என்று சொல்லப்படும் பழைய இருதள இல்லுமினாட்டி கோயில்கள் பற்றி உடனடியாகத் தெரிந்து கொண்டு வாங் வேக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

இந்த நெருக்கடியை உணர்ந்தவராக அடுத்த இல்லுமினாட்டி பழைய கோயிலுக்கு நுழைந்தார். அது இப்போது நூலகமாக மாறியிருந்தது. கிட்டத்தட்ட நான்காயிரம் நூல்கள் அங்கே இருந்தன. அவற்றில் சுமார் ஐநாறு நூல்கள் இல்லுமினாட்டி அறிஞர்கள் எழுதிய நூல்களாக இருந்தன. மற்றவை மற்ற அறிஞர்கள் எழுதிய நூல்கள். பல துறைகள் சம்பந்தப்பட்ட அந்த நூல்கள் இல்லுமினாட்டி அறிஞர்கள் பல காலமாக சிபாரிசு செய்த நூல்களாக இருந்தன. இப்போதெல்லாம் அந்த நூல்களைப் படிக்கும் ஆட்கள் மிகவும் குறைவு என்றாலும் ஒரு பாரம்பரியமான அமைப்பைத் தொடர்ந்து நடத்த வேண்டுமேயென்பதற்காக அந்த நூலகம் தொடர்ந்து பராமரிக்கப்படுகிறது.

சாலமன் நுழைந்த போது நூலகத்தில் ஒருவரும் இருக்கவில்லை. நூலகர் அவரைப் பார்த்ததும் சந்தோஷப்பட்டார். ஏனென்றால் விடுமுறை நாட்களிலாவது ஓரிருவர் அந்த நூலகத்திற்கு வருவார்கள். மற்ற நாட்களில் அவர் நாள் முழுவதும் தனியாகவே அமர்ந்திருப்பார். "வாருங்கள்... வாருங்கள்.... ஏதாவது புத்தகங்கள் வேண்டுமா?"

சாலமன் கேட்டார். "பழங்கால இல்லுமினாட்டி கோயில்கள் சம்பந்தமான நூல்கள் ஏதாவது இருக்கிறதா?"

"இருக்கிறதே. இரண்டு புத்தகங்கள் முழுவதுமாக இல்லுமினாட்டி கோயில்கள் பற்றிய புத்தகங்கள் தான். நாலைந்து புத்தகங்களில் ஒன்றிரண்டு அத்தியாயங்கள் இல்லுமினாட்டி கோயில்கள் பற்றி எழுதப்பட்டிருக்கின்றன" என்று சொன்னதுடன் அலமாரிகளில் தேடி அவர் எடுத்தும் கொடுத்தார்.

சாலமன் சொன்னார். "என் நண்பர் ஒருவரின் மகன் இல்லுமினாட்டி கோயில்கள் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை எழுதவிருக்கிறான். அவன் நெட்டில் நிறைய புத்தகங்கள் கட்டுரைகள் எல்லாம் படித்தும் அவனுக்கு வேண்டிய எல்லாத் தகவல்களும் கிடைக்கவில்லையாம். அதனால் என்னைக் கேட்டான்..."

அந்த நூலகர் சொன்னார். "இந்த ஏழு புத்தகங்களில் ஐந்து புத்தகங்கள் மிகப் பழையவை. இதெல்லாம் நெட்டில் கிடைக்காது"

அந்த நூலகருக்கு நன்றி தெரிவித்து விட்டுப் பிறகு பத்து நிமிடங்கள் அவரிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு சாலமன் புத்தகங்களோடு கிளம்பினார். அந்தப் புத்தகங்களில் ஒரு புத்தகம் மிகப் பழமையானதாக இருந்தது. அது எழுதப்பட்டிருக்கும் காலத்திற்கேற்ப கடினமான பழங்கால ஆங்கில நடையிலும் எழுதப்பட்டிருந்தது. அதனால் அதை வேகமாகப் படிக்க முடியவில்லை. சாலமன் கடைசியாக அந்தப் புத்தகத்தைப் படிக்கலாம் என்று எண்ணி எடுத்து வைத்து விட்டார்.

மற்றவற்றில் ஒரு புத்தகம் முழுமையாகவே இல்லுமினாட்டி கோயில்கள் சம்பந்தப்பட்டதாக இருந்தது. நிறைய இல்லுமினாட்டி கோயில்கள் பற்றி அதில் எழுந்தப்பட்டிருந்தது. அந்தக் கோயில்களில் ஜெர்மனி கோயில்களைத் தேர்ந்தெடுத்து சாலமன் படித்தார். கோயில் கட்டப்பட்ட காலம், எந்த விதமான கட்டிடக்கலை அந்தக் கோயில் கட்டப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது எந்த விதமான வழிபாடுகள் அங்கே நடத்தப்பட்டன, காலப்போக்கில் எப்படி எல்லாம் மாற்றங்கள் நிகழ்ந்தன என்பதெல்லாம் விரிவாக எழுதப்பட்டிருந்தன. அதில் இரண்டு தளமுள்ள கோயில்கள் பற்றிய பேச்சே இல்லை.

மற்ற நூல்களில் எல்லாம் சில அத்தியாயங்கள் மட்டும் இல்லுமினாட்டி கோயில்கள் சம்பந்தப்பட்டவை. அந்த அத்தியாயங்களிலும் ஜெர்மனி கோயில்களாகத் தேடிப் பார்த்துப் படித்தார். எந்த உபயோகமான தகவலும் அதிலும் அவருக்குக் கிடைக்கவில்லை.

மிஞ்சியிருப்பது அந்தக் கடினமான புத்தகம் தான். கர்னீலியஸ் மாதிரி ஆட்கள் அருகில் இருந்திருந்தால் அதைப்படிப்பது சுலபமாக இருந்திருக்கும். சாலமன் ஒருவித சலிப்போடு அந்தப் புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். அந்தப் புத்தகத்தில் நிறைய சுவாரசியமான தகவல்கள் தரப்பட்டு இருந்தன. ஆனால் பெரிய பிரச்சினை என்னவென்றால் பிரதேச வாரியாகக் கோயில்கள் பற்றிய தகவல்கள் தரப்பட்டிருக்கவில்லை. எல்லாம் கலந்து தான் எழுதப்பட்டிருந்தன.

கால வாரியாகவும் எழுதப்படாமல், பிரதேச வாரியாகவும் எழுதப்படாமல் எல்லாம் கலந்து எழுதியிருக்கும் அந்தப் புத்தகத்தில் ஜெர்மனி கோயில்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வழியே இல்லை. ஆனால் அந்த எழுத்தாளர் ஒவ்வொரு கோயிலுக்கும் பின்னாலிருக்கும் சுவாரசியமான தகவல்களைச் சொன்ன விதம் பார்க்கையில் சாலமன் தேடும் தகவலும் அந்தப் புத்தகத்தில் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று அவருக்குத் தோன்றியது. அதனால் கஷ்டமானாலும் நிதானமாக அந்தப் புத்தகத்தை சாலமன் படித்தார்.

அவர் சில பக்கங்களைக் கஷ்டப்பட்டுக் கடந்தார். ஜெர்மனியில் உள்ள ஒரு ஃப்ரீமேசன் கோயிலைப் பற்றிய தகவல்கள் வந்த போது கதே என்ற பிரபல எழுத்தாளரைப் பற்றிய குறிப்பு வந்தது.

"அந்தக் கோயிலுக்கு அந்த எழுத்தாளர் வந்திருந்த போது தெய்வீகமான அலைகளை அவர் உணர்ந்தார். ஃப்ரீமேசன்களில் ஒருவரான அவர் அறிவுஜீவி மட்டுமல்ல பல துறைகளில் வல்லவர், அந்தக் கோயிலில் ஒருநாள் அவர் நீண்ட நேரம் கண்களை மூடி உட்கார்ந்திருந்தார். பின் கண்களைத் திறந்த அவர் Masonic Lodge என்ற கவிதையை மளமளவென்று எழுத ஆரம்பித்தார். அந்தக் கவிதை

The Masons's ways are A Type of Existence
And his persistence Is as the days are
Of men in this world. என்ற வரிகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது...."

சாலமன் பரபரப்படைந்தார். ஜெர்மனி, கவிதை எழுதியது எல்லாம் பொருந்தி வருவதால் அந்த இடம் இதுவாகத்தானிருக்க வேண்டும்.

இதயம் படபடக்க அவர் அதைத் தொடர்ந்து படித்தார். "... அவரைப் போலவே வேறு சிலரும் கூட அந்த இடத்தில் தெய்வீக அலைகளை உணர்ந்ததால் அந்தக் கோயிலைப் புனரமைப்பு செய்த போது அவர்களுடைய விசேஷ வழிபாடு செய்யும்படியாக ஒரு பாதாள அறையையும் சேர்த்துக் கட்டினார்கள். சாதாரண மக்கள் மேல் தளம் மட்டுமே அறிவார்கள். அவர்கள் வழிபாடு செய்து விட்டு அங்கிருந்தே திரும்பச் செல்வார்கள். ஆனால் சில உயர்நிலை மனிதர்கள் நள்ளிரவில் பாதாள அறையில் சில ரகசிய தீட்சைகள் பெறும் வழிபாடுகளைச் செய்து வந்தார்கள். அந்தப் பாதாள அறையில் கதேயின் Masonic Lodge கவிதை அவர் நினைவாக அங்கே சுவரில் எழுதப்பட்டுமிருக்கிறது..."

பரபரப்பு குறையாமல் சாலமன் அந்தப் புத்தகம் வெளியான ஆண்டைப் பார்த்தார். 1907ஆம் ஆண்டு வெளியாகியிருந்தது. அந்த இடம், குறிப்புகள் எல்லாம் பார்க்கும் போது இப்போது வழிபாடுகள் நடக்காமல் மூடியுள்ள ஒரு சர்ச் என்பது தெரிந்தது. அதன் பின் உள்ள சரித்திரத்தை சாலமன் வேகமாகத் தேடிக் கண்டுபிடித்தார். அந்த சர்ச் ஆரம்பத்தில் ஹிட்லருக்கு நெருக்கமான ஜெர்மன் எவாஞ்சலிகல் சர்ச் ஆதிக்கத்தில் சில காலம், பிறகு ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் கட்டுப்பாட்டில் சில காலம், பின் ப்ராட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்கள் வசம் சில காலம் இருந்தது. யாரானாலும் சில காலம் மட்டுமே தான் அங்கே வழிபாடு நடத்த முடிந்தது. பிறகு யாரும் தொடர்ந்து இங்கே வழிபாட்டை நடத்த விடாதபடி ஏதாவது பிரச்னைகள், விபத்துகள் எல்லாம் நடந்து கொண்டே இருந்தன. கடைசியில் யேசு கிறிஸ்து சிலையும் உடைந்து போனதால் ஏதோ அபசகுனமாக நினைத்து அப்பகுதியில் இருந்த கிறிஸ்தவர்களும் அங்கே போவதை நிறுத்தி விட்டார்கள்.

ரகசிய தீட்சைகள் அங்கே நிறுத்தப்பட்டு இரு தளம் இருப்பதையே கிட்டத்தட்ட எல்லோரும் மறந்து விட்ட காலகட்டத்தில் தான் அந்த சர்ச் ஜெர்மன் எவாஞ்சலிகள் சர்ச் ஆதிக்கத்திற்கு வந்துள்ளது. பின் வந்தவர்களும் அதை அறியவில்லை.

விஸ்வத்துக்கு ஒளிந்திருக்க இதை விடப் பொருத்தமான இடம் கிடைத்திருக்க முடியாது என்று எண்ணியவராக சாலமன் வாங் வேக்குப் போன் செய்தார்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, April 8, 2021

இல்லுமினாட்டி 97



சாலமன் அழைத்த போது வாங் வே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அவரிடம் உள்ள அந்த ரகசிய அலைபேசியில் இருந்து ஒரே ஒரு அலைபேசிக்கு மட்டுமே அழைப்பு போகும். அதே போல அந்த எண்ணிலிருந்து வரும் அழைப்பை மட்டுமே அந்த அலைபேசி ஏற்கவும் செய்யும். அவரிடமிருக்கும் மற்ற அலைபேசிகள் எல்லாம் அவர் உறங்கப் போகும் முன் மௌனமாக்கப்பட்ட பின்னரே அவர் உறங்கப் போவார். அதனால் அலைபேசி அகால நேரத்திலும் அலறுகிறது என்றால் அழைப்பது சாலமனாகத் தான் இருக்க வேண்டும். ஏதோ முக்கியமான விஷயமாக மனிதர் அழைக்கிறார் என்று புரிந்தவராக எழுந்த வாங் வே அலைபேசியை எடுத்துப் பேசினார். "ஹலோ"

"சார் விஸ்வம் எங்கே ஒளிந்திருக்கிறான் என்பது தெரிந்து விட்டது."

ஒரு கணம் வாங் வே பேச்சிழந்தார். பின் பரபரப்புடன் கேட்டார். "எந்த இடம்? அதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"

சாலமன் விவரித்துச் சொன்னார். வாங் வே அவரைப் பாராட்டி விட்டுக் கேட்டார். "நீங்கள் அந்த சர்ச்சின் பக்கம் முதலில் போயிருக்கவில்லையா?"

"எங்கள் ஆட்கள் போயிருக்கிறார்கள். அந்த சர்ச்சில் யாரும் இல்லை என்பதை உறுதி செய்திருக்கிறார்கள். பாதாள அறை ஒன்று அதில் இருக்கும் என்ற சந்தேகம் கூட அவர்களுக்கு வராததால் அதைத் தேடிக் கண்டுபிடித்துப் பார்க்கவில்லை..."

"நல்லது. இனி என்ன செய்ய வேண்டும் என்பதை நான் யோசித்துச் சொல்கிறேன். வேறெதாவது தகவல் இருக்கிறதா?"

"க்ரிஷ் மூன்று நாளில் வருகிறான். இம்மானுவலும் எல்லா வேலையையும் விட்டுவிட்டு அந்த சமயத்திலேயே வருகிறான். ஏதோ முக்கிய ஆலோசனையில் ஈடுபடப் போகிறார்கள்"

வாங் வேக்குக் கோபம் வந்தது. தலைமைக்குழு என்று ஒன்று இருப்பது கிழவருக்கு மறந்தே போய்விட்டது போலிருக்கிறது. எதையும் தலைமைக்குழுவுடன் கலந்தாலோசிப்பதே இல்லை. அதைத் தட்டிக் கேட்கவும் மற்ற தலைமைக்குழு உறுப்பினர்கள் தயாராக இல்லை. வாங் வேக்கு எர்னெஸ்டோ மீதிருந்த கோபம் க்ரிஷ் மீதும் தாவியது. என்னவோ அறிவுஜீவியாம், இல்லுமினாட்டியைக் காப்பாற்ற வந்தவனாம்... எல்லாரையும் சாமியாராக்கி விடும் தத்துவங்களைக் கொண்டு வந்து இல்லுமினாட்டியில் திணிக்கப் பார்க்கிறான்... அவனுக்கு விஸ்வம் எவ்வளவோ பரவாயில்லை. அனுமதித்தால் அவன் இல்லுமினாட்டியில் புதிய சரித்திரம் எழுதக் கூடியவன் அவன் தான். அவன் கூடு விட்டுக் கூடு பாயும் வித்தையுடன் அதிரடியாய் மறு உடல் எடுத்து வந்திருக்கிறான். இந்தச் சாதனையை யார் தான் செய்து விட முடியும். அப்படிப்பட்டவனை கிழவர் அழிக்கப் பார்க்கிறார்.

வாங் வே இல்லுமினாட்டி தன் தலைமைக்குக் கீழ் வர வேண்டும் என்று நீண்ட காலமாக ரகசியமாய் ஆசைப்படுபவர். இப்போதும் அதற்காக ஏதாவது சின்ன வழி கிடைத்தாலும் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்க மாட்டார். ஆனால் அது முடியாத பட்சத்தில் அவர் இல்லுமினாட்டி தலைமைக்கு விஸ்வத்தைத் தான் ஆதரிப்பார். அவன் தலைமையில் அவருக்கு உபதலைவர் பதவி கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அவன் தலைவனாவதற்கு அவர் உதவி செய்தால் அவரை அவன் உபதலைவராக்கும் வாய்ப்பு இருக்கிறது. இப்போதிருப்பது போல் ஒரு வெற்று தலைமைக்குழு உறுப்பினராக நீடிப்பதை விட உபதலைவராவது கூட எத்தனையோ மேல்... அதற்காகத் தான் விஸ்வம் எங்கிருக்கிறான் என்பது இல்லுமினாட்டியின் தலைமைக்குத் தெரிவதற்கு முன் அவருக்குத் தெரிய வேண்டும் என்று ஆசைப்பட்டிருந்தார்.

இப்போது விஸ்வம் எங்கிருக்கிறான் என்பது தெரிந்து விட்டது. அவன் இருக்குமிடம் வெளியே தெரிந்து விட்டது என்பது அவனுக்குத் தெரிந்தால் அவன் அந்த இடத்தையும் விட்டு வேறிடத்திற்கு விரைவாகத் தப்பி விடும் அபாயம் இருக்கிறது. அதனால் இனி மிகவும் கவனமாகத் தான் அவனைத் தொடர்பு கொள்ள வேண்டும். அவனைப் பொருத்த வரை இல்லுமினாட்டி முழுவதுமே அவன் எதிரி என்றே இப்போது நினைத்திருப்பான். அவனிடம் இல்லுமினாட்டியில் அவனுக்கு ஒரு நண்பன் இருக்கிறான் என்பதை எப்படியாவது தெரிவித்து விட வேண்டும். அவனிடம் கூட்டு சேர்ந்து பிறகு மற்றவற்றை யோசிக்கலாம்.

ஆழ்ந்து ஆலோசித்து விட்டு வாங் வே ஒரு கடிதம் எழுதினார்.

"அன்பு நண்பனே.

நீ கடைசியாகச் சேர்ந்த இயக்கத்தில் நானும் ஒரு உறுப்பினர் .நீ இருக்கும் இடம் எனக்கு மட்டும் தான் தெரியும் என்பதையும், அதை நம் இயக்கத்திற்கு நான் தெரிவிக்கவில்லை, தெரிவிக்கவும் போவதில்லை என்று உனக்கு உறுதி அளித்து விட்டு கடிதத்தைத் தொடர்கிறேன்.
உன்னை ஒரு கதாநாயகனாகவும், நம் இயக்கத்தின் தலைமைக்கு மிகப் பொருத்தமானவனாகவும் தான் நான் பார்க்கிறேன். இப்போதைய தலைமை தன்னிச்சையாக எடுக்கும் முடிவுகளில் உடன்பாடில்லாதவன் நான். என்னைப் போல் பலரும் நம் இயக்கத்தில் இருக்கிறார்கள் என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு முடிவெடுக்க அவர்களின் நம்பிக்கைக்குகந்த உன்னைப் போல் ஒரு தலைவன் வேண்டும்.

மிக நெருக்கடியான சூழலில் நாம் அனைவரும் இருக்கிறோம். உன் எதிரி இன்னும் சில நாட்களில் இங்கு வருகிறான். ஏதோ ஆலோசனைகளும் முடிவுகளும் எடுக்கப் போகிறார்கள் என்று தோன்றுகிறது. நிலைமை மிகவும் மோசமாவதற்கு முன் இந்த இயக்கத்தைக் காப்பாற்ற எதாவது நாம் செய்தாக வேண்டும். என்னால் முடியும் உதவிகளை நான் செய்யத் தயாராக இருக்கிறேன். தலைமை தாங்க நீ வந்தால் போதும்.

என் நோக்கத்திலும், இந்தக் கடிதத்திலும் எந்தச் சூழ்ச்சியும் இல்லை. அடுத்தவர் மனதில் உள்ளதை அறிய முடிந்தவன் நீ என்பதால் நான் சொல்வது உண்மை என்று நீ உணர்வாய் என்று நம்புகிறேன். உன் பதிலை நீ யோசித்து, பதில் எழுதி, சரியாக 24 மணி நேரம் கழித்து நீ இந்தக் கடிதம் கண்ட இடத்திலேயே வைத்து விட்டால், சரியாக 15 நிமிடம் கழித்து என் பிரதிநிதி அதை அங்கிருந்து எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் சேர்ப்பான்.

சாதகமான நம்பிக்கையூட்டும் பதிலை எதிர்பார்க்கிறேன்.

உன் நண்பன்."

எழுதி முடித்து விட்டு கடிதத்தை இரண்டு முறை வாங் வே படித்துப் பார்த்தார். அவர் பெயரோ, அவன் பெயரோ, அவன் எதிரி பெயரோ, இல்லுமினாட்டி பெயரோ இல்லாத அந்தக் கடிதம், சொல்வதை அவனுக்கு முழுவதும் புரிகிற மாதிரியும், சம்பந்தம் இல்லாதவர்களுக்கு எதுவும் புரியாத மாதிரியும், இருந்தது. திருப்தியுடன் அதை சாமுவலின் ரகசிய மெயிலுக்கு அனுப்பி வைத்து விட்டு வாங் வே அவருக்குப் போன் செய்தார்.

சிந்து எங்கே போவதென்று யோசித்தாள். சுற்றுலாத் தலங்களுக்குப் போகும் மனநிலையில் அவள் இல்லை. போனால் எதையும் ரசிக்க முடியும் என்று தோன்றவில்லை. அவளை அனுப்பாமல் வெளிநாட்டுக்குப் போவதில்லை என்ற முடிவோடு க்ரிஷ் இருந்தான். அவள் மறுத்தால் அவளை அப்புறப்படுத்தவும் அவன் தயங்கப் போவதில்லை என்பதை திட்டவட்டமாய்ச் சொல்லி இருந்தான். அதை அவள் வெற்றுப் பயமுறுத்தலாக நினைக்கவில்லை. அவன் நல்லவன் என்றாலும் ஏமாளியோ முட்டாளோ அல்ல. அவன் குடும்பத்தைக் காப்பாற்ற என்ன வேண்டுமானாலும் அவன் செய்வான்...

எங்கே போவது என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கையில் அவளுக்கு க்ரிஷிடம் இருந்து ஒரு வாட்சப் மெசேஜ் வந்து சேர்ந்தது.

மிருதுளா, சமூக சேவகி, அலைபேசி எண்.........., டெல்லியில் விலாசம் .... கணவர் பெயர் கைலாஷ், சுப்ரீம் கோர்ட் வக்கீல். மகன் பெயர் மிதுன், பொறியல் இரண்டாம் ஆண்டு படிக்கிறான்.

சிந்துவின் இதயத்தில் எத்தனையோ உணர்ச்சிகள் ஆவேசமாக அலைமோதின. மிருதுளா அவளுடைய ஓடிப்போன தாயின் பெயர். அவளுடைய அலைபேசி எண், விலாசம், இப்போதைய கணவர், மகன் பற்றிய தகவல்கள் எல்லாவற்றையும் க்ரிஷ் அனுப்பியிருந்தான்.

பெற்ற குழந்தை நலனை யோசிக்காமல் பழைய காதலனோடு ஓடிப்போனவள் இப்போது சமூக சேவகியாம். எண்ணும் போதே மனம் கொதித்தது. க்ரிஷுக்கு முன்பே இந்தத் தகவல்கள் தெரிந்திருக்கும் என்று தோன்றியது. அப்படி இருந்தும் அப்போதே வெளிப்படுத்தி விடாமல் இப்போது அனுப்பியிருப்பதன் காரணம் என்ன என்று சிந்து யோசித்தாள்.

மனதில் சுமந்து கொண்டிருக்கும் பாரத்தை இறக்கி வை என்று க்ரிஷ் சொல்கிறானோ? மிருதுளாவைப் பார்த்துப் பேச வேண்டியதும், கேட்க வேண்டியதும் நிறைய இருக்கிறது... க்ரிஷ் அறிவுரை சொன்னது போல் பழைய பாரத்தை இறக்கி வைக்காமல் அவளால் புதிய வாழ்க்கையை வாழ முடியாது. யாருமே சுமக்க முடிந்த கனங்களுக்கு ஒரு எல்லை உண்டு... சிந்து டெல்லிக்குச் செல்வது என்று முடிவு செய்து விட்டாள்.

முக்கிய வேலையாக வெளியூர் செல்வதாகவும் திரும்பி வர சில நாட்கள் ஆகும் என்றும் உதய்க்குத் தெரிவித்த போது அவன் வருத்தப்பட்டான். ஏதேதோ சொல்லிச் சமாளித்து விட்டு சிந்து டெல்லி கிளம்பினாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, April 15, 2021

இல்லுமினாட்டி 98



சாலமன் அந்த சர்ச் நோக்கிக் காரில் போய்க் கொண்டிருந்தார். வாங் வே எழுதியனுப்பிய கடிதத்தை அங்கு கொண்டு போய்ச் சேர்க்க வேறு யாரையும் நம்பிக் கொடுத்தனுப்பும் நிலைமையில் அவர்கள் இல்லை. தகவல் ஏதாவது விதத்தில் சிறிது கசிந்தாலும் அவர்களுக்குப் பேராபத்து. இப்போது போவதிலும் கூட ஆபத்து இல்லாமல் இல்லை. வருபவன் எதிரி என்று நினைத்து விஸ்வம் இயங்கினால் அதுவும் கூட ஆபத்தில் முடியலாம். ஆனால் வேறு வழியில்லை. இதை எச்சரிக்கையுடனாவது எதிர்கொண்டு தானாக வேண்டும்.

சாலமன் அங்கே செல்லப் பகல் நேரத்தைத் தான் தேர்ந்தெடுத்திருந்தார். விஸ்வம் கண்ணிமைக்கும் நேரத்தில் தாவித் தாக்க வாய்ப்பு இருக்கிறது என்று தான் எர்னெஸ்டோவுக்கு பல அடுக்குப் பாதுகாப்பு போதாமல் அக்‌ஷயையும் இல்லுமினாட்டி வரவழைத்திருந்தது. அப்படி இருக்கையில் ஒற்றை ஆளாகப் போகிற அவர் நல்ல வெளிச்சத்தில் மிகவும் கவனமாகப் போக வேண்டியிருக்கிறது. காரின் பின் பக்கத்தில் ஒரு பெயர் அட்டையில் “நண்பன்” என்று கொட்டை எழுத்துக்களில் எழுதி வைத்திருந்தார்.

அங்கு சென்று சேர்ந்தவுடன் சற்று தொலைவிலேயே காரை நிறுத்தி அந்தப் பெயர் அட்டையை எடுத்துத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நிதானமாக நடக்க ஆரம்பித்தார்.

சாலமனின் கார் வந்து நிற்கும் சத்தம் தொலைவில் கேட்டவுடனேயே தியானப் பயிற்சியில் இருந்த விஸ்வம் எச்சரிக்கை அடைந்தான். ஜிப்ஸி வெளியே போயிருந்தான். தனியாக இருந்த விஸ்வம் வேகமாக எழுந்து சென்று மறைந்து நின்று சர்ச்சின் உடைந்த ஜன்னல் வழியே பார்த்தான். நடுத்தர வயதைத் தாண்டிய ஒரு ஆள் “நண்பன்” என்ற பெயர் அட்டையைத் தூக்கிப்பிடித்தபடி மிக நிதானமாக நடந்து வந்து கொண்டிருந்தான்.

நண்பன் என்ற அட்டையைப் பார்த்து வந்திருப்பவன் நண்பன் என்று நம்பும் அளவு விஸ்வம் ஏமாளியல்ல. வேறு யாராவது அந்த ஆளுடன் வந்து பக்கத்தில் எங்காவது ஒளிந்திருக்கிறார்களா என்று விஸ்வம் மின்னல் வேகத்தில் நகர்ந்து மற்ற ஜன்னல்களின் கண்ணாடி இடைவெளிகளில் பார்த்தான். அந்த ஆளுடன் வேறு யாரும் வரவில்லை. அவன் உத்தேசம் என்னவென்று அனுமானிக்க முடியவில்லை.

முன்னொரு காலம் போல் நினைத்தவுடன் ஒருவன் மனதில் என்ன உள்ளது என்று அறிய முற்படும் அளவு அவனிடம் சக்தி சேமிப்பு இல்லை. ஒவ்வொரு விரயத்தையும் அவன் யோசித்துச் செய்ய வேண்டியிருக்கிறது. முன்பெல்லாம் மாஸ்டரைப் போன்ற சக்தி வாய்ந்தவர்களிடம் ஏதாவது முயலும் போது தான் அவன் சக்தி விரயம் அதிகமாகும். அதற்கு மட்டும் தான் அவன் தயங்குவான். ஆனால் இப்போது அப்படியில்லை. இப்போது நரம்புகள் தளர்ந்த இந்த உடலில் சிறிது செலவு செய்தாலும் அதை மீண்டும் சேர்க்கக் காலம் அதிகம் தேவைப்படுகிறது. அவன் எதிரிகளை வெல்ல அதிகபட்ச சக்திப் பிரயோகம் வேண்டியிருக்கும். அதனால் தான் தினசரி சேமிக்கும் சக்தியில் அதற்கு ஒரு கணக்குப்படிச் சேர்த்தது போக மீதமிருக்கும் சக்தியை மட்டுமே மற்றவற்றிற்கு அவன் செலவு செய்கிறான்.

இப்போது அப்படிச் சேர்த்திருக்கும் மீதமுள்ள சக்தி க்ரிஷ் வீட்டிற்கு அவன் அனுப்பி வைத்திருக்கும் சிந்து மனதை ஊடுருவி அங்குள்ள நிலவரத்தை அறிய வேண்டிச் சேர்த்து வைத்திருப்பது. ஜிப்ஸியும் இல்லாமல் அவன் தனியாக இருக்கையில் இந்த ஆளின் உண்மையான உத்தேசம் அறிய வேண்டுமானால் அந்தச் சக்தியை அவன் செலவு செய்தேயாக வேண்டும்.. வேறு வழியில்லை.... சிந்துவை பத்து நாட்கள் கழித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

சாலமன் திடீரென்று தன் மீது ஒரு அதீத சக்தியின் ஆக்கிரமிப்பை உணர்ந்தார். அது அவரை அப்படியே கட்டிப்போட்டது போல் நிற்க வைத்தது. அவரால் அடுத்து ஒரு அடி எடுத்து வைக்க முடியவில்லை. எத்தனையோ முறை விஸ்வத்தின் சக்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறார். சில வர்ணனைகளைப் படித்திருக்கிறார். ஆனால் முதல் முறையாகத் தனிப்பட்ட முறையில் அதை உணரும் போது தான் அதன் வலிமை அவருக்குப் புரிந்தது. அவருடைய எண்ணங்களையும் நோக்கங்களையும் யாரோ பார்வையிடுவது போன்ற பிரமை அவருக்கு வந்தது. சுமார் மூன்று நிமிடங்கள் அந்த நிலை நீடித்தது. பின் மெல்ல விலகியது. அந்த மூன்று நிமிடங்களும் அவர் அந்தச் சக்தியிலிருந்து விடுவித்துக் கொண்டு ஒரு அடியாவது எடுத்து வைக்க முயன்றார். இல்லுமினாட்டியின் உபதலைவரால் அது முடியவில்லை. விஸ்வத்தைப் பார்த்து இல்லுமினாட்டியே ஏன் பயப்படுகிறது என்பது இப்போது தான் தெள்ளத் தெளிவாக அவருக்குப் புரிந்தது.

அந்தச் சக்தியின் ஆக்கிரமிப்பு விலகியதும் மெல்ல முன்னேறி வந்தவர் சர்ச்சின் உடைந்த ஜன்னல் வழியாக அந்தக் கடிதத்தை வைத்து அது காற்றுக்குப் பறந்து விடாதபடி அதன் மீது ஒரு சின்னக் கல்லையும் வைத்து விட்டுத் திரும்பி நடக்க ஆரம்பித்தார். போகும் போது எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் கார் ஏறி ஒரு கிலோமீட்டராவது தாண்டும் வரை அவரையும் அறியாமல் அவரிடம் ஒரு படபடப்பு இருந்தது.

விஸ்வம் சாலமனின் கார் கிளம்பும் வரை அந்தக் கடிதத்தைத் தொடவில்லை. வந்திருப்பவர் யார், என்ன உத்தேசம் என்று அந்த ஆளை ஆக்கிரமித்திருந்த மூன்று நிமிட காலத்தில் தெளிவாகத் தெரிந்து கொண்டு விட்டபடியால் அதன் பின் அவன் அவசரப்படவில்லை. கார் கிளம்பும் சத்தம் கேட்ட பிறகு வாங் வேயின் கடிதத்தை எடுத்துப் படித்தான்.

சிறிது நேரத்தில் ஜிப்ஸி வந்தான். அவன் கையில் உணவுப் பொருட்கள் இருக்கும் பை இருந்தது. அதை ஒரு ஓரமாக வைத்து விட்டு அவன் விஸ்வம் கையில் இருந்த கடிதத்தைக் கேள்விக்குறியோடு பார்த்தான்.. விஸ்வம் அமைதியாக அந்தக் கடிதத்தை அவனிடம் நீட்டினான்.

அதைப்படித்துப் பார்த்து விட்டு ஜிப்ஸி கேட்டான். “யாரிடமிருந்து வந்திருக்கிறது என்பதை உன்னால் யூகிக்க முடிந்ததா?”

“முடிந்தது. என் சக்தியைச் சிறிது விரயம் செய்த பின்....” விஸ்வத்தின் குரலில் சிறிது வருத்தம் தெரிந்தது. ஜிப்ஸியால் அவன் மனதைப் புரிந்து கொள்ள முடிந்தது. வாழ்க்கையில் எல்லா சக்திகளையும் சிறிது கூட யோசிக்காமல் விரயம் செய்து தொலைத்தும், எதை எல்லாம் இழந்திருக்கிறார்கள் என்ற பிரக்ஞை சிறிதுமில்லாத மனிதர்கள் ஏராளமாக இருக்கும் இந்த உலகில் ஒவ்வொன்றின் முக்கியத்துவமும் புரிந்து சேமித்துக் காத்து வாழும் இவனைப் போன்ற ஒருசிலரும் இருக்கிறார்கள்...

விஸ்வம் சொன்னான். “ஆனால் அந்த சீனாக்காரனை முழுவதுமாகத் தெரிந்து கொள்ள நான் என் சக்தியை விரயம் செய்ய விரும்பவில்லை. உன்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று விட்டு விட்டேன்...”

ஜிப்ஸி வாங் வேயைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

சிந்து டெல்லியில் தாய் மிருதுளா வீட்டுக்கு அருகிலேயே ஒரு ஓட்டலில் அறை எடுத்துத் தங்கினாள். அந்த ஓட்டலில் இருந்து பத்து நிமிடங்கள் நடந்தால் தாயின் வீட்டை அவள் அடைந்து விடலாம். தாயை அவள் வீட்டுக்கே போய்ச் சந்திக்க சிந்துவுக்கு விருப்பமிருக்கவில்லை. அவளுக்குத் தாயின் இரண்டாம் கணவனையோ, அவள் மகனையோ சந்திக்கப் பிடிக்கவில்லை. தாயிடம் போனில் பேசி ஏதாவது ஒரு பொது இடத்திற்கு அவளை வரவழைத்துப் பேசலாம் என்று எண்ணியிருந்தாள். அழைத்தால் அவள் வருவாளா, வந்தாலும் என்ன சொல்வாள் என்றெல்லாம் யோசித்துப் பார்த்தாள். ஏதேதோ கற்பனைகள் விரிந்தன. அவற்றிலும் ஒன்றுக்கொன்று சம்பந்தமிருக்கவில்லை. வேண்டாவெறுப்பாகப் பேசுவதிலிருந்து கண்ணீருடன் பேசுவது வரைக்கும் பல மாதிரிகள் மனதில் வந்து போயின.

நல்ல வேளையாக அவள் போனில் பேசும் முன் அன்றைய ஆங்கில தினசரிப் பத்திரிக்கையில் அவளது தாய் தலைமையேற்று நடத்தும் ஒரு சமூகப் பொதுநல நிகழ்ச்சி பற்றிய விளம்பரம் வந்திருந்ததை சிந்து பார்த்தாள். 25 ஏழைக்குழந்தைகளின் கல்விக்காக நிதி திரட்டி அவர்களுக்கு அளிக்கும் ஒரு பொது நிகழ்ச்சி அன்று மாலை ஆறு மணிக்கு ஒரு அரங்கில் நடைபெறுகிறது. கூகுளில் அந்த அரங்கு எங்கே இருக்கிறது என்று சிந்து பார்த்தாள். ஓட்டல் இருக்கும் இடத்திலிருந்து 16 கிலோமீட்டர்கள் என்று கூகுள் தெரிவித்தது.

அன்று மாலை அந்தப் பொது நிகழ்ச்சிக்கு முன்னதாகவே சிந்து கிளம்பினாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, April 22, 2021

இல்லுமினாட்டி 99



சிந்து அந்த அரங்கை அடைந்த போது மணி ஐந்தரை. அதிக ஆட்கள் அங்கே இருக்கவில்லை. விழா அமைப்பாளர்களும், உதவி பெறும் ஏழைக் குழந்தைகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் மட்டும் தான் வந்திருந்தார்கள். அரங்கில் முதலிரண்டு வரிசை இருக்கைகளை முக்கியஸ்தர்களுக்கு ஒதுக்கி இருந்தார்கள். அதனால் மூன்றாம் வரிசையில், மேடையில் பேசுபவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்படியான, ஒரு இடத்தில் சிந்து அமர்ந்து கொண்டாள். பின் ஓரளவு கூட்டம் சேர்ந்தது.

அவள் தாய் மிருதுளா சரியாக மணி 5.55க்கு அரங்குக்கு வந்தாள். விழா பொறுப்பாளர்கள் அவளை வரவேற்று மேடைக்கு அழைத்து வந்தார்கள். சிந்துவுக்கு இன்னும் இருபது வருடங்கள் கூடினால் எப்படி இருப்பாளோ அப்படித் தான் மிருதுளா இருந்தாள். கம்பீரமாகவும், அழகாகவும் தெரிந்தாள். அவளை வரவேற்று ஒரு பேச்சாளர் பேசிக் கொண்டிருந்த போது தான் அவள் பார்வையை அரங்கில் அமர்ந்திருப்பவர்கள் மீது பரவ விட்டாள். அவள் பார்வை சிந்துவின் மீதும் படர்ந்து சிறிது நகர்ந்து மீண்டும் சிந்துவின் மீதே வந்து நிலைத்தது.

தன் பார்வையை நம்ப முடியாதது போல் அவள் கண்களை இறுக்க மூடித் திறந்து திரும்பப் பார்த்தாள். ஆச்சரியமும், திகைப்பும் கலந்தவொரு பார்வை பார்த்த அவளை அப்போது தான் பேச அழைத்தார்கள். அவர்கள் அழைத்த பின்னும் அவள் பல உணர்ச்சிகள் ஒருசேரத் தாக்கப்பட்டவள் போல் சிலையாகச் சில விநாடிகள் அமர்ந்திருந்தாள். பின் சுதாரித்துக் கொண்டவளாக மெல்ல எழுந்து பேசப் போனாள். ஆனால் பேச்சில் எந்தத் தங்குதடையும் இருக்கவில்லை. "இந்தத் தேசத்தில் எதை எதையோ இலவசமாகத் தருகிறார்கள். ஆனால் இலவசமாகத் தர வேண்டிய கல்வியை ஏழைக்கு எட்டாத உயரத்தில் வைத்திருக்கிறார்கள். அதைச் சரி செய்ய ஆட்சியாளர்கள் எதையுமே செய்வதில்லை..." என்று ஆரம்பித்துப் பேசியவள் முடிவு வரை தெளிவாகவே பேசினாள். பேச்சின் இடையே சிந்துவையும் பார்த்தாள். சிந்து ஆரம்பத்தில் பாதித்த அளவுக்கு அவளைப் பின்னால் பாதிக்கவில்லை போல் தோன்றியது.

தனக்குத் தைரியமும் துணிச்சலும் இவளிடமிருந்து தான் வந்திருக்கிறது என்று சிந்து நினைத்துக் கொண்டாள். ஏனென்றால் அவள் தந்தை அழுத்தமானவர் என்றாலும் அவரிடம் இந்தத் தலைமைக்குணம் இருக்கவில்லை.

மிருதுளா பேசி முடித்த பின் அந்தக் கல்வித் தொகை வழங்கும் நிகழ்ச்சி சுமார் அரை மணி நேரம் நடந்தது. பின் தேசிய கீதம் பாடி விழா முடிந்து எல்லோரும் போக ஆரம்பித்த போது மிருதுளா சிந்துவும் போகிறாளா என்று பார்த்தாள். ஆனால் சிந்து அமர்ந்திருந்த இடத்தை விட்டு நகரவில்லை.

பின் மிருதுளா மேடையிலிருந்து இறங்க அவளை வழியனுப்ப விழாப் பொறுப்பாளர்கள் பின்னாலேயே வந்தார்கள். சிந்துவும் எழுந்து மிருதுளா வரும் வழியில் நின்றாள். மிருதுளாவை இன்று அவள் விடப்போவதில்லை. மிருதுளா அருகில் வந்து ஆனந்தமான குரலில் "சிந்து?" என்று கேட்டாள். சிந்து முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு லேசாகத் தலையாட்டினாள்.

மகளைப் பாசத்துடன் அணைத்துக் கொண்ட மிருதுளா தன் பின்னால் வந்த விழாப் பொறுப்பாளர்களைத் திரும்பிப் பார்த்தபடி சொன்னாள். "இது என் மகள் சிந்து"

சிந்து இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஓடிப்போன தாய் செய்யும் காரியமல்ல இது. மிருதுளா அவர்கள் முன்னால் அவளைத் தவிர்க்கத் தான் பார்ப்பாள் என்று சிந்து எதிர்பார்த்திருந்தாள்.

அவர்களுக்கு மிருதுளாவின் குடும்பத்தைப் பற்றிச் சரியாகத் தெரியவில்லை போல் இருக்கிறது. அதனால் அந்தத் தகவலில் ஆச்சரியப்படாத விழாப் பொறுப்பாளர்களில் மூத்தவர் ஆதங்கத்துடன் சொன்னார். "அடடா தெரியவில்லையே. தெரிந்திருந்தால் நான் இவரையும் மேடையில் அமர வைத்திருப்பேனே.... இவர் என்னவாக இருக்கிறார்?"

மிருதுளா மகளைப் பார்த்தாள். சிந்து சொன்னாள். "நான் சென்னையில் பத்திரிக்கை ஒன்றில் வேலை பார்க்கிறேன்..."

"சந்தோஷம்" என்று அவர் கை கூப்ப சிந்துவும் கைகூப்பினாள். மிருதுளா "வா சிந்து போகலாம்" என்று சொல்லி நடக்க ஆரம்பிக்க சிந்துவும் கூடவே நடக்க ஆரம்பித்தாள். அவள் இதையும் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. 'கூடவே வசித்து வருகிற மகளை அழைத்துப் போவது போல அழைத்துப் போகிறாளே, என்னவொரு நடிப்பு. என்னவொரு அழுத்தம்...'

மிருதுளா வெளியே காரை நிறுத்திருந்தாள். விழாப் பொறுப்பாளர்களுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு அவள் காரில் ஏறிக் கொள்ள சிந்துவும் ஏறி அவளருகே அமர்ந்து கொண்டாள். கார் கிளம்பியது.

"எப்படியிருக்கே சிந்து?" மிருதுளாவின் குரல் கரகரத்தது.

"நல்லாயிருக்கேன்" சிந்து வறண்ட குரலில் சொன்னாள்.

"எப்போ வந்தே சிந்து?"

"காலைல"

"எங்கே தங்கியிருக்கே?"

சிந்து ஓட்டல் பெயரைச் சொன்னாள்.

"அது எங்க வீட்டுக்குப் பக்கம் தான். அப்பா எப்படியிருக்கார்?"

"யாருக்குத் தெரியும். நான் அவரைப் பாத்து பல வருஷமாச்சு. காலேஜ் முதல் வருஷம் படிக்கறப்ப அந்த வீட்டை விட்டு வெளியே வந்தது. அதுக்கப்பறம் அந்த வீட்டுக்கும் திரும்பிப் போகல. அவரையும் பார்க்கல"

மிருதுளா திகைப்புடன் மகளைப் பார்த்தாள். இந்த நேரம் வரை இல்லாத திகைப்பு இந்த விஷயத்திற்கு வருவது சிந்துவுக்கு ஆச்சரியமாக இருந்தது. "ஏன் சிந்து" என்று மிருதுளா கேட்டாள்.

"ஓடிப்போனவளோட பொண்ணு அந்த வீட்டுல யாருக்கும் வேண்டாம். காலேஜ் போற வரைக்கும் சோறு போட்டதே பெரிய விஷயம்..."

முதல் முறையாக மிருதுளாவின் முகத்தில் பெரும் வலி தெரிந்தது. காரை ஒரு ஓரமாக நிறுத்தி விட்டு மகளிடம் சொன்னாள். "புதிர் போட்டுப் பேசாமல் ஆரம்பத்திலிருந்து சொன்னால் தான் எனக்குப் புரியும் சிந்து..."

சிந்து முதல் முறையாக தன் நினைவுக்குத் தெரிந்த நாட்களில் இருந்து பட்ட சித்திரவதையை அவளிடம் சொல்ல ஆரம்பத்தாள். இது நாள் வரை அவள் பட்ட வேதனைகள் அடுத்தவருக்குத் தெரிய வேண்டாம் என்று நினைத்தவள் அவள். அவர்கள் இரக்கத்துடன் பார்ப்பதை அவள் விரும்பவில்லை. ஆனால் இன்று அவள் வேதனைக்கு முழுக் காரணமாய் இருந்தவளிடம் தன் சித்திரவதையைச் சொல்கிறாள். மனம் என்று ஒன்றிருந்தால், மனசாட்சி என்று ஒன்றிருந்தால் இந்த சமூக சேவகி பதில் சொல்லட்டும், நியாயம் சொல்லட்டும் என்று சிந்து நினைத்தாள்.

அவள் சொல்ல ஆரம்பித்த பின் சில வாக்கியங்களின் முடிவிலேயே மிருதுளாவின் கண்களில் நீர் பெருக ஆரம்பித்தது. அப்போது ஆரம்பித்த கண்ணீர் மகள் பட்டப்படிப்பு முதலாண்டில் இருந்து தானே சமாளித்ததைச் சொன்ன போது கதறியழ ஆரம்பித்தாள். ஆனால் சிந்துவை அந்தக் கதறல் பாதிக்கவில்லை. யாரிடமும் சொல்லத் தயங்கியதையும் தாயிடம் சொன்னாள். "வேலை பார்த்தேன். கிடைச்ச பணம் பத்தலை. திருட ஆரம்பிச்சேன். எங்கேயும் பிடிபடாமல் திருடுவேன்... நீ என்னை விட்டுட்டு ஓடிப்போன பிறகு எனக்கு செக்ஸ் மேல வெறுப்பு வந்திருந்தது. இல்லாட்டி எவன் கூடயாவது படுத்தும் கூடச் சம்பாதிச்சிருப்பேன்.... எப்படியோ சமாளிச்சேன். ஆனால் அந்த ஆள் கிட்ட நான் பணம் கேட்கலை... அதை விடப் பிச்சை எடுத்தால் கூடத் தப்பில்லைன்னு பட்டுச்சு"

அதோடு அவள் நிறுத்திக் கொண்டாள். அதற்குப் பின் விஸ்வத்தைச் சந்தித்ததில் இப்போது உதயின் காதலியாய் நடிப்பது வரை அவள் எதையும் மிருதுளாவிடம் சொல்லவில்லை.

"சிந்து... சிந்து... " என்று அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு கண்களில் ஒற்றிக் கொண்டு அழும் மிருதுளாவின் மீது இப்போதும் அவளுக்கு இரக்கம் வரவில்லை. யாரோ தெருவில் அழுது கொண்டிருக்கும் ஒரு அன்னியரைப் பார்ப்பது போல் அவள் தாயை ஒரு நிமிடம் பார்த்தாள். சுமார் பத்து நிமிடம் மிருதுளா அழ சிந்து ஜன்னல் வழியாகத் தெருவை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள். அந்தத் தெருவில் நடக்கும் மனிதர்களையும், செல்லும் வாகனங்களையும் சிந்து இலக்கில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பத்து நிமிடங்களில் அழுகையை நிறுத்திக் கொண்ட மிருதுளா மகளிடம் சொன்னாள். "நீ என்னை எவ்வளவு தூரம் வெறுக்கிறாய்னு எனக்குப் புரியுது. அது தப்பில்லை. உன் நிலைமைல நானிருந்தாலும் வேற விதமாய் நினைச்சிருக்க வழியில்லை... தப்பு என் பேர்ல தான். அந்த ஆள் உன்னையும் வெறுப்பார்னு நான் எதிர்பார்க்கலை... அதனால தான் ஏமாந்துட்டேன்..."

சிந்து ஒன்றும் சொல்லவில்லை. ஓடிப்போனவள் மீது இருக்கும் கோபம் மகள் மீதும் ஒரு தகப்பனுக்கு வருவது நியாயமில்லை தான். ஆனால் அதை எதிர்பார்க்கவில்லை என்று சொல்லும் இந்தச் சமூக சேவகியை அவள் நம்பத் தயாராயில்லை.

"உன் கதையைச் சொல்லிட்டே. என் கதையையும் நீ கேட்கணும்.... நான் விவாகரத்து பண்ண முடிவெடுத்த நாள்ள இருந்து உன் அப்பா கிட்ட கெஞ்சாத நாளில்லை. "என் குழந்தையை நான் எடுத்துட்டுப் போறேன்"னு தினமும் அழுதழுது கேட்டேன். அந்தச் சண்டாளன் "என் குழந்தை கடைசி வரைக்கும் என் கூட தான் இருக்கும்"னு சொல்லிப் பிடிவாதமாய் மறுத்துட்டார் சிந்து...."

இதென்ன புதுக்கதை என்று சிந்து திகைப்புடன் மிருதுளாவைப் பார்த்தாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, April 29, 2021

இல்லுமினாட்டி 100



மிருதுளா தன் வாழ்க்கைக் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

“என் அப்பா அம்மாவுக்கு நான் ஒரே பொண்ணு. செல்லமா வளர்ந்தேன். நல்லா படிப்பேன். பள்ளிக்கூடத்துல எல்லாப் போட்டிகள்லயும் கலந்துக்குவேன். ஒவ்வொன்னுலயும் ஏதாவது ஒரு பரிசு வாங்காம இருக்க மாட்டேன். அப்பா என்னைப் பையன் மாதிரி வளர்த்தார். சுதந்திரம் கொடுத்தார். பத்தாம் வகுப்புல நான் மாவட்டத்துல முதல் மார்க் வாங்கினேன். ஆனால் ரிசல்ட் வந்த நாள் தான் என் அப்பா மாரடைப்புல காலமானார். அப்புறம் அம்மாவோட தம்பி வீட்டுல அடைக்கலம்... அவருக்கு ரெண்டு பொண்ணுங்க. என்னை விட வயசுல சின்னவங்க. கல்லூரிப் படிப்பு மாமா தயவுல கிடைச்சுது. அங்கே படிக்கறப்ப தான் கூடப்படிச்ச ரகு கூட காதல் வந்தது...”

“வீட்ல மாமா எங்க காதலை ஏத்துக்கல. ஜாதி மாத்தி எனக்குக் கல்யாணம் பண்ணிக் குடுத்தா அவரோட பொண்ணுங்களுக்கு நல்ல வரன் கிடைக்காதுன்னு அவர் கவலைப்பட்டார். யாரும் இல்லாத காலத்துல ஆதரவு தந்தவர், படிக்க வச்சவர்ங்கற நன்றிக் கடன்ல காதலை மறந்து அவர் பார்க்கிற பையனைக் கட்டிக்க நான் தயாரானேன். ரகுவுக்கு அதில் வருத்தம்னாலும் என்னைப் புரிஞ்சுகிட்டு நாகரிகமா ஒதுங்கிட்டார்...”

“உன் அப்பாவோட என் கல்யாணம் ஆச்சு. ஒரு வருஷத்துல நீயும் பிறந்துட்டே. உன் அப்பாவுக்கு ஈகோ அதிகம். நான் அவரை விடப் புத்திசாலியாயிருந்ததும், துணிச்சலாயிருந்ததும் அவருக்குச் சுத்தமா பிடிக்கலை. மனைவிங்கறவ கணவனைக் கேட்டு தான் எல்லாம் செய்யணும், அடங்கி நடக்கணும், தானா சின்ன முடிவு கூட எடுக்கக்கூடாது, வெளியாள்கள் கிட்டப் பேசக்கூடாது, அழகா டிரஸ் பண்ணிக்கக்கூடாது, அவர் கூட இருந்தால் மட்டும் தான் வெளியே போகணும், இல்லாட்டி போகக் கூடாதுன்னு ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள் அவருக்கு இருந்துச்சு. என்னால அது முடியல சிந்து. ஒரு ஜெயில் வாழ்க்கையை விடக்கொடுமையாய் நான் உணர்ந்தேன். ஏதாவது நியாயம் கேட்டாலோ, எதிர்த்துப் பேசினாலோ அப்புறம் ஒரு மாசம் மனுஷன் பேச மாட்டார். என் கிட்டே மட்டுமல்ல குழந்தை உன்னைக் கூட எடுத்துக்க மாட்டார். எங்க மாமாவைக் கூப்பிட்டனுப்பி புகார் சொல்வார். என் மேல தப்பில்லைன்னு தெரிஞ்சாலும் மாமா அவரைத் திருப்திப்படுத்த எனக்கு புத்திமதி சொல்லிட்டு போவார் ...”

“ஒரு தடவை என் மாமாவுக்கே சலிச்சுப் போச்சு. அவர் சொல்ற புகார் மகா அபத்தமாய் பட்டுடுச்சு. "எந்தக் காலத்துல இருக்கீங்க மாப்பிள்ளை. படிச்சவங்க நீங்க இப்படிச் சொல்றதே தப்பில்லையா"ன்னு அவர் கேட்டுட்டார். அதுல இருந்து அவர் மேல கூட உன் அப்பாவுக்குக் கோபம் வந்துடுச்சு. அப்ப இருந்து மாமாவுக்கு என் வீட்டுக்கு வர அனுமதி இல்லை. அதே மாதிரி எனக்கும் அவர் வீட்டுக்குப் போக அனுமதியில்லை... எங்கம்மா இறந்தப்ப மட்டும் ஒரு தடவை போய் பார்த்துட்டு வர அனுமதி கொடுத்தார். ஆனால் மாமா வீட்டில் அம்மா பிணம் இருந்ததால உங்கப்பா அவளைப் பார்க்கக்கூட வரலை... எங்கம்மா கருமாதி சடங்குகள் எதுக்கும் போக எனக்கும் அனுமதி இல்லை.”

“அதுக்கப்புறம் எனக்கு ரொம்பவே வெறுத்துப் போச்சு. அந்த ஆள் கூட வாழ எனக்குப் பிடிக்கலை. அவரை விவாகரத்து பண்ண முடிவு பண்ணிட்டேன். எனக்குத் தெரிஞ்ச ஒரே வக்கீல் ரகு தான்... ரகு அப்ப தான் ப்ராக்டிஸ் ஆரம்பிச்சு இருந்தார். அவர் கிட்ட போய் என் நிலைமையைச் சொன்னேன். அவர் விவாகரத்து வாங்கித் தர்றது மட்டுமில்லாமல் என்னைக் கல்யாணம் பண்ணிக்கறதா சொன்னார். உன்னையும் சேர்ந்தே ஏத்துக்கறதா சொன்னார். அந்தப் பெருந்தன்மையை நான் எதிர்பார்க்கலை.”

”வீட்டுக்கு வந்து உன் அப்பா கிட்ட எங்கள் முடிவைச் சொன்னேன். அவர் அதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கலை. ஆத்திரத்தில் கண்டபடியெல்லாம் கேவலமாய் பேசினார், அதுக்கெல்லாம் நான் அசராததைப் பாத்து பிறகு அமைதியானார். பிறகு உன்னையும் என்னையும் மாறி மாறி ரொம்ப நேரம் பார்த்தார். கடைசில அவர் “நீ வேணும்னா போய்க்கோ. நான் என் குழந்தைய விட்டுக் கொடுக்க மாட்டேன்”னு சொன்னார்.”

ரகு கூட வீட்டுக்கு வந்து உன் அப்பா கிட்ட பேசினார். அவரையும் கேவலமா பேசி உன் அப்பா வெளிய அனுப்பிச்சிட்டார். நான் என்ன ஆனாலும் சரி அவர் கூட வாழ மாட்டேன்னு உறுதியா நின்ன பிறகு அவரும் உறுதியாவே சொன்னார். ”விவாகரத்து வேணும்னா தர்றேன். ஆனா எனக்குன்னு இந்த உலகத்துல இருக்கிறது என் பொண்ணு ஒருத்தி தான். அவளை மட்டும் விட்டே தர மாட்டேன். எவ்வளவு வருஷமானாலும் சரி, எத்தனை செலவானாலும் சரி சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போவேன்”னு பிடிவாதமா சொன்னார்.”

“ரெண்டு பேரும் சம்மதிச்சு விவாகரத்து கேட்டால் ஓரளவு சீக்கிரமே விவாகரத்து கிடைக்கும். அப்படியில்லாட்டி விவாகரத்து கிடைக்க குறைந்தது ஏழெட்டு வருஷமாவது ஆகும்ங்கற நிலைமை இருந்தது. அது வரைக்கும் அந்த ஆள் கூட வாழ்றதுல எனக்கு உடன்பாடு இருக்கலை. ஆனாலும் கடைசி வரைக்கும் தொடர்ந்து அந்த ஆள் கிட்ட உன்னை எடுத்துட்டு போறேன்னு கெஞ்சியிருக்கேன் சிந்து. அந்த ஆள் ஒத்துக்கலை. அது மட்டுமல்ல. அந்த ஒரு மாசம் உன் மேல உயிரையே வெச்சிருக்கற மாதிரி நடிச்சார்; எப்பப் பாரு உன்னை அவரே தூக்கி வெச்சிருப்பார்.... விவாகரத்துக்குக் கையெழுத்துப் போடணும்னா உன் தலை மேல கை வெச்சு எப்பவுமே உனக்காக உரிமை கொண்டாடி வர மாட்டேன்னும், உன்னைப் பார்த்துப் பேச நான் எந்த முயற்சியும் எடுக்க மாட்டேன்னும் சத்தியம் பண்ணித் தரச் சொன்னார்.”

“எனக்கு அந்த ஆள் கூட அதுக்கு மேல மல்லுக்கட்ட முடியல. யோசிச்சுப் பார்த்தப்ப உன் மேல எனக்கு இருக்கிற உரிமை அவருக்கும் இருக்குன்னு தோணுச்சு. மனைவியைக் கொடுமை பண்றவன் கூட அவன் ரத்தம்கிறதால குழந்தைகள் கிட்ட நல்லபடியா இருக்கிறதை நானும் பல இடங்கள்ல பார்த்து இருக்கேன். அதையெல்லாம் நினைச்சு அழுதுகிட்டே உன் வாழ்க்கைல நான் எப்பவும் எந்த விதத்துலயும் குறுக்கிட மாட்டேன்னு உன் தலை மேல் சத்தியம் பண்ணிக் குடுத்தேன் சிந்து.... பிறகு தான் விவாகரத்துக்குக் கையெழுத்துப் போட்டார். விவாகரத்து கிடைச்சவுடனேயே யார் கிட்டயும் சொல்லிக்காமல் உன்னைத் தூக்கிட்டு ஊரை விட்டும் போயிட்டார்.... எங்கே போனீங்கன்னும் தெரியல. அதே ஊர்ல இருந்திருந்தா தெரிஞ்சவங்க மூலமா என்ன நடக்குதுன்னாவது எனக்குத் தெரிஞ்சிருக்கும்... சத்தியமும் செஞ்சு குடுத்திருந்ததால நான் உன்னைத் தேடவும் முயற்சி எடுக்கல. எங்கேயோ நீ நல்லாயிருப்பாய்னு நம்பிக்கையோட இருந்துட்டேன்.. அப்படி உன் மேல வெறுப்பிருக்கிற ஆள் நான் கெஞ்சினப்ப என் கூடவே அனுப்பிச்சு அந்த ஆளோட அடுத்த குடும்பத்தோட நிம்மதியாய் இருந்திருக்கலாமே. அதை ஏன் செய்யலன்னு எனக்கு இன்னும் புரியல சிந்து....”

“இன்னைக்கு உன்னைப் பார்த்தப்ப கூட அம்மாவை எப்படியோ தேடிக் கண்டுபிடித்து வந்திருக்கிறதாய் நினைச்சேனே ஒழிய ஒரு ஓடிப்போன அம்மா கிட்ட நியாயம் கேட்கற மகளாய் வந்திருப்பாய்னு நினைச்சே பார்க்கலை...”

மிருதுளா மகள் தோளில் சாய்ந்து அழுதாள். அவள் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கையில் அவள் மகள் ஒவ்வொரு நிமிடமும் சித்திரவதைப் பட்டு வாழ்ந்து கொண்டிருந்ததை அவளால் தாங்க முடியவில்லை. சிந்துவின் கண்களும் மெல்லக் கலங்க ஆரம்பித்தன.

சிந்துவுக்கு நடந்திருப்பதை ஜீரணிக்கவே முடியவில்லை. அவள் தந்தையின் மகாமட்டமான குணத்திற்கும், நடவடிக்கைகளுக்கும் காரணத்தை உளவியல் நிபுணர்கள் கூட்டாக ஆராய்ந்தாலும் கண்டுபிடிக்க முடியுமா என்று அவளுக்குத் தெரியவில்லை. அவளே காரணங்களை யோசித்துப் பார்த்தாள். ஆரம்பத்தில் இருந்தே அம்மாவைப் பற்றி ஒரு முற்றிலும் பொய்யான பிம்பத்தை அப்பா அவள் மனதில் மட்டுமல்ல, மற்றவர்கள் மனதிலும் உருவாக்கி வைத்தது தன் மேல் குற்றமில்லை என்று காண்பித்துக் கொள்வதற்காக இருக்கலாம். சிந்துவிடமே அந்தப் பொய்யைச் சொல்லி நம்ப வைத்து தாயை வெறுக்க வைத்ததும், மிருதுளாவுடன் மகளை அனுப்பாமல் இருந்ததும் மிருதுளாவைத் தண்டிக்கும் முயற்சியாக இருந்திருக்கலாம். மிருதுளாவின் தோற்றத்திலேயே வளர்ந்து வந்த மகள் அவளைப் போலவே புத்திசாலியாகவும் இருந்தது அவர் மனதில் மேலும் வெறுப்பை வளர்த்தியிருக்கலாம்...

காரணங்கள் என்னவாக இருந்தாலும் அவரால் அவள் இழந்தது ஏராளம். இழக்கவிருந்ததும் ஏராளம்.... க்ரிஷ் மட்டும் நெருக்கடியைத் தந்து அவளைக் கிளப்பியிருக்காவிட்டால் இங்கு வந்திருக்க மாட்டாள். அவள் தாயைப் பற்றிய தவறான அபிப்பிராயத்திலேயே வாழ்ந்து இறந்துமிருப்பாள்.

(தொடரும்)

என்.கணேசன்

இல்லுமினாட்டி 101



மிருதுளா அழுது ஓய்ந்த பின் காரைக் கிளப்பினாள். போகும் போது மகளிடம் கேட்டாள். "சரி பழைய கதையை விடு. காலம் கழிஞ்சாவது நாம சந்திச்சுகிட்டோம். உண்மையைத் தெரிஞ்சுகிட்டோம். அது போதும். நீ இப்போ எங்கே இருக்கே? என்ன பண்ணறே?.."

சிந்து ஏற்கெனவே உடைந்து போயிருக்கும் தாயிடம் தன்னுடைய நெருக்கடியான நிலைமையைச் சொல்லப் போகவில்லை. சென்னையில் பத்திரிக்கை ஒன்றில் வேலை பார்ப்பதாய்ச் சொன்னாள்.

மிருதுளா கேட்டாள். "சிந்து இப்ப நம்ம வீட்டுக்கே போயிடலாமா?"

சிந்துவுக்கு திடீர் என்று அந்த வீட்டை அவள் வீடாக நினைக்க முடியவில்லை. "இப்போ வேண்டாம்மா. நான் நாளைக்குக் காலைல வர்றேன்... என்னைப் பத்தி உங்க பையன் கிட்ட சொல்லியிருக்கீங்களா?" என்று கேட்டாள்.

மிருதுளா வருத்தத்துடன் சொன்னாள். "சொல்லலை. அவன் எப்பவுமே அவனுக்கு ஒரு அக்காவோ தங்கையோ இருந்தால் நல்லாயிருந்திருக்கும்னு சொல்லிகிட்டே இருப்பான். நீ இருப்பதை
சொல்லியிருந்தால் சத்தியமாவது மண்ணாங்கட்டியாவதுன்னு சொல்லி அவன் உன்னைத் தேடிக் கிளம்பியிருப்பான். அதனால சொல்லலை.."

"அவன் பேரென்னம்மா? என்ன பண்றான்?"

"நவீன். பி.காம் கடைசி வருஷம் படிக்கிறான்"

சிந்து மெல்லக் கேட்டாள். "உன் கணவர் ஒன்னும் சொல்ல மாட்டாராம்மா?"

"அவர் உன்னை அன்னைக்கே மகளாய் ஏத்துக்கத் தயாராய் இருந்தவர் சிந்து. தங்கமான மனுஷன். அவரைக் கல்யாணம் பண்ணிகிட்ட நாள்ல இருந்து நான் எப்பவாவது வருத்தமாய் இருந்திருக்கேன்னு சொன்னால் அது உன் நினைவு வந்து மனசு ஏங்கறப்ப தான். வேறெந்த விதத்திலும் வருத்தப்பட ஒரு காரணம் கூட அவர் எனக்குத் தரலை..."

அம்மா அவ்வப்போது அவளை நினைத்து வருத்தப்பட்டிருக்கிறாள் என்று தெரிந்த போது சிந்துவின் மனம் மென்மையாகியது. இவளைப் போய் நாம் தினமும் சபித்துக் கொண்டிருந்தோமே என்னும் குற்றவுணர்ச்சி அவளுக்குள் எழுந்து தங்கியது...

ஓட்டலில் அவளை இறக்கி விட்ட போது நாளைக்காலை வந்து கூட்டிக் கொண்டு போவதாய்ச் சொல்லி விட்டு மிருதுளா போனாள். சிந்துவுக்கு மனம் மிக லேசாக இருந்தது. மனதில் வருடக்கணக்கில் சுமந்த பாரம் விலகி விட்டிருந்ததால் ஓட்டல் அறைக்கு வந்து படுத்தவள் அன்று என்றுமில்லாத ஆழ்ந்த உறக்கம் உறங்கினாள்.

காலை அழைப்பு மணி அடித்த போது தான் சிந்து எழுந்தாள். கடிகாரம் பார்த்தாள். காலை ஏழு மணி தான் ஆகியிருந்தது. கதவைத் திறந்த போது மிருதுளா, ரகு, நவீன் மூன்று பேரும் நின்றிருந்தார்கள்.

நவீன் தான் உற்சாகமாக முதலில் பேசினான். "ஹாய் அக்கா. நான் தான் உன் ஒரே தம்பி நவீன்" என்று சொல்லி கைகுலுக்கினான். ரகுவும், மிருதுளாவும் பெருமிதத்தோடு அவர்கள் இருவரையும் பார்த்ததைக் கவனித்த போது சிந்துவுக்கு உதயின் குடும்பம் நினைவில் வந்து போனது. ரகு ஒரு பாசமுள்ள தந்தையாக அவளை அணைத்துக் கொண்டு சொன்னார். "நீ வந்தது ரொம்ப சந்தோஷமாய் இருக்கு சிந்து..."

நவீன் அவளுடைய பொருள்களையெல்லாம் சூட்கேஸில் போட ஆரம்பித்தபடியே சொன்னான். "கிளம்பு வீட்ல போய் பெட் கா∴பி குடிச்சுக்கலாம்..."

எந்த அன்பும் பாசமும் அவள் ஒரு காலத்தில் ஏங்கிக் கிடைக்கவில்லையோ அது இனி தங்கு தடையில்லாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவள் மனதில் துளிர் விட்டது. சிந்து தாயைப் பார்த்தாள். தாயின் கண்களில் தெரிந்த ஈரம் அவள் கண்களையும் ஈரமாக்கியது.

விஸ்வம் ஜிப்ஸி சொன்னதை கண்களை மூடிக் கொண்டு கூர்ந்து கேட்டான். "வாங் வே இப்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சக்தி வாய்ந்த ஒரு தலைவர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு சிறிய பதவியில் இருந்து சக்தி வாய்ந்த தலைவராக வளர்ந்தது இல்லுமினாட்டியின் உறுப்பினராக அவர் மாறிய பின் தான். இப்போது சீனாவின் அதிகார மையத்தில் அவர் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். அவர் மகா புத்திசாலி. கடும் உழைப்பாளி. தன் புத்திசாலித்தனத்தாலும், உழைப்பாலும் அவர் கட்சியில் மூன்றாமிடம் வரை வந்திருக்கிறார். இல்லுமினாட்டியில் தலைமைக்குழு உறுப்பினர்களில் ஒருவராக உயர்ந்திருக்கிறார். படிப்படியாக தாய்நாட்டிலும் இல்லுமினாட்டியிலும் முன்னேறியிருக்கும் அவருக்கு இரண்டிலும் அதற்கு மேலான முன்னேற்றம் நீண்ட காலமாக ஏற்படவில்லை. அதில் அவருக்கு ஏகப்பட்ட வருத்தம்..."

"வாய்விட்டுச் சொல்லா விட்டாலும் அவருடைய ஒரே லட்சியம் இல்லுமினாட்டியின் தலைவராவது தான். எர்னெஸ்டோ ராஜினாமா செய்யப் போவதாக சில காலம் முன்னால் அறிவித்த போது அவர் கனவு நனவாகும் என்ற நம்பிக்கை அவருக்கு வந்திருந்தது. ஆனால் அந்தச் சமயத்தில் நீ இல்லுமினாட்டியில் நுழைந்து விட்டாய். தலைமைப் பதவிக்குப் போட்டி வந்தால் நீ வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம் இருப்பது தெரிந்து அவர் மனம் நொந்திருந்தார். ஆனாலும் மோதிப்பார்ப்பது என்று தயாராக இருந்தார். அந்தச் சமயத்தில் அவருடைய முதல் எதிரி நீயாக தான் இருந்தாய். ஆனால் போட்டி நடப்பதற்கு முன் க்ரிஷ் வந்து எல்லாவற்றையும் மாற்றி விட்டான்."

"நீ இறந்த போது சந்தோஷப்பட்ட ஆட்களில் அவரும் ஒருவர். போட்டியிலிருந்து வலிமையான எதிரி ஒழிந்தான் என்று நினைத்து சந்தோஷப்பட்டார். ஆனால் சந்தோஷம் நீடிக்கவில்லை. காரணம் நீ இன்னொரு உடலில் புகுந்து விட்டாய். எர்னெஸ்டோவோ ராஜினாமா செய்வதைத் தள்ளிப் போட்டார். இரண்டுமே அவருக்கு ஏமாற்றம் தந்தன. அதற்குப் பின் நடந்தது எதுவும் கூட அவருக்குத் திருப்தியில்லை."

"நீ உயிர் பிழைத்ததைச் செய்தியாக மட்டுமே எர்னெஸ்டோ. உறுப்பினர்களுக்கு அனுப்பியிருந்தார். கூடுதலாக சில தகவல்களை தலைமைக்குழு உறுப்பினர் ஐந்து பேருக்கு அனுப்பியிருந்தார். அதற்குப் பின் எந்தத் தகவலும் தலைமைக்குழு உறுப்பினர்களுக்குக் கூடத் தெரிவிக்கவில்லை. அது எர்னெஸ்டோவின் சர்வாதிகாரத்தைக் காட்டுவதாக எண்ணிக் குமுறினார். நீ அனுப்பிய கடிதமும் கூட எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டது. ஆனால் அதற்குப் பின் கூடுதல் தகவல்கள் எதுவும் தலைமைக்குழு உறுப்பினர்களுக்குக் கூட இல்லை. இது அவருக்குப் பிடிக்கவில்லை."

"அதுமட்டுமல்ல. எர்னெஸ்டோ க்ரிஷ் வந்த பிறகு சிறிது மாற ஆரம்பித்திருக்கிறார். அவர் பழைய பாணியில் போகாமல் கொஞ்சம் மென்மையாகவும், பொதுமக்களுக்குப் பெரியதாய் கெடுதல் ஆவதைத் தவிர்க்கும்படியாகவும் உலக விவகாரங்களில் சமீப காலத்தில் சில முடிவுகள் எடுத்திருந்தார். இப்படி மென்மைக்கு மாறுவதும், தன்னிச்சையாக அவர் முடிவுகளை எடுப்பதும் வாங் வேக்கு உடன்பாடில்லை. உண்மையில் இல்லுமினாட்டிக்கு அழிவு வருவது இந்த மென்மையான போக்கே என்று உறுதியாக நம்பும் வாங் வே எர்னெஸ்டோவை விட நீ தேவலை என்று நினைக்க ஆரம்பித்திருக்கிறார். வாங் வே இப்போது இல்லுமினாட்டிக்கு முதல் எதிரி எர்னெஸ்டோ என்றும் அவரை அப்புறப்படுத்துவது உன் ஒருவனால் தான் முடியும் என்றும் நம்புகிறார். ஒரு வேளை நீ இல்லுமினாட்டியின் தலைவரானால் அவருக்கு உபதலைவர் பதவி கிடைத்தாலும் பரவாயில்லை என்று நினைக்க ஆரம்பித்திருக்கிறார். அதனால் தான் உனக்கு இந்தக் கடிதம்..."

எல்லாம் கேட்டுக் கொண்ட விஸ்வம் ஒரே ஒரு கேள்வியை மட்டும் தான் ஜிப்ஸியிடம் கேட்டான். "வாங் வேயை எந்த அளவு நம்பலாம்? அந்த ஆளின் துணிச்சலும், தைரியமும் எந்த அளவில் இருக்கும்?"

ஜிப்ஸி சொன்னான். "தைரியமும் துணிச்சலும் தேவைப்படும் போது நூறு சதவீதம் வெளிப்படுத்த முடிந்த ஆள் அவர். வெல்வது உறுதி என்ற நம்பிக்கை மட்டும் வந்து விட்டால் அவர் எதையும் தயங்காமல் செய்வார். ஆனால் ஒரு வேளை நீயும் எர்னெஸ்டோவும் மோதிக் கொண்டால் அவர் முதல் ஆசை நீங்கள் இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் அழித்து மடிந்தால் நல்லது என்பதாகத் தான் இருக்கும். அப்படியானால் அவர் தலைவராகப் பார்ப்பார்..."

விஸ்வம் அதில் தவறு காணவில்லை. அவருடைய இடத்தில் அவன் இருந்தாலும் அப்படித்தான் நினைப்பான். அப்படி ஆகாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவனுடைய சாமர்த்தியமாகத் தான் இருக்க வேண்டும். இது போன்ற போட்டி மிகுந்த இடங்களில் அடுத்தவன் நியாயமானவனாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம்...

விஸ்வம் கேட்டான். "ஒருவேளை எர்னெஸ்டோவா நானா என்ற நிலைமை இருந்தால் வாங் வே என்ன செய்வார்?"

"அப்படி ஒரு நிலைமையில் உன்னைத் தான் வாங் வே ஆதரிப்பார். ஏன் என்றால் நீ தலைவனானால் அவர் உபதலைவராக ஆகலாம். ஆனால் எர்னெஸ்டோ வென்றால் அவருக்கு எந்த லாபமும் இல்லை"

விஸ்வத்துக்கு அது போதும் என்று தோன்றியது.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, May 13, 2021

இல்லுமினாட்டி 102



சிந்து தாயின் வீட்டில் பாச மழையில் நனைந்தபடியே இருந்தாள். எல்லாம் கனவில் நடப்பது போலிருந்தது. திடீரென்று விழிப்பு வரும், அப்போது பழைய நரகத்திலேயே உழல்வதே நிஜமாக இருக்கும் என்ற பயம் வந்து எட்டிப் பார்த்தது. மெல்லத் தன் கையைக் கிள்ளிப் பார்த்தாள். வலித்தது. நடப்பது கனவல்ல.

நவீன் வீட்டின் விருந்தினர் அறையைச் சகோதரியின் அறையாக மாற்றத் திட்டமிட்டு வேலை செய்து கொண்டிருந்தான். அவர்கள் யாரும் அவளைத் திரும்ப அனுப்பத் தயாராக இல்லை. நவீன் சொன்னான். "போதும் நீ தனியாய் இருந்தது. உனக்கு எந்த மாதிரி வேலையாக இருந்தாலும் டெல்லியில் கண்டிப்பாய்க் கிடைக்கும். அங்கே ராஜினாமா செய்துட்டு இங்கேயே வந்துடு..."

அம்மாவும் அதையே சொன்னாள். ஆனால் அவர்களுக்கு என்ன பதில் சொல்வது, எப்படிப் புரிய வைப்பது என்று புரியாமல் சிந்து வேதனைப்பட்டாள். அவள் விஸ்வத்தைச் சந்திப்பதற்கு முன் இவர்கள் கிடைத்து இருந்தால் அவள் கண்டிப்பாகத் தன் பழைய வாழ்க்கைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டுப் புதிய அன்பான வாழ்க்கையைச் சந்தோஷமாக ஆரம்பித்திருப்பாள். ஆனால் இப்போது நிலைமையே வேறாக இருக்கிறது. எந்த நேரமும் விஸ்வம் அவளைத் தொடர்பு கொள்வான். அவன் அவளை இனி என்ன செய்யச் சொல்வான் என்று தெரியவில்லை. அவன் சொல்வது எதுவாக இருந்தாலும் அதை க்ரிஷ் அனுமதிக்க மாட்டான். இரண்டு பேரில் ஒருவருக்கு அவள் எதிரியாக வேண்டியிருக்கும். இதில் அவள் அழிவது உறுதி. அழிவு யார் கையால் என்று மட்டும் தான் அவள் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும்.... விதி அவள் வாழ்க்கையில் விளையாடி இருக்கும் விதம் நினைக்கையில் தனிமையில் ஒரு முறை ஓவென்று அழத் தோன்றியது. எல்லாம் சரியாக இப்போது மாறியும், அவள் கடந்த காலமும், அப்போது எடுத்த முடிவுகளும் அவளுக்கு எதிராக இருக்கிறது.

அவள் தாயிடம் சொன்னாள். "இப்போதைக்கு இங்கேயே வந்துட முடியாதும்மா...."

மிருதுளா சந்தேகத்தோடு மகளைக் கேட்டாள். "அங்கே உன் மனசுக்குப் பிடிச்ச யாராவது இருக்காங்களா சிந்து. இருந்தால் தயங்காமல் சொல்லு. நாங்க வந்து அந்தப் பையனோட அம்மா அப்பாவைப் பார்த்துப் பேச வர்றோம்"

சிந்து என்ன சொல்வாள்.? தமிழ்நாட்டு முதலமைச்சரின் மூத்த மகன் அவளைக் காதலிக்கிறான் என்பதைச் சொல்ல முடியுமா? அங்கே அவளுக்கு எத்தனை நாள் வேலை, முடிவில் என்ன ஆகும் என்றெல்லாம் அவளுக்கே தெரியாத போது தாயிடம் என்ன சொல்வாள்? "அப்படியெல்லாம் அதுவும் இல்லைம்மா" என்றாள்.

ஒரு வேளை நடிப்புக்குப் பதிலாக அவளுக்கு உதய் மீது நிஜக்காதல் வந்திருந்து இவர்கள் அங்கே பேசப் போனால் நன்றாகவே இருக்கும் என்று இப்போது தோன்றியது. உதயையும் பத்மாவதியையும் இவர்களுக்கு நிறையவே பிடித்து இருக்கும்... ஆனால் நாடகத்தை நிஜமாக்க வழியில்லை...

சிந்துவின் தந்தை மீது மிருதுளாவுக்கு அடுத்தபடியாக அதிகமாய் கோபம் இருந்தது நவீனுக்குத் தான். "அவனை எல்லாம் கல்லாலேயே அடிச்சுச் சித்திரவதை பண்ணிக் கொல்லணும். மனுஷனா அவன்?"

அவன் சகோதரியிடமும் கேட்டான். "உனக்கு அந்த ஆளைப் பார்த்து நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலு வார்த்தை கேட்க வேண்டும் என்று கூடத் தோன்றவில்லையா அக்கா?"

சிந்துவுக்கு அப்படித் தோன்றவில்லை என்பது தான் அவளுக்கே ஆச்சரியமாய் இருந்தது. அவள் தந்தையை ஒரு மனிதனாகவே நினைக்கவில்லை. அவரைப் பற்றி நினைக்கையிலேயே அவளுக்கு அருவறுப்பாக இருந்தது. அதனால் போய்ப் பார்க்கவோ, கேள்வி கேட்கவோ அவளுக்குத் தோன்றவில்லை. அதைத் தம்பியிடம் அவள் சொன்னாள்.

ஆனால் மிருதுளா சொன்னாள். "எனக்கு அந்த ஆளை ஒரே ஒரு தடவை பார்க்க வேண்டும். அதுக்கப்பறம் ஜென்மத்துக்கும் அந்த ஆள் பார்வையில படறது கூடக் கேவலம்னு நினைக்கிறேன் நான்"

மறு நாளே அவர்கள் நால்வரும் மும்பைக்கு விமானத்தில் கிளம்பினார்கள்.

விஸ்வம் ஜிப்ஸியிடம் கேட்டான். "நாம் இருக்குமிடம் எப்படி வாங் வேக்குத் தெரிந்தது?"

ஜிப்ஸி இதற்குப் பதிலை எப்படித் தெரிவிப்பது என்று யோசித்தான்.

விஸ்வம் உடனடியாகச் சொன்னான். "உண்மையைச் சொல்ல யாருமே யோசிக்க வேண்டியதில்லை"

ஜிப்ஸி புன்னகைத்தான். உண்மையை சொன்னால் அதை எப்படிக் கண்டுபிடித்துச் சொன்னான் என்றும் சொல்ல வேண்டியிருக்கும். அதைச் சொன்னால் அவனைப் பற்றியும் அவன் சொல்லியாக வேண்டியிருக்கும். நிறைய நாட்கள் விஸ்வத்திடமிருந்து அவன் மறைக்க முடியாது என்றாலும், இன்னேரம் ஓரளவாவது விஸ்வம் அவனைப் பற்றி யூகித்தாவது இருப்பான் என்றாலும் அவனாகத் தன்னைப் பற்றி இப்போது சொல்ல விரும்பவில்லை.

"இல்லுமினாட்டியின் ஆரகிள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாய் அல்லவா?" என்று ஜிப்ஸி கேட்டான்.

விஸ்வம் எப்படி மறப்பான்? அந்த ஆரகிளின் எச்சரிக்கை ஒன்றை வைத்தல்லவா அவன் விதியும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. "தயவு செய்து அது இப்போது நான் இங்கேயிருப்பேன் என்றும் தெரிவித்திருக்கிறது என்று மட்டும் சொல்லாதே நண்பா. எனக்குச் சலிப்பாக இருக்கிறது. என் விதியை நான் தான் தீர்மானம் செய்வேன். அந்தச் சுதந்திரம் மறுக்கப்பட்டால் இந்த உலகில் நான் வாழ்வதில் அர்த்தமில்லை என்று நான் நினைக்கிறேன். யாரோ எழுதிய விதியில் நான் பயணிக்க விரும்பவில்லை. அதைவிட மரணம் மேல், எல்லாவற்றையும் முடித்துக் கொள்வது உத்தமம் என்று நான் நினைக்கிறேன்..."

ஜிப்ஸி 'புரிகிறது' என்று தலையசைத்தான். பின் மெல்லச் சொன்னான். "ஆரகிள் இந்த இல்லுமினாட்டி கோயிலில் தான் எல்லாம் தீர்மானிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறது. அதைச் சொல்லியிருக்கிற ரகசியச் சுவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது...."

"அப்படியானால் இல்லுமினாட்டிக்கும் இந்த இடம் பற்றித் தெரிந்து விட்டதா?"

"இல்லை. அந்த ரகசியச் சுவடி வைத்திருக்கும் ஆள் மூலமாகத் தான் இந்தத் தகவலை வாங் வே பெற்றிருக்கிறார். அதை வைத்துத் தான் நீ இங்கே இருக்கக்கூடும் என்று யூகித்திருக்கிறார். ஆனால் அவர் அறிந்ததை இல்லுமினாட்டி தலைமையிடம் தெரிவிக்க மாட்டார் என்பதால் இதில் பிரச்னை இல்லை"

"அந்த ரகசியச் சுவடி வைத்திருக்கும் ஆள் இல்லுமினாட்டி தலைமையிடம் தெரிவிக்க மாட்டானா?"

"அவ்வளவு சுலபமாக யாரும் இல்லுமினாட்டி தலைமையை அணுகி விட முடியாது. அந்த ஆளைப் பொருத்த வரை வாங் வேயிடம் சொன்னது இல்லுமினாட்டி தலைமையிடம் சொன்னது போலத் தான் என்பதால் நிம்மதியாக இருப்பார்."

"அந்த ரகசியச் சுவடியில் வேறென்ன தகவல்கள் எல்லாம் இருக்கின்றன?"

"அது அந்த ஆளுக்குத் தெரிய வரும் போது தான் நமக்கும் தெரிய வரும். அந்தக் காலத்தில் சில மந்திரங்கள், விசேஷ பூஜைகள் செய்து சில சுவடிகளை எந்தச் சக்திக்கும், அலைவரிசைக்கும் சிக்காதபடி மறைத்து வைப்பதுண்டு. அதைச் செய்து வைத்திருக்கிறார்கள். அந்தச் சுவடி இருக்கும் இடத்திற்குப் போய் அதை எடுத்துப் படிக்க முடியாத நிலைமையில் அந்த ஆள் இருக்கிறார். படித்தது நினைவுக்கு வந்ததைச் சொல்லி இருக்கிறார். மீதி அவருக்கும் நினைவில் இல்லை..."

"ஆனாலும் இதெல்லாம் முன்கூட்டியே தீர்மானிக்கப்படும் விஷயங்கள் என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை நண்பா. பின் நம் முயற்சிகளுக்கு என்ன அர்த்தம் இருக்கிறது? நம் திட்டங்களுக்கு என்ன பொருள் இருக்கிறது?" விஸ்வம் முன்பு விட்ட இடத்திற்கே மறுபடி வந்தான்.

ஜிப்ஸி சொன்னான். "பிரபஞ்சத்தில் சில விஷயங்கள் மட்டுமே முன்கூட்டியே தீர்மானிக்கப் படுகின்றன நண்பனே. அவற்றை மட்டுமே ஆரகிளோ, ஒரு சித்தரோ, யோகியோ சொல்ல முடியும். ஆனால் மற்ற விஷயங்களைச் சக்தி வாய்ந்த தனி மனிதர்களே தீர்மானிக்கிறார்கள். தங்கள் எண்ணங்கள், செயல்கள், திட்டங்கள் மூலம் நிகழ்காலத்திலேயே எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறார்கள். இந்த முறை உறுதியாகச் சொல்கிறேன் நண்பா. நீயும் வேறு சிலரும் தான் தீர்மானிக்கப் போகிறீர்கள். அதில் எந்தச் சந்தேகமும் உனக்கு வேண்டாம். நான் சொல்வதை நம்பு. உங்களில் யார் வெல்வீர்கள் என்பது தான் இப்போதிருக்கும் முக்கியமான கேள்வி... நீ பலவீனமாகி விட்டால் அடுத்தவர்களைத் தீர்மானிக்க நீ அனுமதிக்கிறாய் என்றாகி விடும். அதை மட்டும் அனுமதிக்காதே. மரணத்தையும் வென்றவன் நீ. அப்படிப்பட்ட உன்னால் முடியாதது எதுவும் இருக்கப் போவதில்லை..."

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, May 20, 2021

இல்லுமினாட்டி 103



சிந்துவின் தந்தையின் வாழ்க்கை முறை அவர் மனதைப் போலவே மிகவும் குறுகியது. அதில் பெரிய மாறுதல்களை அவர் விரும்பியதுமில்லை. வழக்கமான ஒரே மாதிரியான வாழ்க்கையே அவருக்குப் பாதுகாப்பானதாகவும், பிரச்சினைகள் இல்லாததாகவும் உணர்ந்ததால் அவர் கால அட்டவணை போல் ஒரே விதமான வாழ்க்கையையே விரும்பி வாழ்ந்தார்.

அவர் முதல் மனைவி போல இரண்டாவது மனைவி புத்திசாலி அல்ல என்பது அவருக்கு நிம்மதி தரும் விஷயமாக இருந்தது. அவளைப் பொருத்தவரை அவளுடைய கணவரே புத்திசாலி. அவர் சொன்னதே வேதவாக்கு. அவள் மூன்றாவது வகுப்புக்கு மேல் படிக்கவில்லை. கையெழுத்து மட்டுமே போடத் தெரியும். பத்திரிக்கைகள் எல்லாம் படிக்க மாட்டாள். எந்தச் செய்தியையும் அவள் எழுத்துக் கூட்டிப் படிப்பதற்கு நிறைய நேரம் ஆகி விடும் என்பதால் அவள் படிப்பதே இல்லை. தொலைக்காட்சியில் சில தொடர்களை விரும்பிப் பார்ப்பாள். அது ஒன்று தான் அவளுடைய ஒரே பொழுது போக்கு. கணவருக்குப் பிடிக்காது என்பதால் அவள் அக்கம் பக்கத்திலும் யாரிடமும் பேசாமலிருப்பாள். அதனால் அவளுக்கு உலகநடப்புகளும் தெரியாது. பிரச்சினைகள் இல்லாமல் அவர் வாழ்க்கை அமைதியாக போய்க் கொண்டிருந்தது.

அவர் இரண்டாவது மகள் மூத்த மகளைப் போல் படிப்பில் சிறந்து இருக்காதது மட்டும் தான் அவருக்குப் பெரிய வருத்தம். ஆனால் மற்றபடி அவளும் தாயைப் போலவே அவரை அதிமேதாவியாகவும், மிகநல்லவராகவும் மதித்து அன்பு காட்டி வந்ததால் சொந்த வீட்டில் கதாநாயகராக நிம்மதியாக வாழ்ந்து வந்தார். முதல் மனைவியுடன் வாழ்ந்த நான்கரை வருடங்கள் தான் அவர் நிம்மதியைத் தொலைத்திருந்த காலம். அவள் அவரை விடப் புத்திசாலித்தனமும், துணிச்சலும் அதிகமிருந்து அவரை மதிக்காமல் வாழ்ந்து அவருக்குத் தந்த சித்திரவதை எல்லாம் இப்போது இல்லை. புத்திசாலித்தனத்திலும், துணிச்சலிலும் அவளைப் போலவே இருந்த மூத்த மகளும் அவர் வாழ்க்கையை விட்டுப் போன பின் தொடர்ந்து நிம்மதி தான் அவர் வாழ்க்கையில்.

அவருடைய மாறாத கால அட்டவணையில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறு இரவு உணவு அவர் வீட்டுப் பக்கத்தில் இருந்த பிரபலமான ஓட்டலில் தான். அதில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக எந்த மாற்றமும் இல்லை. அங்கும் இடம் காலியிருந்தால் ஒரே சாப்பாட்டு மேசையைத் தான் தேர்ந்தெடுத்து அவர்கள் மூவரும் உட்கார்வார்கள். அந்த இடத்தில் வேறு யாராவது உட்கார்ந்திருந்தால் அதற்கு மிக அருகில் காலியாக இருக்கும் இடத்தில் அவர்கள் உட்கார்வார்கள். குறைவான உணவுகள் சாப்பிடுவதாக இருந்தாலும் நிறைய நேரம் இருந்து நிதானமாக அதை அனுபவித்துச் சாப்பிடுவார்கள். பின் திருப்தியுடன் கம்பீரமாக அவர் எழுந்து முன் நடக்க அவர்கள் பின் தொடர்வார்கள். மூத்த மகள் வீட்டில் இருந்த காலத்திலும் கூட அவளை அவர்கள் ஒரு முறை கூட அழைத்து வந்ததில்லை. அவளுக்கு இடம் கொடுத்தால் அவளும் தாயைப் போலவே மாறி விடுவாள் என்று ஆலோசித்து தான் அவள் அவருடன் இருந்த காலத்திலும் வைக்க வேண்டிய இடத்திலேயே வைத்திருந்தார்.

இன்று மாதத்தின் முதல் ஞாயிறு. மாலையிலிருந்தே அவர் மனைவியும் மகளும் பரபரப்பாக இருந்தார்கள். அவர்கள் தயாராகி அவருக்காக ஐந்து நிமிடங்கள் காத்திருந்த பிறகு அவர் மெல்ல எழுந்து தயாரானார். சென்ற வருடம் தான் அவர்கள் சின்னக் கார் ஒன்றை வாங்கியிருந்தார்கள். அந்தக் காரில் ஓட்டல் வந்து சேர்ந்தார்கள்.

ஓட்டலில் வந்து சேர்ந்த போது அவருடைய வழக்கமான சாப்பாட்டு மேசையே காலியாக இருந்ததில் அவருக்கு பரமதிருப்தி. பதினைந்து வருடங்களாக வருவதால் ஓட்டலில் சர்வர்கள் அனைவரும் அவரை நன்றாக அறிவார்கள். ஓட்டலில் சாப்பிட வருபவர்களிலும் பலருக்கு அவரை நன்றாகவே தெரியும். அவர்கள் அமர்ந்தவுடன் சர்வர் மெனுவைக் கொண்டு வந்து தந்தான். அவரே பார்த்து மூவருக்கும் ஆர்டர் செய்து வேறெதாவது வேண்டுமா என்று அவர்களிடம் கேட்க இருவரும் அவர் எதிர்பார்த்த பதிலான "அதுவே போதும்" என்று வழக்கம் போலச் சொன்னார்கள். சர்வர் நகர்ந்த பின் தான் பக்கத்து மேசையில் நான்கு பேர் வந்து அமர்ந்தார்கள்.

அதில் அமர்ந்த பெண் ஒருத்தியின் முகம் தெரிந்த முகமாக இருக்கிறதே என்று உற்றுப் பார்த்தவர் அதிர்ச்சி அடைந்தார். அது அவள் மூத்த மகள் சிந்து. ஆனால் தோற்றத்தில் தான் நிறைய மாற்றம். செல்வச்செழிப்பில் அவள் தெரிந்தாள். அதன் பின் தான் மற்றவர்களைக் கவனித்தார். அவர் மூத்த மனைவியும் அவள் காதலனான வக்கீலும். கூட இருந்த இளைஞன் அவர் அறியாதவன் என்றாலும் அவன் சாயலைப் பார்த்து அவர்களுடைய மகன் என்பதை அவரால் யூகிக்க முடிந்தது. அவர்களைத் தனியாகவும், மூத்த மகளைத் தனியாகவும் பார்த்திருந்தால் அவர் அதிர்ந்திருக்க மாட்டார். ஆனால் மூத்த மகள் அவர்களுடன் சேர்ந்து கொண்டது மட்டுமல்ல அவர்களுடன் இங்கே வந்திருந்தது அவரை ஆத்திரப்படுத்தியது.

செய்த சத்தியத்தைக் காற்றில் பறக்க விட்டு விட்டு மகளுடன் அவர் முன்னாலேயே குடும்பத்துடன் மிருதுளா வந்தமர்ந்ததை அவரால் ஜீரணிக்கவே முடியவில்லை. அவருடைய மனைவியும், சின்ன மகளும் ஓரக்கண்ணால் அவர்களைப் பார்த்தது பிடிக்கவில்லை. .உணவுக்கு ஆர்டர் செய்திரா விட்டால் உடனடியாக அங்கிருந்து கிளம்பிப் போயிருப்பார்.

அவர்கள் உடைகளும், நகைகளும் மிக வசதியாக இருக்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்தியது. சர்வர் வந்த போது அவரவருக்குப் பிடித்ததை அவர்கள் தனித்தனியாக ஆர்டர் செய்ததையும் அவர்கள் மிகவும் ஜாலியாக அவர்களுக்குள் பேசிக் கொண்டதையும் அவர் சின்ன மகள் பிரமிப்புடன் பார்த்தாள். அக்காவும் தம்பியும், அம்மாவும் மகளும், குடும்பமே சேர்ந்தும் செல்பி எடுத்துக் கொண்டார்கள்.

நால்வரும் இவரையும், மனைவி மகளையும் இருப்பதாகவே கண்டு கொள்ளவில்லை. ரகு சிந்துவைக் கேட்டார். "உன் பர்த்டேக்கு உனக்கு என்ன வேணும் சிந்து?"

"ஒன்னும் வேண்டாம் அப்பா" சிந்து அப்பாவை அழுத்திச் சொன்னாள்.

நவீன் சொன்னான். "அக்காவை என்ன கேட்கிறது. நான் சொல்றேன். அவளுக்குக் கருப்பு ப்ரெசா கார் வாங்கிக் குடுங்க"

"அவளுக்குக் காசு மாலை பத்து பவுனுக்கு வாங்கிக் கொடுங்க. கல்யாணம் ஆகப் போகிற பொண்ணு" என்றாள் மிருதுளா.

ரகு சொன்னார். "ரெண்டுமே வாங்கிக் குடுத்தா போச்சு"

பக்கத்து மேசையில் இருந்து இதையெல்லாம் கேட்பது அவருக்குக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல இருந்தது. அவர் சின்ன மகள் வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருப்பது அவருக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. அருகில் இருக்கும் மனைவியைப் பார்த்தார். அவள் இப்போது ஓரக்கண்ணால் பார்ப்பதை விட்டு நேராகவே மிருதுளாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மிருதுளாவின் பட்டுச் சேலையையும் உடலில் இருந்த நகைகளையும், அவள் கம்பீரமாக கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்ததையும் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தலையசைத்த போதெல்லாம் அவள் காதுகளில் இருந்த வைரத் தோடுகளின் ஜொலிப்பு அவர்கள் மீதும் அடிக்கடி விழுந்தது. பக்கத்து மேசை மனிதர்களின் பகட்டில் அவர் தன் வழக்கமான கம்பீரத்தையும், பெருமையையும் இழந்து கொண்டிருப்பது அவருக்குச் சகிக்க முடியாததாக இருந்தது.

நல்ல வேளையாகப் பக்கத்து மேசை ஆட்கள் வேகமாகச் சாப்பிட்டுக் கைகழுவப் போனார்கள். அவர் நிம்மதி அடைந்தார். இவர்கள் வழக்கம் போல மெல்லச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். வழக்கம் போல மனைவியும் மகளும் அடிக்கடி அவரைப் பெருமையுடன் பார்க்காமல் இருந்தது அவரை வேதனைப்படுத்தியது.

கை கழுவி விட்டு வந்தவர்கள் நிதானமாக அவருடைய மேசையருகே நடந்து வந்தார்கள். அவர் அருகே வந்தவுடன் மிருதுளா தன் பலங்கொண்ட வரைக்கும் கையை ஓங்கி அவர் கன்னத்தில் அறைந்தாள். அவர் இதைச் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. நாற்காலியோடு சேர்ந்து ஒரு சுற்று ஆடி எப்படியோ விழாமல் மேசையைப் பிடித்துச் சமாளித்தார்.

"பொறுக்கி ராஸ்கல்" என்று மிருதுளா மனதில் சேர்த்து வைத்திருந்த வெறுப்பனைத்தையும் சேர்த்து அவரைப் பார்த்துக் கத்தி விட்டுக் கோபமாக நடக்க ஆரம்பித்தாள். மற்ற மூவரும் கூட அவரைக் கேவலமாகப் பார்த்தபடியே சென்றார்கள்.

ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், கல்லாவில் இருந்தவர், சர்வர்கள் அனைவரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். யாருக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவர்கள் நான்கு பேரும் வெளியேறிய பின் ஒரு ஆள் இன்னொரு ஆளிடம் கேட்டார். "என்ன ஆச்சு?"

அந்த ஆள் சொன்னது சிந்துவின் தந்தை காதில் விழுந்தது. "இந்த ஆள் ஏதோ சில்மிஷம் பண்ணியிருப்பான் போலிருக்கு. அதான் அந்தம்மா அறைஞ்சு திட்டிட்டு போயிருக்கு"

"சே இத்தனைக்கும் குடும்பத்தோட வேற வந்திருக்கான். வயசும் ஆயிருக்கு" என்று மற்ற ஆள் சொன்னார்.

உண்மை தாய்க்கும் மகளுக்கும் தெரிந்து விட்டது, இரண்டு பேரும் தன் தந்திரத்தையும் மீறிச் சேர்ந்து விட்டார்கள், இப்போது செல்வச்செழிப்போடு சந்தோஷமாகவும் இருக்கிறார்கள் என்ற ஆத்திரத்துடன் இந்த அடியும், பேச்சும் அவமானமாகச் சேர்ந்ததை அவரால் சகிக்க முடியவில்லை. வீங்கிய கன்னத்துடன் வேகமாக எழுந்து கைகழுவிக் கொண்டு அவர் குனிந்த தலையுடன் வெளியேற அவர் மனைவியும் மகளும் பின் தொடர்ந்தார்கள்.

அவர்கள் மாதத்தில் முதல் ஞாயிறு அங்கு வருவது அன்றோடு நின்று போனது.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, May 27, 2021

இல்லுமினாட்டி 104



விஸ்வத்துக்கு அந்த சர்ச்சின் பாதாள அறையே மிகவும் பிடித்தமான இடமாக இருந்தது. இருட்டாக இருந்தாலும் அங்கேயே அவன் அதிக காலத்தைக் கழித்தான். சில சமயங்களில் தியானத்தில் இருப்பான். சில சமயங்களில் எதிர்காலத்தைத் திட்டமிட்டபடி அமர்ந்திருப்பான். சில சமயங்களில் வேறுபல சிந்தனைகளில் இருப்பான். ஆனால் அவன் அமர்ந்திருப்பது மட்டும் கதேயின் கவிதை எழுதப்பட்டிருக்கும் சுவரைப் பார்த்தபடி தான் இருக்கும். டார்ச் விளக்கு போட்டால் ஒழிய எதுவுமே அங்கே பார்க்க முடியாது என்றாலும் கதேயின் அந்தக் கவிதையின் கடைசி வரிகள் மானசீகமாய் அவன் மனதில் ஒளிரும்.

But heard are the voices - Heard are the Sages,
The Worlds and the Ages; "Choose well; your choice is

"Brief and yet endless; "Here eyes do regard you
"In eternity's stillness; "Here is all fullness,
"Ye have to reward you, "Work, and despair not."

(ஆனால் குரல்கள் கேட்கப்படுகின்றன -

கேட்டது முனிவர்களும், உலகங்களும், யுகங்களும் தான்.

"நன்றாகத் தேர்ந்தெடு; உன் தேர்வு

"சுருக்கமானது என்றாலும் முடிவில்லாதது;

"இங்கே கண்கள் உன்னைக் கணக்கிடுவது

"நித்தியத்தின் பேரமைதியில்: இங்கேயே முழுமை,

"நீ உனக்கே வெகுமதி அளிக்க வேண்டும்,

"வேலை செய், விரக்தியடையாதே.")

சுமார் இருநூறு வருடங்களுக்கும் முன் எழுதப்பட்ட கவிதையாக ஏனோ அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்காகவே அந்தக் கவிஞன் எழுதிய கவிதை வரிகளாகவே விஸ்வத்துக்குத் தோன்றியது. மேற்போக்காகப் பார்க்கையில் எளிமையாகத் தோன்றினாலும் அவன் மனம் சோர்வு அடைந்த போதெல்லாம் அந்த வரிகளே அவனுக்கு உற்சாகமூட்டின.

அக்கவிதை அவன் விதியைத் தேர்ந்தெடுக்கச் சொல்கிறது. முடிவெடுப்பது சுருக்க காலமானாலும் விளைவுகளோ நித்தியமானது. அதனாலேயே நித்தியத்தின் கண்கள் அவன் என்ன முடிவெடுக்கின்றான் என்று கவனித்துக் கொண்டிருக்கின்றன. அவன் அவனையே கௌரவித்துக் கொள்ள வேண்டும். என்ன செய்ய வேண்டுமோ அதைத் தவறாமல் செய்ய வேண்டும். தடைகள் வரலாம், விளைவுகள் புலப்படக் கால தாமதமாகலாம். அவன் விரக்தியடையக் கூடாது என்று அவனுக்கு அறிவுரை சொல்வதாகவே அந்தக் கவிதையைக் கண்டான்.

அவனுக்குத் தோன்றியது தவறல்ல என்பதை இல்லுமினாட்டியின் ஆரகிளும் சொல்லியிருப்பதாக ஜிப்ஸியும் சொல்கிறான், எல்லாம் முடிவெடுக்கப்படும் இடம் இது தானாம். அது தெரிந்து தான் ஜிப்ஸி இங்கே அழைத்து வந்திருக்கிறானா, இல்லை ரகசியமாய் ஒளிந்து கொள்ளும் வசதி இங்கே இருக்கிறது என்ற காரணம் மட்டும் தானா என்று விஸ்வத்துக்குத் தெரியவில்லை. ஜிப்ஸியை அவன் கேட்கவில்லை....

ஜிப்ஸியை நினைக்கையில் அவன் பல விதங்களில் புதிராகவே இருப்பது போல் விஸ்வத்துக்குத் தோன்றியது. அவன் பல சமயங்களில் எங்கே போகிறான், எப்படிப் போகிறான் என்பதும் விஸ்வத்துக்கு மர்மமாகவே இருந்தது. ஆனாலும் விஸ்வம் அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள முற்படவில்லை. ஒன்றை மட்டும் விஸ்வம் உறுதியாக நம்பினான். அவன் நண்பன் தான். எதிரியல்ல....

எதிரி என்ற வார்த்தையோடு அவன் மனதில் க்ரிஷ் நினைவுக்கு வந்தான். க்ரிஷும் ஜெர்மனிக்கு வரப் போகிறான் என்றும் அவனும் அவர்களுடன் சேர்ந்து ஏதோ தீர்மானிக்கப் போகிறான் என்றும் வாங் வே கடிதம் எழுதியிருந்ததும் நினைவுக்கு வந்தது. விஸ்வம் முடிவெடுக்கும் போதெல்லாம் க்ரிஷும் எங்கிருந்தாவது வந்து சேர்ந்து விடுகிறான். விதி இருவரையும் எப்படியோ பிணைத்து வைத்திருப்பதாய்த் தோன்றியது. ஒருவர் வாழ்க்கையில் இன்னொருவர் குறுக்கிடாமல் இருக்க முடிவதில்லை.

எல்லாமே ஒரு தீர்க்கமான முடிவை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாய் விஸ்வத்துக்குத் தோன்றியது. வாங் வேயின் கடிதம் அதற்கு ஒரு அறிகுறி. இல்லுமினாட்டியின் தலைமைக்குழு உறுப்பினரான வாங் வே எந்த அளவுக்கு அவனுக்கு உதவுவார், உதவ முடியும் என்று தெரியவில்லை என்றாலும் அவர் மூலமாக இல்லுமினாட்டியில் கண்டிப்பாக கால் பதிக்கலாம் என்றும், அப்படிக் கால் பதிக்க முடிந்தால் தலைமைப்பதவியையே பிடித்து விடலாம் என்றும் அவனுக்கு நம்பிக்கை வந்திருக்கிறது.

இப்போதைக்கு க்ரிஷை விடத் தொந்தரவான எதிரி அவனுக்கு எர்னெஸ்டோ தான். இந்த உடலில் சேர்ந்து கொண்ட போது அவன் நோக்கம் அவரைக் கொல்வதாக இருக்கவில்லை. ஆனால் இல்லுமினாட்டியின் உளவுத்துறை அனுமானித்தது போல அவனுக்கு இப்போது அவரைக் கொல்வது மிக முக்கியமானதாகி விட்டது. அவர் தலைமைப்பதவியில் உட்கார்ந்து கொண்டு பெரிய தடையாக இருக்கிறார். அவரை அங்கிருந்து நீக்கினால் ஒழிய அவனுடைய மற்ற திட்டங்கள் எதையும் அவனால் நிறைவேற்ற முடியாது.

பழைய விஸ்வமாக இருந்திருந்தால் அவனுக்கு அவர் கதையை முடிப்பது பெரிய விஷயமல்ல. எப்படிப்பட்ட பாதுகாப்பில் இருந்தாலும் அவனால் அவரைக் கொன்று விட முடியும். இப்போது இந்தப் பாழாய்ப் போன போதை உடம்பில் தேவையான அளவு சக்திகளைச் சேமிக்க ஆரம்பித்திருந்தாலும் அவரைக் கொல்வது சற்று சிரமம் தான். போதாததற்கு எல்லாரும் அமானுஷ்யன் என்று அடைமொழியில் அழைக்கப்படும் அக்ஷயும் அவரைப் பாதுகாக்க வந்து சேர்ந்திருக்கிறான்.

எர்னெஸ்டோவை நெருங்குவதென்றால் அக்ஷய் பற்றியும் முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவனுடைய புகைப்படங்கள் விஸ்வத்திடம் இருக்கின்றன. ம்யூனிக் விமான நிலையத்தில் ஜிப்ஸி எடுத்த அந்தப் புகைப்படங்களில் நேராக அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். பயமில்லாத கூர்மையான தெளிந்த பார்வை ஆள் சாதாரணமானவனல்ல என்று காட்டுகின்றது. முழுவதுமாகத் தெரிந்து கொள்ள விஸ்வம் தன் சக்திகளைப் பயன்படுத்தினால் போதும். ஆனால் இவனைப் போன்ற கூடுதல் சக்தி படைத்தவர்களை அறிந்து கொள்ள விஸ்வம் அதிக சக்தி பிரயோகிக்க வேண்டி வரும். அக்ஷயை அறிய சக்திகளைச் செலவு செய்து விட்டால் எர்னெஸ்டோவைக் கொல்லவும், மற்ற வேலைகளுக்கும் சக்திகள் போதாது என்பதால் விஸ்வம் அதைத் தவிர்த்தான். ஜிப்ஸி அக்ஷயின் திறமைகளைப் பற்றிச் சொல்லியிருந்தான். அதனால் அதே போதும்....

க்ரிஷைப் பற்றி விஸ்வம் பெரிதாகக் கவலைப்படவில்லை. அவனை எப்போது வேண்டுமானாலும் இந்தியா அனுப்பி விடலாம். இன்னேரம் சிந்து அவனுடைய வீட்டில் ஒரு ஆளாகக் கண்டிப்பாக மாறியிருப்பாள். உதயிடம் அவன் பிரயோகித்த சக்தியும், சிந்து உபயோகித்த யுக்தியும் சேர்ந்து அவள் மேல் உதய் காதல் வசப்பட்டிருப்பான். அதனால் சிந்துவிடம் எப்போது வேண்டுமானாலும் ஆக வேண்டிய சில வேலைகளைச் செய்யச் சொல்லலாம். குடும்பத்தினருக்கு ஆபத்து என்றால் க்ரிஷ் இங்கே இருக்க மாட்டான். போய் விடுவான். அதனால் அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை... .

விஸ்வத்தின் மனம் மெல்லத் தெளிவடைய ஆரம்பித்தது. அமைதியாக மேலே வந்தான். ஜிப்ஸி சர்ச்சின் ஜன்னல் அருகே உட்கார்ந்திருந்தான். அவனிடம் விஸ்வம் சொன்னான். "நண்பா. எனக்கு எழுத ஒரு காகிதமும், பேனாவும் வேண்டும்.."

அவன் கேட்பான் என்று முன்கூட்டியே எதிர்பார்த்துத் தயாராக இரண்டையும் ஜிப்ஸி வைத்திருந்தான், இரண்டையும் விஸ்வத்திடம் நீட்டினான். விஸ்வம் அங்கிருந்த மரநாற்காலியில் காகிதத்தை வைத்து கீழே அமர்ந்து வாங் வேக்குக் கடிதம் எழுத ஆரம்பித்தான்.

"அன்பு நண்பரே!

தலைமை ஏற்க எனக்கு அழைப்பு விடுத்துத் தாங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது. அதற்கு உங்களால் ஆன உதவிகளையும் செய்வதாய்ச் சொல்லி இருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

தலைமை நாற்காலி தற்போது காலியாக இல்லை என்பது தாங்கள் அறிந்தது தான். நாற்காலி காலியானால் ஒழிய அதில் அமர வழியில்லை. எனவே அதற்கான முயற்சியும் எடுக்க வேண்டியிருக்கிறது. அதே போல், அப்படிக் காலி செய்து நாற்காலியில் அமரும் போது இயக்கத்தில் ஏற்படும் சலசலப்புகளைச் சமாளிக்கவும் வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு பணிகளுக்கும் உங்களிடம் எதிர்பார்க்கும் உதவிகளை நீங்கள் செய்ய முடிந்தால் மட்டுமே உங்கள் கடிதத்திற்கும், அழைப்பிற்கும் ஒரு பொருள் இருப்பதாக நான் நினைக்கிறேன்.

அதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்று நன்றாக யோசித்து முடிவு எடுக்க வேண்டுகிறேன். அப்படி இல்லாமல் மதில் மேல் பூனையாக இருந்து கொண்டு கடைசியில் வெல்லும் பக்கம் சாய்ந்து கொள்ளலாம் என்ற எண்ணம் தங்கள் மனதில் இருக்குமானால் இந்த உதவி சமாச்சாரத்தைத் தாங்கள் தாராளமாக மறந்து விடலாம். நானும் தங்கள் கடிதத்தை மறந்து விடுகிறேன். தாங்கள் சிந்தித்து உறுதியாக உதவ முன்வருவதானால் நாம் மேற்கொண்டு ஆக வேண்டியதை நேரில் சந்தித்தே பேச வேண்டியிருக்கிறது.

பதிலைத் தாங்களும் 24 மணி நேரத்திற்குள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

தங்கள்
நண்பன்"

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, June 3, 2021

இல்லுமினாட்டி 105



சாலமன் மறுநாள் அந்த சர்ச்சுக்கு வரும் போதும் மிகுந்த படபடப்புடன் தான் வந்தார். முதல் நாளே எதுவும் ஆபத்து நேரவில்லை என்பதால் மறுநாள் பயப்பட வேண்டியதில்லை என்று அறிவு சொன்னாலும் விஸ்வமும் அவனுடைய ரகசியக் கூட்டாளியும் சாலமனையும் நிறையவே பயமுறுத்தினார்கள். எந்த அனுமானத்திற்கும் சரியாகச் சிக்காதவர்களைப் பார்த்துப் பயப்படாமல் இருப்பதல்லவா முட்டாள்தனம்?

சர்ச்சை நோக்கி நடந்து வருகையில் நேற்று போல எதுவும் பிரச்னைகள் இல்லை. அவர் கடிதம் வைத்த ஜன்னலில் அதே போல இன்னொரு காகிதம் மடித்து வைக்கப்பட்டிருந்தது. காற்றில் பறந்து விடாதபடி ஒரு சிறிய கல்லும் மேலே வைக்கப்பட்டிருந்தது. அமைதியாக எடுத்துக் கொண்டு திரும்பும் போது அவரையே யாரோ கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு அவருக்கு இருந்தது. ஆனால் அவர் திரும்பிப் பார்க்கவில்லை.

அவர் காரில் ஏறக் கதவைத் திறந்த போது அவர்களுடைய உளவுத்துறை ஆட்கள் இரண்டு பேர் ஒரு பைக்கில் எதிரே வந்து கொண்டிருந்தார்கள். சாலமனின் இதயத்துடிப்பு சில வினாடிகள் நின்று பின் வேகமாகத் தொடர்ந்தது. அவர்களை இயல்பாகச் சந்திப்பதைத் தவிர வேறு வழியில்லை. சாலமன் அவர்களைப் பார்த்துக் கையசைத்தார்.

இருவரும் பைக்கை நிறுத்தி அவருக்கு சல்யூட் அடித்தார்கள்.

சாலமன் கேட்டார். “நீங்கள் என்ன இந்தப் பக்கம்?”

“தலைவர் பார்த்த இடங்களையே இன்னொரு முறை நன்றாகச் சோதித்துப் பார்த்து விட்டு ரிப்போர்ட் அனுப்பச் சொல்லி இருக்கிறார். அந்த லிஸ்டில் இந்த சர்ச்சும் இருக்கிறது. போன தடவை நம் ஆட்கள் வேறிரண்டு பேர் இதைப் பார்த்து விட்டுப் போயிருக்கிறார்கள். இரண்டாம் முறை சோதனைக்கு எங்களுக்குக் கிடைத்த இடங்களில் இதுவும் ஒன்று. நீங்கள் சார்?”

சாலமன் சமாளித்துக் கொண்டு புன்னகையோடு சொன்னார். “விஸ்வத்தைக் கண்டுபிடிக்க நானாகச் சில இடங்களைத் தேர்ந்தெடுத்துப் பார்த்து வருகிறேன். அப்படி வந்தது தான் இங்கே. இங்கு முழுவதும் தேடிப் பார்த்து விட்டேன். இந்த இடத்தில் விஸ்வம் இல்லை...”

அவர்கள் இருவரும் நாம் என்ன செய்வது என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் சென்று மறுபரிசோதனை செய்வதை சாலமன் விரும்பவில்லை. மறுபரிசோதனை எப்போதுமே மிகவும் தீவிரமானதாக இருக்கும். இந்த இரண்டு பேரும் திறமையானவர்கள்.... சாலமன் சொன்னார். “நீங்கள் பரிசோதனை செய்து விட்டதாகக் குறித்துக் கொள்ளலாம். ஏனென்றால் நானும் இப்போது தான் பார்த்து விட்டு வருகிறேன்...”

உபதலைவரே சொன்னதற்குப் பிறகு பார்க்க ஒன்றும் இல்லை என்று முடிவு செய்தவர்கள் கையிலிருந்த தாள்களில் பார்த்தாகி விட்டது என்று குறித்துக் கொள்ள சாலமன் அவர்களிடம் கையசைத்து விட்டுக் காரில் ஏறிக் கிளம்பினார். அவர்களும் கிளம்பிப் போனார்கள்.

அவர்கள் போன பின் கூட அவர் மனம் நிம்மதியாக இல்லை. அவர்கள் பார்வையில் இந்த இடத்தில் தென்பட்டதை அவர் விரும்பவில்லை. அவர்கள் இம்மானுவலுக்குப் பேசக் கிடைத்து, இந்த விஷயத்தை அவனிடம் சொல்லும் வாய்ப்பு ஒரு சதவீதத்திற்கும் குறைவு தான். அவர்களாக இம்மானுவலிடம் இதைச் சொல்ல வேண்டும் என்று நினைத்துத் தொடர்பு கொண்டால் ஒழிய அவர்களுக்கு இம்மானுவல் பேசக்கிடைக்க மாட்டான். இப்போதைய நிலைமையில் இம்மானுவல் பேச அனுமதி கொடுக்க வேண்டும் என்றால் விஸ்வத்தைக் கண்டுபிடித்து விட்டோம் என்று செய்தியோடு போனால் மட்டும் அது சாத்தியம்.

ஆனாலும் அந்த ஒரு சதவீதத்திற்கும் குறைவான வாய்ப்பே சாலமனைப் பயமுறுத்தியது. ஒரு பேச்சு வாக்கில் இந்த சந்திப்பை இவர்கள் உளவுத்துறை நண்பர்களிடமே சாதாரணமாகச் சொல்லலாம். அவர்களில் யாராவது அப்படியே பேச்சுவாக்கில் அவனிடம் சொன்னால் கூட இம்மானுவல் யோசிக்க ஆரம்பித்து விடுவான்.... அது ஆபத்து..... மனதில் ஒரு நெருடல் தொடர அவர் வேகமாகச் செல்ல ஆரம்பித்தார். வாங் வே விஸ்வத்தின் கடிதத்திற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பார்...

சிந்துவும் அவள் புதிய குடும்பமும் மும்பையிலிருந்து மறுநாளே டெல்லிக்குக் கிளம்பி விட்டார்கள். பலரும் பார்க்க, ஒரே அறை ஓங்கி அறைந்து ‘பொறுக்கி ராஸ்கல்’ என்று கத்தி தன் ஆத்திரம் அனைத்தையும் தீர்த்துக் கொண்ட மிருதுளா அதற்கு மேல் அந்த ஆளை நினைத்துத் தன் மனதை அசுத்தப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. அவள் அறைந்த காரணமும், அந்தத் திட்டுக்கு அர்த்தமும் அவர் ஒருவருக்கு மட்டுமே உண்மையாகப் புரியும் என்பதும், மற்றவர்கள் வேறு வேறு கற்பனைகள் செய்து கொள்வார்கள் என்பதும், இரண்டாவது மனைவி, மகள் உட்பட யாருக்கும் உண்மையைச் சொன்னால் அது அவர்களது கற்பனைகளை விடக் கேவலமாக இருக்கும் என்பதால் எதையும் வாய்விட்டுச் சொல்ல முடியாமல் அவர் தவிப்பார் என்பதும் அவளுக்குத் திருப்தி தருவதாக இருந்தது.

சிந்துவும் கூட அதோடு அந்தப் பழைய கணக்கை முடித்துக் கொள்ள விரும்பினாள். அவர் சம்பந்தப்பட்ட அந்தக் கணக்கை அப்படி முடித்துக் கொண்டாலும் மற்ற கணக்குகளையும் அப்படி முடித்துக் கொள்ள முடியாதது தான் அவளுக்கு வருத்தமாக இருந்தது. விஸ்வம் இன்னும் அவளை அழைக்கவில்லை. வழக்கமாக அவனாக மானசீகமாக அவளை அறிய முற்படும் போது ஏற்படும் உணர்வும் பின் வரவில்லை. ஆனால் எந்த நேரமும் வரலாம்...

உதய் மட்டும் தினமும் காலை அரை மணி நேரம், இரவு அரை மணி நேரம் அவளுக்குப் போன் செய்து பேசினான். வழக்கம் போல் காதல் வார்த்தைகளாகப் பேசினான். அது முன்பு சலித்தது போல் இப்போது அவளுக்குச் சலிக்கவில்லை. அதைக் கொஞ்சம் அவள் விரும்பவும் செய்தாள். அவனுடன் எடுத்துக் கொண்ட சில புகைப்படங்களை அலைபேசியில் பார்த்து அதில் அவனை ரசிக்கவும் செய்தாள். முந்தைய அருவறுப்பு இப்போது இல்லை. அம்மாவோடு காதலைச் சேர்த்து வைத்து வெறுத்த அவளுக்கு அம்மா மீது இருந்த வெறுப்பு விலகியதோடு காதலும் இனிக்க ஆரம்பித்தது. ஆனால் இந்த எண்ணத்தை வளர்த்தக்கூடாது என்று எண்ணிக் கொண்டாள். அவள் மனதை ஆக்கிரமித்தால் விஸ்வம் இதையும் சேர்ந்து உணர்ந்து கொள்வான். பின் என்ன செய்வான் என்பது நிச்சயமில்லை.

சிந்து தினமும், காலையிலும் இரவிலும் யாருடனோ நீண்ட நேரம் பேசுவதில் மிருதுளா சந்தேகம் வந்து தனியாக இருக்கையில் மகளிடம் விசாரித்தாள். சிந்து மெல்ல உதய் தன்னைக் காதலிப்பதைச் சொன்னாள். உதய் ஒரு எம்.பி என்பதும், முதலமைச்சரின் மகன் என்பதும் கேள்விப்பட்ட மிருதுளா ஆச்சரியப்பட்டாலும் அதற்குப் பெரிய முக்கியத்துவம் தராமல் அவன் ஆள் எப்படி, குடும்பம் எப்படி என்று விசாரித்தாள். இரண்டிலுமே சிந்துவுக்குக் குறை சொல்ல ஒன்றுமிருக்கவில்லை.

“நீயும் அவனைக் காதலிக்கறியா சிந்து?” மிருதுளா கேட்டாள்.

“எனக்கு ஆரம்பத்துல அவர் கிட்ட பெரிய ஈர்ப்பு இருக்கலை”

“இப்போ?”

“எனக்குச் சொல்லத் தெரியலைம்மா”

ஆனால் மிருதுளாவுக்கு அந்தப் பதிலைப் படிக்கத் தெரிந்தது. “அப்படின்னா நாங்க வந்து அவங்க கிட்ட பேசட்டுமா சிந்து” என்று அவள் ஆர்வத்துடன் கேட்டாள்.

சிந்து தயக்கத்துடன் சொன்னாள். “நான் சின்ன வயசாயிருக்கறப்பவே நீ இறந்துட்டாய்னு அவங்க கிட்ட சொல்லியிருக்கேன்மா...”

மிருதுளா முகம் வாடினாலும் அவளுக்கு மகளைப் புரிந்து கொள்ள முடிந்தது. சிந்து சொன்னாள். “நான் திரும்பிப் போனதுக்கப்பறம் அவங்க கிட்ட நேரில் எல்லா உண்மையையும் சொல்றேம்மா. அப்பறம் மற்றதை யோசிக்கலாம்...” ஆனால் மனதில் மட்டும் சிந்து ஒரு வாக்கியத்தைச் சேர்த்துக் கொண்டாள். ‘நான் உயிரோடு இருந்தால்...’

மகள் மனதிற்குள் சொன்ன வார்த்தைகளை அறியாத மிருதுளா நிம்மதி அடைந்தாள்.

அன்று நள்ளிரவில் வெளிநாட்டு அழைப்பு ஒன்று சிந்துவின் அலைபேசிக்கு வந்தது. சிந்து கைநடுங்க அலைபேசியை எடுத்துப் பேசினாள். “ஹலோ”

விஸ்வத்தின் புதிய குரல் கேட்டது. “எல்லாம் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது சிந்து?”

அவன் அவள் மனதை ஆக்கிரமிக்காமல் போன் செய்தது அவளுக்கு தற்காலிக நிம்மதியைத் தந்தது. “திட்டமிட்டபடியே போய்க் கொண்டிருக்கிறது. உதயும் அவன் அம்மாவும் என் மேல் உயிராய் இருக்கிறார்கள்....”

“க்ரிஷ்?”

“அவன் மட்டும் என்னைக் கொஞ்சம் சந்தேகத்துடன் பார்க்கிற மாதிரி தோன்றுகிறது. ஆனால் அவன் எனக்கு எதிராக வீட்டாரிடம் எதுவும் சொல்லவில்லை”

“நல்லது. அவனைப் பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை. அவன் வெளிநாட்டுக்குப் போய்விடுவான். நீ தயாராக இரு. ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் நீ என்ன செய்ய வேண்டுமென்பதை நான் உனக்குத் தெரிவிக்கிறேன்...”

சிந்து அன்று உறக்கத்தைத் தொலைத்தாள்.

(தொடரும்)

என்.கணேசன்

Thursday, June 10, 2021

இல்லுமினாட்டி 106



க்ரிஷ் மறுபடியும் ம்யூனிக் போக வேண்டியிருக்கிறது என்றும் விஸ்வம் பற்றிய தகவல்கள் சில கிடைத்திருப்பதால் அங்கு வரச் சொல்லி இருக்கிறார்கள் என்றும் உதயிடம் சொன்ன போது அவன் பயப்பட்டான். போய்த் தானாக வேண்டுமா, இங்கிருந்தே எதுவும் சொல்லிக் கொள்ள முடியாதா என்றெல்லாம் கேட்டான். சென்ற முறை போன போதிருந்த அளவுக்குக் கூடப் பயமில்லை, பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாகச் செய்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லி "இதுவே கடைசி, இனி போக வேண்டியிருக்காது" என்று சொல்லி க்ரிஷ் அனுமதி வாங்கினான்.

"எப்போது திரும்பி வருவாய்?" உதய் கேட்டான்.

"தெரியவில்லை. சில நாட்களாகலாம். நான் போன் பண்ணிச் சொல்றேன். இங்கே நீங்க ரொம்ப ஜாக்கிரதையாயிருக்கணும். அவன் எங்கே இருந்தாலும் அவன் ஆட்களை எல்லா இடங்களுக்கும் அனுப்ப முடிந்த வசதியில் தான் இருக்கிறான். அதனால வீட்டுலயும் வெளியேயும் எல்லாருமே ரொம்ப ஜாக்கிரதையாய் இருக்கணும்" க்ரிஷ் கடைசி வாக்கியத்தை அழுத்திச் சொன்னான்.

"சரி நான் சிந்து கிட்ட கூடச் சொல்லிடறேன். நீ ஹரிணி கிட்ட சொல்லி இருக்கிறாயல்லவா?"

க்ரிஷ் தலையசைத்தான். இவனிடம் அவன் சிந்துவே அபாயம் என்று எப்படிச் சொல்லுவான்? அவள் போன பிறகு "நன்றி" என்று ஒரே ஒரு குறுந்தகவல் மட்டும் க்ரிஷுக்கு அனுப்பி இருந்தாள். அவளுக்கு அவன் வெளிப்படையாக அறிவுரை சொன்னதற்கு நன்றியா, அவள் தாயின் விலாசம், போன் நம்பர் அனுப்பி வைத்ததற்கு நன்றியா, அங்கே போனதால் அவள் மனபாரம் ஏதாவது வகையில் குறைந்ததற்கு நன்றியா என்று அவனுக்குத் தெரியவில்லை.

"சிந்து என்ன சொல்கிறாள்? அவளிடம் ஏதாவது மாற்றம் தெரிகிறதா?" என்று க்ரிஷ் கேட்டான்.

இங்கிருந்து மனநிலை சரியில்லாமல் வருத்தத்துடன் சிந்து வேகமாகப் போயிருந்ததால் அதற்குப் பின் அவளிடம் மாற்றம் தெரிகிறதா, அவள் முன்பு போல் மாறி விட்டாளா என்று தம்பி கேட்பதாக உதய் நினைத்தான். அதற்குப் பிறகு க்ரிஷ் நேரடியாகச் சென்று சிந்துவைப் பார்த்துப் பேசியதும், மிரட்டி அவளை வெளியூர் அனுப்பி வைத்ததையும் அவன் அறிந்திருக்கவில்லை.

அவன் சொன்னான். "இப்போது அவள் சந்தோஷமாய் பழையபடி மாறிவிட்டாள். சில சமயம் அவள் பேசும் போது காதல் கூடியிருக்கிற மாதிரி எனக்குத் தோணுது. பிரிவும் இடைவெளியும் ஒருவிதத்தில் காதலுக்கு நல்லது தான் போலிருக்கிறது. அது காதலை அதிகப்படுத்துகிறது...."

சொல்லி விட்டு கனவுப் பார்வையோடு வெட்டவெளியைப் பார்க்கும் சகோதரனை க்ரிஷ் இரக்கத்தோடு பார்த்தான். இவன் சொல்வதும் இவன் கற்பனை தானா இல்லை அவளிடம் உண்மையாகவே ஏதாவது மாற்றம் இருக்கிறதா என்று தெரியவில்லை.

அன்றிரவு தியானத்தின் போது இப்போதைய பயணம் மிக முக்கியமானது, எல்லாவற்றையும் தீர்மானிக்கக்கூடியது என்ற எண்ணம் க்ரிஷ் மனதில் மேலோங்கி நின்றது. ஆனால் முடிவு என்னவாகும் என்ற உண்மை வெளிப்படவில்லை. ஆபத்து வரலாம் என்று மட்டும் உள்ளுணர்வு எச்சரித்தது. மறுபடியும் விஸ்வத்தை அவன் நேரில் காண நேரிடுமோ?

மறு நாள் காலை பத்து மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பினால் தான் பன்னிரண்டரை மணி விமானத்திற்குச் சரியாக இருக்கும். காலையில் நான்கு மணிக்கே எழுந்து மாஸ்டரை மனதில் வணங்கி விட்டு அவர் சொல்லித் தந்த பயிற்சிகளைச் செய்தான். எச்சரிக்கையாக இருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். ஆனால் விளைவுகள் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று எதிர்காலத்திற்கு யாரும் கட்டளை இட முடியாது.... எல்லாம் இறைவன் விட்ட வழி... வீடும், நாடும், உலகமும் என்றுமே தனியொருவனின் பொறுப்பாகி விட முடியாது.... என்று தத்துவார்த்தமாக அவனுக்குத் தோன்றியது.

கிளம்பும் போது தாயிடம் சொன்னான். "நான் முக்கியமான வேலையா போறேன். எல்லாம் நல்லபடியா முடியணும்னு ஆசிர்வாதம் பண்ணும்மா"

பத்மாவதி ஒரு நிமிடம் கண்களை மூடிப் பிரார்த்தித்து விட்டு "கடவுள் அருளால எல்லாம் நல்ல படியா முடியும் போயிட்டு வாடா." என்று சொல்லி விட்டு திருநீற்று டப்பாவில் இருந்து திருநீறு எடுத்து இளையமகன் நெற்றியில் வைத்து விட்டாள்.

உதய் க்ரிஷின் பின்னால் இருந்து கேட்டான். "அதெப்படி அவ்வளவு உறுதியாய் சொல்றே?" உதய்க்கு தம்பி போவது சிறிய கலக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. சென்ற முறை இருந்ததை விட இந்த முறை கலக்கம் அதிகமாய் இருந்தது. காரணம் புரியவில்லை. அந்தக் கலக்கத்தைப் போக்க, தாய் வாயைக் கிளறினான்.

பத்மாவதி மூத்த மகனுக்கு விளக்கினாள். "கடவுள்னால முடியாதது என்னடா இருக்கு. இந்த உலகம் மாதிரி எத்தனையோ கோடி உலகம் இருக்குன்னு சொல்றாங்க. அத்தனையையும் பார்த்துக்கற பகவான் நம்ம சின்ன விஷயங்களைப் பார்த்துக்க மாட்டாரா. அவர் அருளால முடியாதது என்னடா இருக்கு?"

அவளுக்கு எட்டாத தூரத்தில் நின்று கொண்டு உதய் சொன்னான். "அப்படின்னா ஒரு பத்து ரூபாயை வேண்டி வரவழைச்சுக் குடு பார்க்கலாம்"

பத்மாவதி சளைக்கவில்லை. "இந்த மாதிரி நீ கேட்பேன்னு முதல்லயே அம்மா கிட்ட கடவுள் நிறைய குடுத்து வச்சிருக்காருடா. இந்தாப்பிடி என்று பர்ஸைத் திறந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து உதயிடம் நீட்ட க்ரிஷுக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. உதயும் சிரித்துக் கொண்டே அந்த நோட்டை வாங்கினான். "கிழவி கை ராசியான கை தான். வாங்கினா இன்னும் நிறைய வரும்" என்று தம்பியிடம் முணுமுணுத்தான்.

"என்னடா முணுமுணுப்பு?" என்று பத்மாவதி கேட்க "ஒன்னுமில்லைம்மா. அம்மா ரொம்ப நல்லவங்கன்னு சொன்னேன்" என்று உதய் பதில் அளித்தான்.

சிரித்தபடியே க்ரிஷ் கிளம்பினான். மனதில் அவனும் கடவுளைப் பிரார்த்தித்தான். 'கடவுளே அம்மாவோட நம்பிக்கையையும், வீட்டின் இந்த சந்தோஷத்தையும் தயவு செய்து பிடுங்கி விடாதே."

வாங் வே தன் நண்பர் அகிடோ அரிமாவை வரவழைத்திருந்தார். அவருக்கு மனம் விட்டுத் தன் சிந்தனைகளையும், திட்டங்களைச் சொல்ல அந்த நண்பர் தேவையாக இருந்தது. ஏனென்றால் மிக முக்கியமான கட்டம் இது. அவர் இல்லுமினாட்டிக்கு எதிராக ரகசியமாக இயங்கப் போகிறார். திட்டங்களில் எதாவது குறை இருந்தால் அகிடோ அரிமா அதைக் கண்டிப்பாகச் சுட்டிக்காட்டுவார். திட்ட அளவிலேயே எதாவது திருத்தங்கள் செய்து கொள்வதானால் அது மிக நல்லது. இதில் சின்னத் தவறு நேர்ந்தாலும் திருத்திக் கொள்ள அவகாசம் எல்லாம் கிடையாது. மரணம் தான் நிச்சயம். அகிடோ அரிமாவே இதற்கு முன் சுட்டிக் காட்டியது போல எர்னெஸ்டோவும் விஸ்வமும் இருவருமே வேறு வேறு விதத்தில் சக்தி வாய்ந்தவர்கள். அவர்களுக்கிடையில் அவர் காய்கள் நகர்த்துவது மிக ஆபத்தான காரியம் தான். ஆனால் அவருக்கு வேறு வழி இல்லை. இப்போது அவர் எதுவும் செய்யா விட்டால் பின் எதுவும் செய்ய வழியில்லை. இப்போதிருக்கிற நிலைமையில் தான் கடைசி வரை அவர் இருக்க நேர்ந்து விடும். இந்தத் தேக்க நிலைமை அவருக்குச் சலித்து விட்டது.

அகிடோ அரிமாவிடம் வாங் வே இது வரை நடந்ததை எல்லாம் மனம் விட்டுச் சொன்னார். கர்னீலியஸின் ரகசிய ஆவணத்தில் இதுவரை தெரிந்ததில் ஆரம்பித்து அவர் விஸ்வத்துக்கு எழுதிய கடிதம் மற்றும் இப்போது விஸ்வம் அவருக்கு எழுதிய கடிதம் வரை எல்லாவற்றையும் சொன்னார்.

அகிடோ அரிமாவுக்கு இப்போதும் வாங் வே மிக அபாயமான ஒரு ஆட்டத்தில் இறங்குவது போலவே தோன்றியது. ஆனால் அவர் என்ன சொன்னாலும் பின்வாங்கப் போவதில்லை என்பதும் புரிந்தது. ஆனாலும் அவர் எச்சரிக்கையுடன் வாங் வேயிடம் சொன்னார். "கர்னீலியஸ் அந்த ரகசிய ஆவணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று முழுவதுமாகச் சொன்ன பிறகு அதற்கேற்ற மாதிரி தீர்மானிப்பது தானே நல்லது"

"அந்த ஆள் அதை முழுவதுமாக எப்போது கண்டுபிடிப்பார் என்று காத்திருப்பது? எத்தனை நாட்கள், வாரங்கள் ஆகுமோ தெரியவில்லை. அதற்குள் எல்லாம் இங்கே முடிந்து போய் விடும் போல் இருக்கிறதே! ஏதோ ஒரு பக்கம் நான் சேர்ந்தாக வேண்டும். இப்போதிருக்கும் பக்கத்தில் இருந்தால் இப்படியே தான் தொடர வேண்டும். விஸ்வத்தின் பக்கம் போனால் உபதலைவராகவாவது நான் ஆகி விடலாம்.... இன்னொரு சாத்தியமும் இருக்கிறது..."

அகிடோ அரிமா நண்பரைப் பார்த்துப் புன்னகைகத்தார். அந்த இன்னொரு சாத்தியக்கூறு இவர் இல்லுமினாட்டியின் தலைவராக ஆவதாக இருக்கக்கூடும் என்று அவர் யூகித்தார். அது எப்படி என்று அறியும் ஆவலில் "அது என்ன?" என்று கேட்டார்.

(தொடரும்)

என்.கணேசன்